விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 21 ஞாயிற்றுக்கிழமை (06.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 230

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
தபால்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9257)

## வடக்கு அமைச்சரவையை மாற்ற

# முதலமைச்சருக்கு முழு உரித்து உண்டு

### சம்பந்தன் - விக்னேஸ்வரன் முன்பாக பங்காளிக் கட்சிகள் கூட்டு இணக்கம்

(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை விடயத்தில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனக்கு இருக்கும் சட்டரீதியான தற்துணிபு அதிகாரங்களைப் பிரயோகித்து அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்தவோ திருத்தியமைப்பதற்கோ முழு உரித்துடையவர் என்பதை ஏற்றுள்ள த.தே.கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் இதற்கான தமது சம்மதத்தை த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முன்பாக கூட்டாக வெளிப்படுத்தியுள்ளனர். (04ஆம் பக்கம் பார்க்க)

## சீனக்கப்பல் இலங்கையில்

(கொழும்பு)
சீன இராணுவத்திற்கு சொந்தமான நடமாடும் வைத்திய சாலையென வர்ணிக்கப்படும் ஆர்க் பீஸ் கப்பல் இன்று கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்படுகிறது. சமாதானம், அபிவிருத்தி, ஒத்துழைப்பு, சகலருக் 15☛

## இந்திய குடியரசு துணைத் தலைவர்; நாயுடு வெற்றி



(புதுடெல்லி)
நேற்று நடைபெற்ற இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் ஆளும் 15☛

## ஒரே நாளில் மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்த அரசு தீர்மானம்

### வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது

(கொழும்பு)
நாட்டிலுள்ள அனைத்து மாகாண சபைகளின் தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்தும் வகையில் உத்தேச அரசியல் யாப்பு 20-ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் தேர்தல் திருத்த சட்ட மூலம் தொடர்பான அரசு வர்த்தமானி (Gazettte) அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அரசியல்யாப்பு 20-ஆவது 15☛

## இளைஞர்கள் 8 பேர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ். குருநகர் ஆடி பகுதியில் பொலிஸாருடன் தகராற்றில் ஈடுபட்ட 8 பேர் நேற்றையதினம் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக் 15☛

### அரசியல் கைதிகளை விடுதலை செய்

## நாளை மறுதினம் வடக்கில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)
இலங்கை சிறைச்சாலைகளில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்தி நாளை மறுதினம் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வடக்கில் பாரிய கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது. அத்துடன் 15☛

## துன்னாலை குடத்தனைப் பகுதியில் அதிரடிப்படையினர் சுற்றிவளைப்பு

# வீடு வீடாக தேடுதல்; பதற்றம்
# 5 ஹன்டர்; 9 மோ.சைக்கிள்; மூவர் கைது



(கரணவாய்)
துன்னாலை குடவத்தைப் பகுதியில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து சுற்றிவளைப்பு மேற்கொண்டனர்.
இத் தேடுதல் நடவடிக்கையின் போது மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன் அனுமதிப்பத்திரங்கள் இன்றி காணப்பட்ட ஐந்து ஹன்டர்களும், ஒன்பது மோட்டார் சைக் 15☛

## காட்டில் மரம் வெட்டியோரால் வனவள அலுவலர் மீதும் வெட்டு

### பிடிக்கச்சென்றவேளை தாக்குதல்

(முட்கொம்பன்)
கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவிலுள்ள முட்கொம்பன் செக்காலை காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டியவர்களை பிடிக்கச்சென்ற வனவள அலுவலரை மரம் அரியும் இயந்திரத்தினால் வெட்டியதுடன் ஏனைய அலுவலர்களையும் தாக்கிவிட்டு மரங்கள் வெட்டியவர்கள் தப்பிச் சென் 16☛

## இறுதி யுத்தத்தில் இடம் பெற்ற குற்றங்களை மறைத்தோம்

### அவமானமென மேஜர் ஜெனரல் கமல் கருத்து



(குவைத்)
இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற குற்றங்களை நிவர்த்தி செய்வதற்காக இராணுவத்தினால் எடுக்கப்பட்ட முயற்சிகள் நினைவுக்கு வரும் போது அவமானமாக உண 15☛

புதிய சேவை அறிமுகம்
பொதிகள் சேவை
Door to Door Service
அவுஸ்திரேலியா
Rs 800/-
லண்டன்
Rs 600/-
(C-9263)
ParcelLk
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2224338 / 021 4925024
இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200



கருணைக்கடல் அனலையம்பதி ஐயனாரே சரணம்!
அனலையம்பதி ஐயனார் ஆலயத்தில் இன்று (06.08.2017)
ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவம்
அந்தப் பதியில் கண்ணனும் நீ! கணபதியும் நீ! கந்தனும் நீயே!
எங்கள் காவல் தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே!
அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியுமாகிய எண்ணியதைத் திண்ணமுறச் செய்திடும்
என்றுமுள்ள பரம்பொருள் இனியவன் கருணைக் கடல் மணிகண்டன்
ஆரோகணித்து நிகரில்லாத சிற்பவேலைப்பாடுகள் அமைந்த ராஜத தேரில் ஏறி
நாதஸ்வர தவில் கலைஞர்கள் மங்கல வாத்தியங்கள் இசைக்க
அடியார்கள் போடும் சரணகோஷம் விண்ணெங்கும் எதிரொலிக்க,
அவர்கள் பக்திப்பிரவாகத்தில் மிதந்துவந்து நிகரில்லா அருள்மழை பொழியும்
கண்கொள்ளா கவின்மிகு காட்சியைக் காண எத்தனை கண்கள் இருந்தாலும் அத்தனை கண்களும்
போதாது! அனைவரும் வருக! அவனருள் பெறுக!
"பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்! அவன் கருணையுள்ள நெஞ்சினிலே கோயில்கொள்கிறான்"
ஆக்கம் : கலாநிதி லயன் ... தேசோதய தலைவர் (காரை மணிகண்டன்)
(040)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை உயர்வினை பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.சிவகுமாரன் பத்மசிறி

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் பொருளாளரும் எமது குழந்தைகளது பேரன்புக்குரியவருமான திரு.சி.பத்மசிறி அவர்கள் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் தனது ஆரம்பக் கல்வி தொட்டு உயர்தரம் வரை சிறப்பாகக் கற்றுத் தேர்ந்து அரச சேவைதனில் 1992ல் கால்பதித்து மிகவும் நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் பல தரப்பட்ட நிர்வாகப் பணிகளிலும் பல பதவிகளைப் பெற்று கடமைதனை செவ்வனே மக்களுக்காக ஆற்றி உயர்தரத்துடன் இறுதி யுத்த காலகட்டத்திலும் மிகவும் உற்சாகத்துடனும் நலன்புரி நிலையங்களிலும் சேவையாற்றி இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மிக உயர்ந்த பரீட்சையில் சித்தி பெற்று இன்று காணி உரித்து நிர்வாகத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளராக பதவி உயர்வினைப் பெற்று அரச சேவைதனை மக்களுக்காக ஆற்றிவரும் பெருமகன் **திரு.சிவகுமாரன் பத்மசிறி** அவர்களை எமது இல்ல குடும்பம் சார்பிலும் நிர்வாகம் சார்பிலும் வாழ்த்தி மகிழ்வதோடு மேலும் மேலும் தனது சேவையால் உயர்ந்திட இறையாசியினையும் வேண்டி நிற்கின்றோம்.

**- மகாதேவா சுவாமிகள்**
**சிறுவர் இல்ல குடும்பம்**

(ரி-9266)

# மோ.சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியாசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா பத்மநாதன் (வயது-68) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த முதலாம் திகதி இணுவில் பிள்ளையார் கோவிலுக்கு அருகே வீதியை கடக்க முற்பட்ட வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து சுன்னாகம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் சாரதியை சுன்னாகம் பொலிஸார் கைது செய்து விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

மரணம் தொடர்பான விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

**காணி விற்பனைக்கு**

**ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டில் 3 பரப்பு 7.55 குளி கொண்ட காணி உடன் விற்பனைக்கு உண்டு.** (045)

**தொடர்பு**
**076 702 3565**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## உடனடி வேலைவாய்ப்பு

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

- **அலுவலகச் செய்தியாளர்கள்** (உள்ளகம் வெளியகம், இருபாலாரும்)
- **கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு** (இருபாலாரும்)
- **பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்** (சிங்களம் கட்டாயம் தெரிந்திருத்தல் வேண்டும்) (பெண்)

**தகைமை**

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வசிப்பது மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.

தகைமையும் ஆர்வமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நாளை (07.08.2017) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள

**வலம்புரி**

அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

-பொது முகாமையாளர்

# மரண அறிவித்தல்



## தாமோதரம்பிள்ளை மாணிக்கவாசகர்

*பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தாமோதரம்பிள்ளை மாணிக்கவாசகர் நேற்று (05.08.2017) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மதியானந்தவல்லி மற்றும் மரகதவல்லி ஆகியோரின் அன்புக் கணவரும், செல்வமணிதேவி (யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை), கிருபாகரன் (சோடாக் கம்பனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.** (050)

**தகவல்:**
**நண்பர்கள்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## உரோகினி குருசாமி

திதி: சதுர்த்தசி - 06.08.2017



அன்பு தந்த எங்கள் அன்னையே
உமைப் பிரிந்து ஆண்டொன்று
மாண்டதம்மா
ஆறாத் துயருடனே நித்தம்
அழுகின்றோம்
உமை உருக்கி எமை தந்த
தெய்வமே
ஈராறு திங்கள் இருட்டாய்
போனதம்மா
நீராறு கண்களில் நித்தம்
விடுதம்மா
பூத்த புதுமலராய் மலர்ந்த
உம் வதனம்
நித்தம் எம் இதயப் பூங்காவில் நினைவாய்
மலருதம்மா என்றும் நிலைக்குதம்மா
ஆத்மா சாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

தோற்றம்: 23.11.1942 - மறைவு: 17.08.2016

**கும்பளாவளை,**
**அளவெட்டி.** [027]

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தைப் பாதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுங்கள்

## சிறிதரன் எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்



முன்னாள் போராளிகள் வாழ்வில் தொடர்ந்து நெருக்கடிகளை ஏற்படுத்துகின்ற போது அவர்களுடைய சிந்தனை, செயற்பாடுகளில் விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்படும் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்நிலைமை நல்லாட்சி அரசுக்கும் அதன் நல்லிணக்கம் நோக்கிய பயணத்திற்கும் பேராபத்தை ஏற்படுத்திவிடும் எனவும் அஞ்சுகின்றேன் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அண்மைக்காலமாக வடமாகாணத்தில் நடைபெற்று வருகின்ற அமைதியற்ற சூழலை உருவாக்கக் கூடிய பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து தங்களின் உயர்வான கவனத்திற்கு கொண்டுவர இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

நல்லாட்சி அரசு மீது நாமும் எமது மக்களும் கொண்டிருந்த அதிக நம்பிக்கையின் காரணமாகவே நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை தாங்கள் அறிவீர்கள். எமது மக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மனிதாபிமான கரிசனைக்குரிய விடயங்கள் எவையும் மக்கள் திருப்தியடையும் வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அரசாங்கம் நன்கறியும்.

அரசாங்கத்தின் தொடர்ச்சியான தமிழ் மக்கள் மீதான மெத்தனப் போக்கு அதன் மீது எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை விரைந்து பலமிழக்கச்செய்கின்றது என்பதை சமகால கள நிலவரங்கள் பிரதிபலிக்கின்றன.

விசேடமாக வடக்கு- கிழக்கில் நடைபெறுகின்ற வன்முறைச்சம்பவங்களின் பின்னால் புணர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலிஉறுப்பினர்கள் இருப்பதான தோற்றம் பிரமாண்டமான முறையில் வெளிக் காட்டப்படுகின்றது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மீதான துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத்தாக்குதலின் பின்னால் புலி உறுப்பினர்கள் இருப்பதாகத் தெரிவிக்கும் பொலிஸார் அவர்கள் அவ்வாறு செயற்பட்டிருந்தால் அவர்களைப் பின்னால் இருந்து இயக்கும் சக்திகள் யார் என்பதை இனம் காட்டத் தவறி வருகின்றனர்.

இந்நிலைமை ஏனைய முன்னாள் போராளிகளுக்கிடையே அச்சத்தை உருவாக்கி அவர்களுக்கு நிம்மதியற்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்கி வருகின்றது.

2009ஆம்ஆண்டில்இறுதி யுத்தம் நிறைவுபெற்றபோது பன்னாட்டுச் சமூகங்களின் பரிந்துரையின் பேரில் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த அனைத்துப் போராளிகளுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

புனர்வாழ்வு என்பது விடுதலைப்புலிகள் புரிந்ததாக அரசாங்கம் கருதிய குற்றங்களுக்கு ஒட்டுமொத்த தண்டனையாகவே வழங்கப்பட்டது என்பதைத் தாங்களும் நன்கறிவீர்கள், ஆனால் கடந்த வாரம் வவு னியா உயர்நீதிமன்றத்தில் தனி நபரான நாகரட்ணம் ஜெயபாலன் என்பவர் முன்னாள் போராளியான கணேச சுந்தரம் கண்ணதாஸ் (கண்ணதாசன்) என்பவர் முன்னாள் விடுதலைப்புலி அமைப்பில் இருந்தபோது அவர் செய்த செயல் ஒன்றிற்காக வழக்கு தொடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இது நீதித்துறைக் கட்டமைப்பிற்கு உட்பட்டவகையில் பொருத்தமாக இருந்தாலும் முப்பது (30) வருட கால போரை நிறைவுக்கு கொண்டு வந்து அறுபது (60) வருட கால இன முரண்பாட்டை தீர்க்க முயற்சிக்கும் நல்லாட்சி அரசின் தத்துவங்களுக்கு பொருத்தமானது அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்று நிற்கின்ற போது அதன் தலைமைத்துவக் கட்டளைகளை நிறைவேற்றியவர்களே போராளிகள். அவ்வாறான செயல்களுக்கு அவர்களுக்கு தண்டனையும் கொடுத்து புனர்வாழ்வும் அளித்துவிட்டு அதே குற்றங்களுக்காக மீண்டும் தனிநபர் வழக்குகளை ஏற்றுக்கொள்ள முனைந்தால் பாரதூரமான சமூக விளைவுகள் ஏற்படும் என்பதுடன் தொடர்ந்து முன்னாள் போராளிகள் வாழ்வில் நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றபோது அவர்களுடைய சிந்தனை, செயற்பாடுகளில் விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்படும் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்நிலைமை நல்லாட்சி அரசுக்கும் அதன் நல்லிணக்கம் நோக்கிய பயணத்திற்கும் பேராபத்தை ஏற்படுத்திவிடும் எனவும் அஞ்சுகின்றேன்.

ஜனாதிபதி அவர்களே! மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களின் பாரதூர தன்மைகளைச் சரிவர விளங்கிக் கொண்டு முன்னாள் அரசியல்துறைப் போராளி கண்ணதாசனுக்கு அவர் ஏற்கனவே பெற்றுக்கொண்ட தண்டனை, புனர்வாழ்வு என்பவற்றுடன் அவரது கல்வித்தகைமை மற்றும் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றுதல், அவரது நல்லொழுக்கம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு தங்களின் கருணை மிகு பொது மன்னிப்பை அவர்களுக்கு வழங்குவதுடன் அண்மைக்கால குற்றச்செயல்களுடன் முன்னாள் போராளிகளை தொடர்புபடுத்தும் பின்னணிச் சக்திகள் பற்றியும் கண்டறிந்து நீண்ட காலங்களாகவே துன்பங்களைச் சந்தித்து வரும் போராளிகளின் வாழ்வு, அமைதியான எதிர்காலம் ஒன்றை நோக்கி பயணிப்பதற்கு விரைவானதும் பொருத்தமானதுமான ஓர் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என தனது கடிதத்தில் சிறிதரன் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தினுடைய 13 ஆவது சர்வதேச மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக் காலை ஆரம்பமாகின. (படங்கள்:-உ.சாளின்)

# வடக்கில் பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களின் சேவைகள் இம்மாத இறுதிக்குள் முடிவுறுத்தப்படும்

## ஆணையாளர் விஸ்வரூபன் அறிவிப்பு

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைப் பதிவ செய்வதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் நிர்வகிப்பதற்கும் அத்தகைய சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் உறைவிடமளிக்கப்பட்ட சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலும் அத்துடன் தொடர்புபட்ட ஏற்பாடுகளுக்குமாக 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வடக்கு மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் பதிவு சட்டம் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் அமுலுக்கு கொடுவரப்பட்டுள்ளது.

இதன் பின்னர் 1941 ஆம் ஆண்டு 22ஆம் இலக்க அநாதைகள் இல்ல கட்டளைச் சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்யப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து சிறுவர் அபிவிருத்திநிலையங்களுக்குமான பதிவுகள் இரத்துச் செய்யப்படுகின்றது. எனவே இந்த நிலையங்கள் அனைத்தும் 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்வதற்கான தேவைப்பாடுஒன்று காணப்படுகின்றது.

வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த 25.07. 2017 ஆம் திகதி சிறுவர் அபிவிருத்தி நிலையத்துடன் தொடர்புடைய வழக்கில் நியதிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படாமல்எந்தவொரு சிறுவர் இல்லங்களும் நடத்தப்பட முடியாது எனவும் அவ்வாறு செயற்படும் இல்லங்களின் சேவைகள் முடிவுறுத்தப்பட வேண்டும் எனவும் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு நீதிமன்றினால் கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத இறுதிக்குள் பதிவு செய்யப்படாமல் இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்கள் மீது திணைக்களத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண நன்னடத்தை சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் அறிவித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலமைச்சருக்கு...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் பங்காளி கட்சிகள் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றைய தினம் கோவில் வீதியில் அமைந்துள்ள முதலமைச்சரது வாசஸ்தலத்தில் மாலை 6.00 மணிமுதல் இரவு 9.20 மணிவரை நடைபெற்றிருந்தது.

இந்த சந்திப்பின் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டு முதலமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் அமைச்சரவை மாற்றத்தில் கட்சிகள் ஒரு போதும் தலையீடு செய்யாது என உறுதி மொழியும் முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையில் அண்மைக் காலங்களாக நடைபெற்ற பிரச்சினைகள் தொடர்பில் சகல கட்சி தலைவர்களுடனும் கலந்துரையாட வேண்டும் என நாங்கள் தீர்மானித்திருந்தோம். அந்த தீர்மானத்தின் பிரகாரம் கட்சி தலைவர்களும் எதிர்க்கட்சி தலைவரும் நானும் மற்றும் ஏனைய கட்சி தலைவர்களும் பேசி முடிவுக்கு வந்துள்ளோம். அதன்படி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிதலைவர்களும் முதலமைச்சராகிய நானும் தமிழ் மக்களின் நலன் கருதி பின்வரும் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளோம்.

1. முதலமைச்சர் தனக்கிருக்கும் சட்ட ரீதியான தற்துணிபு அதிகாரங்களைப் பிரயோகித்து அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்தவோ திருத்தி அமைப்பதற்கோ அங்கத்துவக் கட்சிகள் சம்மதத்தை வெளிப்படுத்துகின்றன.

2. அமைச்சர்கள் மாற்றப்பட்டால் அது குறித்த அமைச்சர் எந்தவொரு குற்றச்சாட்டையும் இழைத்ததாக அர்த்தப்படாது.

3. அமைச்சரவை நியமனங்களைப் பொறுத்தமட்டில் அங்கத்துவக் கட்சிகளின் ஆலோசனைகளையும் கருத்தில் எடுத்து அவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த தீர்மானங்களின் அடிப்படையில் தான் நாங்கள் இனிவரும் காலங்களில் செயற்பட உள்ளோம். ஆகவே கூடுமான வரையில் எங்களுக்குள்ளே இருக்கின்ற பிரச்சினைகளை தீர்த்து வடக்கு மாகாண சபைக்கு இன்னமும் ஒருவருட காலமே இருப்பதால் மக்களுக்கு நல்ல சேவையை வழங்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளோம்.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இந்த சந்திப்புக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வர மாட்டார் என கூறியிருந்தார்.



எனினும் எனது அழைப்பின் காரணமாக அவர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார். இதனை எனக்கு வழங்கப்பட்ட மதிப்பாக ஏற்றுக் கொள்கின்றேன்.

இந்த சந்திப்பு பல காலத்தின் பின்னர் அனைத்து கட்சி தலைவர்களும் ஒருமித்து கருத்துக்களை கலந்துரையாடி இருந்தோம். தொடந்தும் அரசியல் அமைப்பு தொடர்பிலும் சந்தித்து கலந்துரையாட உள்ளோம் என்றார் அவர். வடக்கு மாகாண அமைச்சரவை மாற்றிய மைக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு வழங்கப்பட்ட நிலையில்,



வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் விரைவில் மாற்றங்கள் ஏதும் நிகழுமா? என இதன்போது ஊடகவியலாளர்களால் முதலமைச்சரிடம் கேட்ட போது, மாற்றங்கள் நிகழும் அது எப்போது என கூற முடியாது. ஒட்டுமொத்த அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுமா? அல்லது இரு அமைச்சர்கள் மட்டுமா மாற்றம் செய்யப்படுவார்கள் என கேட்ட போது சிரித்து கொண்டே பதில் சொல்லாமல் சென்று விட்டார்.

இந்த சந்திப்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொது செயலாளரும் தமிழரசுக் கட்சியின் தலை வருமான மாவை.சோ.சேனாதிராசா, புளொட் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி. ஆர். எல்.எவ். இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பொது செய லாளர் சிறிகாந்தா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ -4)

## மாவை எம்.பிக்கு 'பவளவிழா'



இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் 75ஆவது பவள விழா வைபவம் இன்று யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் நடைபெறுகிறது.

தனது அரசியலலை தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஆரம்பித்து நீண்டகாலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததுடன், தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை எம்.பி தற்போது பதவி வகிக்கிறார்.

இந்நிலையில் மாவை எம்.பியுடைய 75 ஆவது பவளவிழாவை முன்னிட்டு உலக தமிழ் பண்பாட்டு இயக்கம் அவரை இன்று யாழில் கௌரவிக்கிறது. (செ-9)

## 12 வயது சிறுமி காய்ச்சலுக்கு பலி

(பரந்தன்)

நெஞ்சு நோவு, இருமலுடன் இரத்தம் மற்றும் காய்ச்சல் ஆகிய நோய் அறிகுறிகளுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 12 வயதுச் சிறுமி சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

ஸ்கந்தபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த பிரஸ்தாப சிறுமி கடந்த ஐந்து நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்ற நிலையில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இருந்த போதும் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு 8 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட பரிசோதனைகளில் இச்சிறுமிக்கு பாரதூரமான நோய் எதுவும் இருப்பதாகத் தெரியவரவில்லை என வைத்தியசாலை தரப்பு தெரிவிக்கின்ற போதிலும்,

இவரது இறப்பிற்கான காரணம் தொடர்பில் பிரேத பரிசோதனையின் பின்னரே தெளிவான முடிவுக்கு வரலாம் என தெரிவிக்கப்படுகின்றது

இதேவேளை, காய்ச்சல் முதலான நோய் அறிகுறி தென்படும் எவரும் அருகில் உள்ள அரச மருத்துவமனைக்குச் சென்று உரிய சிகிச்சையை பெற வேண்டும் என கிளிநொச்சி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-312)


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 - 08 - 1946 |  | 05 - 08 - 2017 |

### சிற்றம்பலம் மகாலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரிய ஆலோசகர் - வடமராட்சி கல்வி வலயம்)

யாழ்ப்பாணம் கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் நாவலர்மடம் கரணவாய் கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் மகாலிங்கம் கடந்த சனிக்கிழமை (05.08.2017) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - இலச்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - வேலாத்தை தம்பதியரின் அன்பு மருமகனும் மதன்ராஜ் (UK), மேனகா (UK), மேகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற K.C.மகாதேவன், பூபதி, கமலாதேவி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கம் என அன்பாக அழைக்கப்படும் சிவபாக்கியம், காலஞ்சென்ற பொன். கணேசன் (ஒய்வுநிலை வட்டார கல்வி அதிகாரி), பொன்.பாலச்சந்திரன் (ஓய்வுநிலை அதிபர்), மங்களம், சரஸ்வதி மற்றும் சிவப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பிரியங்கா (UK), ராஜ்குமார் (UK), ரிசாந்தன் (உயர்தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுஜானி, தனுஸ்கா, டனிஷ், ஜெசிக்கா, டனுஷா, டனிஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவலர் மடம்,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
தொலைபேசி: 077 398 4903

(C-9268)

தகவல்:
குடும்பத்தினர்


### தேடுதலால் பதற்றம்

## 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்றைய தினம் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 20 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் அப்பகுதிகள் எங்கும் பதற்றமான சூழல் நிலவியிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டது மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்த நிலையில் கடந்த 4 தினங்களாக தொடர்ச்சியான தீவிர சோதனை நடவடிக்கைகளும் கைதுகளும் இடம்பெற்று வருகிறது. இரவு பகலாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் துன்னாலை பகுதியில் காலை மாலையாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதும் திருநெல்வேலி மற்றும் கோண்டாவில், யாழ்ப்பாணம், கோப்பாய் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வீதி சோதனையின் போதும் 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் சில இளைஞர்கள் சந்தேகத்தின் அடிப்படையிலும் சிலர் புலனாய்வு தகவல்களின் அடிப்படையிலும் கைது செய்யப்பட்டனர்.

சிலரிடம் தம்மை அடையாளப்படுத்தக் கூடியவகையில் அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்கள் எதுவும் காணப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில்,

இவர்களை இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (செ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வுகள் கிடைக்கவில்லை

## ஜனாதிபதி மைத்திரி கவலை

விவசாய நாடு என்ற போதும் விவசாயப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடந்த காலத்தில் முன்னுரிமை அளிக்கப்படாததால் நாட்டின் விவசாய சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவலையுடன் தெரிவித்தார்.

மதவாச்சியில் "பேர்ட்டி பிரேமலால் திஸாநாயக்க" புதிய பொருளாதார மத்திய நிலையத்தை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கிராமிய விவசாய சமூகத்திற்கு நிலையான பொருளாதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் வடமத்திய மாகாண சபையினால் ரூபா 48 மில்லியன் செலவில் இந்த பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் 28 விற்பனைக் கூடங்கள் மற்றும் நிர்வாகக் கட்டடம் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது வருடங்களுக்கு மேலாக இக்கட்டடப்பணிகள் கைவிடப்பட்ட நிலையில் இருந்தன. தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு கட்டடம் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

வறுமை, குறைந்த வருமானம், நாளாந்த வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமை போன்ற விடயங்களினால் நாட்டின் விவசாய சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, விவசாயிகளது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் விவசாயத்துறைக்குத் தேவையான பல்வேறு வசதிகளை வழங்கவும் தற்போதைய அரசாங்கம் பல திட்டங்களை ஆரம்பித்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். நவீன தொழில்நுட்பத்துடன் புதிய தலைமுறை விவசாயத் துறையில் முன்னேறுவதற்குத் தேவையான சூழலை அமைத்துக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்திற்குத் தேவையாக இருப்பது சுய சக்தியில் கட்டியெழுப்பப்பட்ட வாழ்க்கைமுறையும் பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட திட்டங்களுமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாடு நாளை யாழில்

தமிழர்விடுதலைக்கூட்டணியின் தேசிய மாநாடு -2017 நாளை 7 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நீராவியடியிலுள்ள இலங்கைவேந்தன்கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என அக்கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, நிர்வாகச் செயலாளர் இரா.சங்கையா ஆகியோர் இணைந்து அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

## கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும்

# பௌர்ணமி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கரணவாய் கிழக்கு கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சி.ஜி.திருமாலழகன் தலைமையில் ஜெயச்சந்திரன் கலையரங்கில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரமத விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வுநிலை பரிசாரகரும் இலங்கை முதலுதவிச்சங்க யாழ். மாவட்ட ஆணையாளருமான பொன்னையா அருந்தவராசா, சிறப்பு விருந்தினராக யாழ். போதனாவைத்தியசாலை பரிசாரகரும் இசை நாடகக் கலைஞருமான கலைவாருதி ஏ.வி.எம்.வேலாயுதம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# யாழ்.முயற்சியாளர் விற்பனைக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் யாழ்ப்பாண மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ். முயற்சியாளர்-2017 என்னும் விற்பனைக் கண்காட்சி ஒன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11,12,13 ஆம் திகதிகளில் நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

# 36 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



பிறப்பு 04 - 04 - 1978

இறப்பு 02 - 07 - 2017

## அமரர். இரத்தினம் இரஞ்சித்குமார்

திதி 06.08.2017

மனையாள் கரம்பிடித்து பத்தாண்டுகள் வாழ்ந்தாய்
மகனவன் பாரினில் பாதந்தொட பார்க்கவில்லையே
பார்த்த விழி மூடாமல் உமை இங்கு எதிர்பார்க்க
குடும்பத்தோடு எமை இங்கு கலங்கவைத்து
காலனிடம் சென்றதேனோ,

கடந்த 02.07.2017 அன்று லண்டனில் காலமான எமது குலவிளக்கு அமரர்.இ.இரஞ்சித்குமார் அவர்களது ஆத்மசாந்தி பிரார்த்தனைகள் யாவும் லண்டனில் உள்ள அவரது இல்லத்திலும் சிறுப்பிட்டி மேற்கில் உள்ள அவரது இல்லத்திலும் நடைபெற உள்ளது. ஆத்மசாந்தி பிரார்த்தனையை தொடர்ந்து சிறுப்பிட்டி மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
கு.சிங்கராஜா குடும்பத்தினர்.

(சி-9265)

வளர்பிறை,
ஊரெழு கிழக்கு.

# இராசி பலன்

06.08.2017
(ஆடி 21, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 11.16 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 3.14 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
நல்லைக்கந்தன் மஞ்சம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவாதிரை காலை 7.51 மணிக்கு மகர-சந் | | சூரி செவ் ராகு |
| கேது சந் | | | புத |
| | சனி | | குரு |

**மேடம்:** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், திருடர் பயமுண்டு.

**கடகம்:** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு, சுப செய்தி வந்து சேரும் நாள்.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பெரிய மனிதர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**கும்பம்:** சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், இறை வழிபாட்டில் நாட்டம் செல்லும்.

**மீனம்:** உற்சாகமான நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்








(யாழ்ப்பாணம்)

மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் மயானங்கள் வேண்டாம் என்ற கோரிக்கையை முன் வைத்து புத்தூர் மேற்கு கிராம மக்கள் முன்றலில் கடந்த ஜுலை மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமான போராட்டம் நேற்று 25ஆவது நாளாகவும் தீர்வின்றித் தொடர்ந்தது.

பல அரசியல் கட்சியினரும் பல்வேறு தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களும் கலந்து கொண்டு மக்களின் அறவழிப் போராட்டத்திற்கு தமது பூரண ஆதரவை வழங்கினர்.

இதேவேளை இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க மாகாண சபையில் வலியுறுத்துகின்றோம். பாராளுமன்ற அமர்வில் பேசுகிறோம் என்று கூறி பல மகஜர்களை அரசியல்வாதிகள் வாங்கிச் சென்றுள்ளனர் எனவும் ஆனால் இதுவரை தமது போராட்டம்தொடர்பில் மாகாண சபை கூட்டத் தொடரிலோ, பாராளுமன்ற அமர்விலோ கவனம் செலுத்தவில்லை.

வெறும் வாய்வழி வாக்குறுதிகளை மட்டும் தந்து எமது விடயம் தொடர்பில் இது வரை நடவடிக்கை எடுக்காதது வேதனையளிக்கிறது என போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கலையுடன் தெரிவித்தனர்.

நியாயமான அறவழிப் போராட்டத்தின் மூலம் எமக்கான உரிய தீர்வொன்றினைப் பெற்றுத் தரும் வரை போராட்டம் தொடரும் என்று மக்கள் உறுதியுடன் தெரிவித்தனர். (இ-10)

## ஊர்காவற்றுறை பிரதேச சபையால் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு

உள்ளூராட்சி மன்றங்களால் நான்காண்டுக்கொரு முறை தயாரிக்கப்படுகின்ற மக்களால் மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை வாக்களிப்பு முறை மூலம் இனங்காணும் மக்கள் பங்கேற்பு அபிவிருத்திதிட்டம் (2018 - 2021) ஆண்டுக்காக ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் தனது ஆளுகைக்குட்பட்ட ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு பிரதேசங்களில் மக்கள் பங்கேற்பு கூட்டங்களை நடத்தி தயாரிக்கப்படவுள்ளது.

இதன் ஒரு அங்கமாக 09.08.2017ஆம் திகதி புதன் கிழமை ஜே/59 (சுருவில்) கிராம சேவையாளர் பிரிவைச்சேர்ந்த பொதுமக்களுக்கு முற்பகல் 10 மணிக்கு ஐயனார் சனசமூக நிலைய மண்டபத்திலும் ஜே/58 (நாரந்தனை தெற்கு) கிராம சேவையாளர் பிரிவைச்சேர்ந்த பொதுமக்களுக்கு மாலை 4 மணிக்கு சூரியாவத்தை பொது மண்டபத்திலும் 10.08.2017 ஆம் திகதி வியாழக்கிழமை ஜே/53 (கரம்பொன் தென் கிழக்கு) கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு முற்பகல் 10 மணிக்கு பாலக்காடு பொது மண்டபத்திலும் ஜே/52 (கரம்பொன் கிழக்கு) கிராம சேவையாளர் பிரிவைச்சேர்ந்த பொதுமக்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு பொது மண்ட பத்திலும் (ஊர்காவற்றுறை சமுர்த்தி வங்கி அருகில்), 11.08.2017ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜே/55(நாரந்தனைவடக்கு) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு முற்பகல் 10 மணிக்கு நாரந்தனை வடக்கு கல்வி நிலையத்திலும் ஜே/49 (ஊர்காவற்றுறை) கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் மக்கள் பங்கேற்பு திட்டம் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

எனவே குறித்த கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்கள் அதிகளவில் பங்குபற்றி தமது அபிவிருத்தி தேவைகளுக்கு அதிகளவான வாக்குகளை செலுத்தி தமது தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் திட்டத்தை சிறப்புற நிறைவேற்ற பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் பிரதேசசபை சமூகம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-7)

## முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஈவினை மத்தி கற்பக விநாயகர் சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் ஈவினை மத்தி கற்பக விநாயகர் முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா இன்று 6ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் நிலைய முன்றலில் சனசமூக நிலையத்தின் தலைவர் இ.அரிகரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உ.தவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபாநாதன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் தெற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.மலர்மகள், ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் சோ.ஸ்ரீ கிருஸ்ணா, ஈவினை கிராம அலுவலர் ப.பிரதீபன், ஈவினை பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அ.ஜஸ்மின், யாழ்.வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் திருமதி தவக்குமார் சத்தியபாமா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக லண்டன் வாழ் கிராம ஆர்வலர்களான சூரியகுமார், நகுலா கணேஸ் சிவரதி தம்பதியர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-78)




## நற்கருணை ஆராதனை

இளவாலை மாசர்கூடல் கயித்தார் ஆலய வருடாந்த திருவிழாவில் இன்று மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு செபமாலை வழிபாடும் பங்குத்தந்தை அருள் பணி பீ.பிறையன் அடிகளார் தலைமையில் திருவிழாத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கயித்தார் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (இ-10-104)

## வெண்கரம் படிப்பகத்தின் ஆரம்பமும் பெயர்ப்பலகை திரை நீக்கமும் இன்று

பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தின் ஆரம்பமும் பெயர்ப்பலகை திரை நீக்கமும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வெண்கரம் செயற்பாட்டாளர் மு.கோமகன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக டென்மார்க் நாடாளுமன்ற உறுப்பினர் டிரோல்ஸ் ரவின்ஸ், சிறப்பு விருந்தினர்களாக டென்மார்க் உயர் நீதிமன்ற சட்ட ஆலோசகர் தர்மகுலசிங்கம் தருமன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் மற்றும் வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.சந்திரமௌலி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-102)





பாஷையூர் புனித அந்தோனியார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 2ஆம் திகதி பாஷையூர் சென்.பீற்றர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றபோது...







கீரிமலை வலித்தூண்டல் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் 207 ஆவது ஆண்டு விழா அண்மையில் பாடசாலை அதிபர் யோ.ஸ்ரெனிஸ்லஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-இளவாலை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுமுறை தினங்களிலும் பிணைமுறி ஆணைக்குழுவின் விசாரணை தொடரும்

(கொழும்பு) இலங்கை மத்திய வங்கியின்பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழு இந்த மாதத்தின் விடுமுறை தினங்களிலும் தொடர்ந்து இயங்குமென ஆணைக் குழுவின் தலைவரும் உயர் நீதிமன்ற நீதியரசருமான கே.டி. சித்திரசிறி அறிவித்துள்ளார்.

பேர்பெச்சுவல் ட்ரெஷரிஸ் நிறுவனத்தின் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் பர்னாந்து அந்த நிறுவனத்துக்கு எதிரான சாட்சியங்களின் மீதான குறுக்கு விசாரணைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவிருப்பதால் அது அவ்வாரம் முழுவதும் நீடிக்கக் கூடும் எனவும், அதனால் ஆணைக்குழு ஒரு சிறிய விடுமுறைக்குப்பின் விசாரணைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

அவரது வேண்டுகோளை நிராகரித்த ஆணைக்குழுத் தலைவர் இந்த விசாரணைக்கு முக்கியத்துவம் கொடுத்து அடுத்த வாரம் நீதிபதிகள் பயிற்சித் திட்டமொன்றுக்குத் தான் பயிற்சியாளராக நேபாள நாட்டுக்குச் செல்லவிருந்த நிலையில் அந்த விஜயத்தையும் இரத்துச் செய்திருப்பதால் ஆணைக்குழுவின் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்தார்.

அத்துடன், ஆணைக்குழுவின் மற்றொரு உறுப்பினரான உயர் நீதிமன்ற நீதியரசர் பிரசன்ன ஜயவர்த்தன இந்த விசாரணைகளை இயன்றவரை விரைவாக முடிப்பதில் தாங்கள் அக்கறை கொண்டிருப்பதாகவும், அது முடிந்ததும் தங்களது உயர் நீதிமன்றப் பணிகளில் ஈடுபட வேண்டியிருப்பதால் விடுமுறை எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவித்தார். (இ-7)


உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**அகில இலங்கைத் திருமுறை மன்றம்**

திருவாவடுதுறை ஆதீன கொழும்பு இணுவில் திருமுறை சைவசித்தாந்த பயிற்சி மையங்களின் அனுசரணையுடன் நடாத்தும்



**திருமுறைப் பெருவிழா**

காலம்:
ஏவிளம்பி ஆடி 22ஆம் நாள்
2017.08.07 திங்கட்கிழமை காலை, ஆடிப்பூரணை

இடம்:
இணுவில் கந்தசுவாமி கோயில், இளந்தொண்டர் சபை மண்டபம்

முன்னிலை:
நல்லை ஆதீன குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தலைவர்
அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர்
பண்டிதர்.சிவநெறித் தேசிகர். வ.பேரின்பநாயகம் அவர்கள்

**நிகழ்ச்சிகள்**

காலை 6.00மணி அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்
காலை 8.00மணி நால்வர்க்கும் திருமுறைகளுக்கும் விசேட பூசை

சிறப்புச் சொற்பொழிவு
➤ சைவப்புலவர் செல்லையா நவநீதகுமார் M.A (திருமுறைப் பயிற்சிமைய இயக்குநர், கொழும்பு)
➤ சைவப் புலவர் ஏ.அனுசாந்தன் M.A (திருவாவடுதுறை ஆதீன பிரசாரகர்)

திருநெறிய தமிழ் இசைவாணர்களை பொற்கிழி விருது வழங்கிக் கௌரவித்தல்
கௌரவிப்புரை:
➤ கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை

மகிழ்வுரை:
➤ திரு.செ.பாலச்சந்திரன் M.A (செயலாளர் அகில இலங்கைத்திருமுறை மன்றம்)

மகேஸ்வர பூசை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-விழாக்குழு-

அனுசரணை:க.கு.க.சிவபாலன். அகில இலங்கைத் திருமுறைமன்றம், பொருளாளர்.



**யாழ். மண்ணில் முதன் முறையாக சினிமா பாடல்களுடன்**

பிரபல தென்னிந்திய பாடகர் கலைமாமணி
**உன்னிகிருஷ்ணன்**
**உத்ரா உன்னிகிருஷ்ணன்**
இணைந்து வழங்கும்
**இன்னிசை பாடிவரும்...**
மாபெரும் திரை இசை நிகழ்ச்சி

மாலை 6.00 மணிக்கு

இம் மாதம் ஆகஸ்ட் 12 இல்





நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்

டிக்கெட் கிடைக்குமிடங்கள்:
➤ பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 021 222 6693
➤ த போன் சொப், நெல்லியடி, 077 285 0285

யாழ். ஸ்ரான்லி வீதி லிங்கம் கூல்பார் முன்பாக உள்ள மைதானம் (வெலிங்டன் தியேட்டர்)

Event Management C.A.C Tel: 077 550 4910

டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=



**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளையில் டச்சு றோட்டில், அரச வைத்தியசாலை பிரதான வீதி ஆகியவற்றுக்கு அண்மையாக முப்பது (30) பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (தரகர்கள் தேவையில்லை)

தொடர்புகளுக்கு
018 0718381119, 077 3960 224



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 68 செவ் 8 இல்
உயரம்: 169cm
தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்
தொ.இ: B/6688

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 173cm
தகைமை/தொழில் :Diploma/ லண்டன் PR
தொ.இ: B/6689

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 7
உயரம்: 183cm
தகைமை/தொழில் :பட்டதாரி/ பொறியியலாளர் ஜேர்மனி குடியுரிமை
தொ.இ: B/6690

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 58 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/6691

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 36 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்
தொ.இ: G/3305

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 32 செவ் 8 இல்
உயரம்: 162cm
தகைமை/தொழில்:A/L/ வங்கியாளர்
தொ.இ: G/3314

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 15செவ் இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:கால்நடை வைத்தியர்
தொ.இ: G/3324

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 25 செவ் 1 இல்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/3334

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

சிற்றி மெடிக்கல் சென்ரர் யாழ் நொதேண் சென்றல் வைத்திய சாலையுடன் இணைந்து நடாத்தும் இலவச பொது மருத்துவ முகாம்

நாள்:-07.08.2017 திங்கட்கிழமை
நேரம்:- காலை 8 மணி முதல் மதியம் 12 மணிவரை
இடம்:-சிற்றி மெடிக்கல் சென்ரர் ஆனந்தபுரம் கிளிநொச்சி

அடிப்படை உடற்பரிசோதனைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும்

Northern Central Hospital
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263
E-mail: nchjaffna@gmail.com
Website:www.nchjaffna.com

*City Medical Center*
*AANANTHAPURAM, KILINOCHCHI*
*TEL:- 077 627 4919*

அனுசரணை: Indus Life Sciences Pvt. Ltd.

ஊடக அனுசரணை:-வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை துறைமுக விவாதத்தை வெளிநாட்டுத் தூதரகம் குழப்பியதா?

## விசாரணை நடத்த பிரதமர் உத்தரவு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு குறித்து இலங்கை நாடாளுமன்றத்தில் நடக்கவிருந்த விவாதம் குழப்பப்பட்டதன் பின்னணியில் வெளிநாட்டுத் தூதரகம் இருந்ததா? என்பது குறித்து விசாரணை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.



அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் உடன்பாட்டு வரைவு குறித்த விவாதம் கடந்த மாதம் 28ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடக்கவிருந்தது.

எனினும் கூட்டு எதிரணியினர் குழப்பம் விளைவித்ததால், விவாதம் நடத்தப்படாமல் உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகத்தில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பு ஒன்றை அடுத்தே, கூட்டு எதிரணியினர் நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவித்து உடன்பாடு குறித்து விவாதம் நடத்த முடியாத நிலையை ஏற்படுத்தியதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் தயாசிறி ஜெயசேகர கூறியிருந்தார்.

இந்த நிலையில், நாடாளுமன்ற விவாதத்தைக் குழப்பும் வகையில் வெளிநாட்டுத் தூதரகம் செயற்பட்டதா? என்பதை கண்டறியும் விசாரணைகளை நடத்த அறிக்கை சமர்ப்பிக்குமாறு, வெளிவிவகார அமைச்சிடம் பிரதமர் ரணில் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# இலங்கை பாதுகாப்புச் செயலருடன் சீனப் பாதுகாப்பு ஆலோசகர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கையிலுள்ள சீன தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சூ ஜியான்வேய் நேற்று முன்தினம் இலங்கை பாதுகாப்பு செயலர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 70 வீத உரிமையை சீன நிறுவனம் பெற்றுள்ள நிலையிலும், சீன இராணுவத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த மாத இறுதியில் கொண்டாடப்பட்ட நிலையிலும் சீன கடற்படையின் பாரிய மிதக்கும் வைத்தியசாலைக் கப்பல் கொழும்பு துறைமுகம் வரவுள்ள நிலையிலும் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (இ-7)

# லொத்தர் சபையின் மனு ஒத்திவைப்பு

அபிவிருத்தி லொத்தர் சபையை வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டுவந்தது அரசியலமைப்புக்கு முரணானது எனத் தெரிவித்து உத்தரவிடுமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்தன, சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி ஆகியோரினால் முன்வைக்கப்பட்டிருந்த மனு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30 திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மூவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபேதே நீதிபதிகள் இவ்வாறு உத்தரவிட்டனர். (இ-7)

## வாரம் ஒரு தகவல்

# கடமையில் கருத்து

இரும்பு மனிதர் என அழைக்கப்பட்டு வந்த சர்தார் வல்லபாய் படேல் கடமையை நிறைவேற்றுவதில் உறுதி கொண்டவர். எவ்வித இடையூறுகள் குறுக்கிடினும் செய்ய வேண்டியதை அவ்வப்போது செய்து விடுவார். இதற்கு அவரது வாழ்வில் எத்தனையோ நிகழ்ச்சிகள் உண்டு.

படேல் சட்டத்தரணியாக தொழில் பார்த்து வந்த காலம். நீதிமன்றத்தில் அவர் ஒரு வழக்கை நடத்திக் கொண்டிருந்தார். அந்நேரம் தந்தி சேவகன் ஒருவன் அங்கே வந்து அவரிடம் ஒரு தந்தியைக் கொடுத்தான். அதைப் பிரித்துப் படித்துவிட்டு மீண்டும் வழக்கைத் தொடர்ந்து நடத்தினார்.

படேலின் நண்பர்கள் அத் தந்தியைப் பார்த்து திகில் கொண்டார்கள். அது ஏதேனும் ஒரு துயர நிகழ்ச்சிகளை அறிவிக்கும் செய்தியாகவே இருக்க வேண்டும் என்பது அவர்கள் ஊகம். ஏனெனில் அக்காலம் பெரும்பாலும் துயரச் சம்பவங்களை அறிவிக்கவே மக்கள் தந்தியைப் பயன்படுத்தி வந்தனர்.

தந்தியைப் பிரித்து பார்த்த படேலின் முகத்தில் எவ்வித மாறுதலும் தென்படவில்லை. அவர் வழக்கை நடத்துவதிலேயே உன்னிப்பாக இருந்தார்.

வழக்கு முடிந்த பின்னர் நண்பர்கள் படேலிடம் வந்து தந்தியைப் பற்றி விசாரித்தார்கள். வைத்தியசாலையிலிருந்த தமது மனைவி காலமான செய்தியை படேல் அவர்களிடம் அறிவித்தார்.

இச் செய்தி கேட்ட நண்பர்கள் திகைப்பும் வியப்பும் கொண்டனர். தம் மனைவி இறந்த செய்தி அறிந்தும் தன் துயரத்தையெல்லாம் ஒரு பக்கம் மறைத்துக் கொண்டு மற்றவர்களுக்காக தாம் ஏற்றுக் கொண்ட பொறுப்பை நிறைவேற்றிய அக்கடமை வீரரை அவர்கள் வாயார வாழ்த்திப் போற்றினர்.

கவிஞர் தே.ப.பெருமாள்

## உமா ஓயா திட்டம்

# பிரச்சினைகள் எழுவது கவலைக்குரியதாகும்

## நோர்வே குழுவின் இடைக்கால அறிக்கையை பெற்ற பின் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

முறையான எவ்வித சாத்தியவள ஆய்வு அறிக்கையின்றியும் சூழலியல் தாக்கங்கள் குறித்த மதிப்பாய்வை மேற்கொள்ளாமலும் முன்னைய அரசாங்கம் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்தமையால் அதனை நடைமுறைப்படுத்தும் போது, தொடராக பிரச்சினைகள் எழுவது கவலைக்குரியதாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மேலும், "இத்திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே தவறுகள் இடம்பெற்றுவந்துள்ளன. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு எதிர்காலத்தில் எவ்விதப் பிரச்சினைகளும் ஏற்படாது என்ற உறுதிப்பாட்டுடனேயே இதற்குத் தீர்வை வழங்க நாம் முயற்சித்துவருகிறோம்" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உமா ஓயா திட்டம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட நோர்வே நாட்டின் நிபுணர்கள் குழுவினரது இடைக்கால அறிக்கை, நேற்று முன்தினம் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுரங்கப்பாதை யில் பாரிய நீர்க்கசிவு இடம்பெறு வதற்கான சாத்தியப்பாடுகளை ஆரம்பகட்ட ஆய்வுகள் முன் மதிப்பீடு செய்யவில்லை எனத் தெரிவித்த நிபுணர் குழு, திட் டத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் சுரங்கச் சுவர் களை பலப்படுத்தி பலமான மூலப் பொருட்களைக் கொண்டு முத்தி ரையிடுவதற்கான இயலுமையைக் கொண்டிருக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

சுரங்கச் சுவர்களில் அகழ்வுப் பணி பொருத்தமான இயந்திரங்களைக் கொண்டே மேற் கொள்ளப்படவேண்டும் என்பதுடன், இடைவெளிகளை நிரப்புவதற்காக சாந்து பூசுகின்றபோது எதிர்காலத்தில் எவ்வித நீர்க்கசிவும் இடம்பெறாது என்பதை உறுதி செய்யவேண்டும் என்றும் நிபுணர் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

சுரங்கத்தில் பாரிய அளவில் நீர் உட்புகுவதை எதிர்கொள்வதற்கு ஒப்பதந்தக்காரர்கள் தயாராக இருக்கவில்லை என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

சுரங்கத்தின் எஞ்சிய நான்கரை கிலோ மீற்றர் பகுதி பணிகளை மேற்கொள்ள முன்னர், விசேடமான சாந்து மூலப்பொருட்களையும் இயந்திரங்களையும் பெற்றுக்கொள்வது அவசியமாகும் என்று மேற்படி நிபுணர் குழு ஆலோசனை வழங்கியது.

மேலும், ஒரு சிறந்த முழுமையான ஆரம்பகட்ட ஆய்வு செய்யப்பட்டிருக்குமானால் சுரங்கத்தில் நீர் உட்புகுவதை தவிர்த்திருக்க முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதையடுத்து, நீர் கசிவை எப்படி முழுமையாக நிறுத்த முடியும் என்பது பற்றியும் முன்னைய அறிக்கைகளில் நீர்க்கசிவு கவனத்திற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் குறித்தும் ஒரு முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு, நிபுணர்களிடம் ஜனாதிபதி வேண்டிக்கொண்டார்.

இதுபோன்ற பாரிய கருத் திட்டங்கள் முறையான ஆய்வுகளின்றி மேற்கொள்ளப்படக்கூடாது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு உமா ஓயா திட்டத்தின் பிரச்சினைகள் பாடமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், மத்திய மாகாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 22 கிலோ மீற்றர் நீளமான சுரங்கப் பணிகளுக்கு நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவாலை பொலிஸாரின் அணிவகுப்பும் பொலிஸ் பரிசோதனை நிகழ்வும் கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்க பொலிஸ் அணி வகுப்பை மேற்பார்வை செய்ததோடு பொலிஸ் அணி வகுப்பையும் ஏற்றுக் கொண்டார். (படங்கள்:- இளவாலை செய்தியாளர்)

# இலங்கை இராணுவ பிரதித் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் டம்பத்

இலங்கை இராணுவத்தின் பிரதி தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார் என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இராணுவ பிரதி தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் ரேனக உடவத்த அண்மையில் ஓய்வுபெற்றதை அடுத்து, நேற்று முன்தினம் முதல் இந்தப் பதவிக்கு மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

கெமுனு வோச் படைப்பிரிவின் தலைமைக் கட்டளை அதிகாரியாகவும் உள்ள மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோ, இதற்கு முன்னர் முல்லைத்தீவு படைகளின் தலைமையக தளபதியாக பணியாற்றினார்.



இவர்1983ஆம்ஆண்டுஇலங்கை இராணுவத்தில்இணைந்து கொண்டு. 1984ஆம் ஆண்டு தொடக்கம் இரண்டாவது லெப்டினன்ட் தர அதிகாரியாக இராணுவத்தில் பணியாற்றத் தொடங்கினார்.

காலாட்படை அதிகாரியாக இவர் இரண்டு பற்றாலியன்கள், இரண்டு காலாட்படை பிரிகேட்கள், மூன்று காலாட்படை டிவிசன்களின் கட்டளை அதிகாரியாக, வடக்கு, கிழக்கு பகுதிகளில் பணியாற்றியவர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது, பிரதான இராணுவ நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றியவர்.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் நெருக்கடிகளால் இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோ, 2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், மீண்டும் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சைட்டம் குறித்த தீர்ப்புக்கு எதிரான மனு 10 ஆம் திகதிவரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

சைட்டம் மாணவர்களின் பட்டத்தை இலங்கையில் அங்கீகரிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக இலங்கை வைத்திய சபை முன்வைத்துள்ள மேன்முறையீட்டு மனுவை மேலும் விடயங்களைக் கண்டறிவதற்காக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதற்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு மூவர் கொண்ட நீதிபதிகள் குழுவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு ஒத்திவைத்துள்ளது. (இ-7)

# முகமூடி தலைக்கவச தடைச் சட்டத்துக்கு எதிரான மனு வாபஸ்

(கொழும்பு)

முழுமையாக முகத்தை மறைக்கும் தலைக்கவசத்தைப் பயன்படுத்துவதைத் தடை செய்யுமாறு பொலிஸ் திணைக்களம் கொண்டு வந்த தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருவர் முன்வைத்திருந்த எதிர்ப்பு மனு, வாபஸ் பெறப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முழுமையாக முகத்தை மறைக்கும் தலைக் கவச தடைச் சட்டத்தை கைவிட்டு. தரமான பொருத்தமான தலைக்கவச உற்பத்திக்கான பரிந்துரைகளை பொலிஸார் முன்வைத்துள்ளதால், இவ்வழக்கை வாபஸ் வாங்குவதாக மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த வேண்டுகோளின் பேரில், குறித்த வழக்கிற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பொலிஸார் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிடின் மீண்டும் அந்த தடைச் சட்டத்துக்கு எதிராக வழக்குத் தொடர முடியும் என்ற உரிமையுடன் இந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

## 08.2017 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1661 - போர்த்துக்கல்லுக்கும் டச்சுக் குடியரசுக்கும் இடையில் டச்சு பிரேசில் தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டது.
- 1806 - கடைசி புனித ரோமப் பேரரசன் இரண்டாம் பிரான்சிஸ் நெப்போலியனுடனான போரில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அப்பேரரசு முடிவுக்கு வந்தது.
- 1825 - பொலிவியா ஸ்பெயினிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜெர்மனியின் 10 கடற்படை படகுகள் பிரித்தானியப் படகுகளைத் தாக்கவென வட கடலை நோக்கிப் புறப்பட்டன.
- 1914 - முதலாம் உலகப் போர்: சேர்பியா ஜேர்மனி மீதும் ஆஸ்திரியா ரஷ்யா மீதும் போரை அறிவித்தன.
- 1930 - வீரகேசரி நாளிதழ் ஆவணிப்பட்டி பெ. பெரி. சுப்பிரமணியம் செட்டியார் என்பவரால் கொழும்பில் தொடங்கப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது அமெரிக்கா சின்னப் பையன் என்ற பெயரைக் கொண்ட அணு குண்டை வீசியது. கிட்டத்தட்ட 70,000 பொதுமக்கள் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். இதன் தாக்கத்தினால் மேலும் பல்லாயிரக் கணக்கானோர் அடுத்த சில ஆண்டுகளில் இறந்தனர்.
- 1952 - இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்கு இடம் மாறியது.
- 1960 - கியூபா புரட்சி: அமெரிக்கா கியூபா மீது பொருளாதாரத் தடை விதித்ததை அடுத்து கியூபா தனது நாட்டில் இருந்த அமெரிக்கா மற்றும் வெளிநாட்டு மூலதனங்களை நாட்டுடைமை ஆக்கியது.
- 1961 - வஸ்தோக் 2: முதன்முதலாக ஒரு முழு நாள் மனிதன் விண்வெளியில் இருந்த பெருமையை சோவியத் விண்வெளிவீரர் கேர்மொன் டிட்டொவ் பெற்றார்.
- 1962 - ஜமெய்க்கா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1964 - அமெரிக்காவில் நெவாடா மாநிலத்தில் உலகின் மிகப் பழமையான மரமாகக் கருதப்பட்ட 4900 ஆண்டு பழமையான புரொமேத்தியஸ் என்ற மரம் வெட்டப்பட்டது.
- 1990 - இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி என்னும் இடத்தில் பெண்கள், முதியவர்கள் உட்பட 47 தமிழர்கள் இராணுவம் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1991 - உலகளாவிய வலை (WWW) தொடர்பான தனது ஆவணங்களை டிம் பேர்னேர்ஸ்-லீ வெளியிட்டார்.
- 1996 - செவ்வாயில் இருந்து தோன்றியதாகக் கருதப்படும் ஏ.எல்.எச் 84001 என்ற விண்கல் ஆரம்பகால உயிரினங்கள் பற்றிய தகவலைக் கொண்டிருப்பதாக நாசா அறிவித்தது.
- 1997 - வட கொரிய போயிங் விமானம் ஒன்று குவாமில் வீழ்ந்ததில் 228 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - தமிழ்நாடு ஏர்வாடியில் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த 11 பேர் பெண்கள் உட்பட 28 மன நோயாளிகள் தீ விபத்தில் கொல்லப்பட்டனர்.
- 2006 - திருகோணமலையில் நோயாளரை ஏற்றி வந்த ஆம்பியூலன்ஸ் வண்டி எறிகணைத் தாக்குதலுக்குள்ளானதில் ஒரு நோயாளி கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1809 - ஆல்பிரட் டென்னிசன், ஆங்கிலேயக் கவிஞர் (இ. 1892)

### இறப்புகள்

- 2009 - முரளி, மலையாள நடிகர் (பி. 1954)
- 2011 - பே டெல் முண்டோ. பிலிப்பீனிய மருத்துவர் (பி. 1911)

### சிறப்பு நாள்

- பொலீவியா - விடுதலை நாள் (1825)
- ஜமேக்கா - விடுதலை நாள் (1962)
- ஜப்பான் - டோரோ நாகாஷி - ஹிரோஷிமா அணுகுண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் நினைவு நாள்.


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 150 | 70 | 80 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 300 | 350 | 400 | 300 | 400 |
| தக்காளி | 160 | 160 | 120 | 160 | 160 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 70 | 70 |
| கோவா | 120 | 160 | 70 | 150 | 120 | 120 | 150 |
| கரட் | 180 | 250 | 200 | 240 | 200 | 200 | 200 |
| பூசணி | 50 | 100 | 50 | 60 | 60 | 100 | 100 |
| புடோல் | 80 | 120 | 50 | 80 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 100 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 150 | 150 | 140 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 120 | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 170 | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 70 | 100 | 120 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 50 | 130 | 160 | 120 | 120 |
| பயற்றங்காய் | 160 | 120 | 120 | 150 | 160 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 120 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 35 | 60 | 60 | 80 | 50 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 200 | 160 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 70 | 120 | 80 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 80 | 200 | 120 | 180 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 50 | 80 | 80 | 80 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 40 | 25 | 40 |
| தேசிக்காய் | 80 | 20 | 50 | 80 | 120 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 75 | 50-70 | 60 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | - | 300 | 300 | - | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 240 | 140 | 150 | 160 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 80 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 25 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 15 | 20 |
| [illegible] | 100 | 60 | 50 | 100 | 80 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## (27.07.2017 முதல் 13.02.2019 வரை)



மூலம், பூராடம், உத்தராடம், 1 ஆம் பாதம் வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: யே, யோ, ப, பி, பு, பூ, பா, ன, டே, பே உள்ள வர்களுக்கும்)

நிகழ்காலத்தை விட எதிர்காலத்திலேயே குறிக்கோளாக இருக்கும் தனுசு இராசி நேயர்களே!

உங்களுக்கு இந்த இராகு-கேது பெயர்ச்சி அஷ்டமத்திலும், 2ஆம் இடத்திலுமாக அமைகின்றது. இதுவரை 9ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு, ஜுலை 27ஆம் திகதி முதல் 8ஆம் இடத்திற்கு வருகிறார். அதே நேரத்தில் 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது வாக்கு, தனம், குடும்பம் என்பதை அறிந்து கொள்ளும் இடமான 2ஆம் இடத்திற்கு வருகின்றார்.

பொதுவாக கடகத்தில் சஞ்சரிக்கும் இராகு ராஜயோகத்தைக் கொடுக்கும் என்பதாலும், செப்டெம்பர் 2ஆம் திகதி பெயர்ச்சியாகப் போகும் குரு உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானமான 11ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போவதோடு, அங்கிருந்து 3, 5, 7 ஆகிய இடங்களைப் புனிதப்படுத்தப் போவதாலும் இந்த இராகு-கேது பெயர்ச்சியை யோகம் தரும் பெயர்ச்சியாகவே கருதலாம்.

அஷ்டமத்தில் இராகு அடியெடுத்து வைக்கும் பொழுது, நமக்கு நற்பலன் கிடைக்க வேண்டுமானால் பெயர்ச்சிக்கு பிறகு உங்கள் ஜென்ம நட்சத்திரத்தன்றோ அல்லது இராகு பகவான் சஞ்சரிக்கும் நட்சத்திரத்தன்றோ, திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்வது நல்லது.

எல்லையில்லாத நற்பலனை வழங்கும் குருவை ஆலங்குடி, திட்டை, பட்டமங்கலம் போன்ற ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வாருங்கள். குருவருளும், திருவருளும் இணையும் பொழுது பெருவாரியான நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். நீண்ட நாட்களாக நடைபெறாத காரியங்களெல்லாம் இனி படிப்படியாக நடைபெறும்.

### அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் இராகு!

கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக உங்கள் இராசிக்கு 9ஆம் இடத்தில் இராகு சஞ்சரித்து வந்தார். அவர் ஜுலை 27ஆம் திகதி அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 6, 8, 12 ஆகிய மறைவிடங்களுக்கு வரும் பொழுது ஒருசில கிரகங்கள் நன்மையைச் செய்யும். குறிப்பாக பாவ கிரகங்கள் வரும்பொழுது, பலன்கள் அதிகம் கிடைக்கும். சுயபலமற்ற கிரகம், இருக்கும் இடத்தைப் பொறுத்தே பலன் தரும். எனவே அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் நிழல்கிரகம்இராகு, நிஜகிரகம்போல வேலை செய்யப் போகிறது. விரயங்கள் ஏற்படுத்தினாலும் அதற்கு ஏற்ப வரவையும் கொடுக்கும்.

பாரப்பா எட்டினிலே இராகுவந்தால்
பணவிரயம் அதிகரிக்கும் இருந்த போதும்
சீரான பொருள் வரவைக் கொடுத் தே நாளும்
செலவழியும்! இடமாற்றம் உறுதியாகும்!
என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் விரயங்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. எந்த செலவு வந்தாலும், அதற்கு ஏற்ப வரவையும் இராகு கொடுக்கும். பணத்தை வைத்துக்கொண்டு எந்தக் காரியமும் செய்யவேண்டும் என்பதில்லை. காரியத்தை தொடங்கிவிட்டால் பணப்புழக்கம் வந்து சேரும். நண்பர்கள் நல்ல பலனைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

இதுபோன்ற காலங்களில் குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி வங்கிகளில் வைப்பு நிதியை வைக்கலாம். அவர்களுக்குரிய ஆபரணங்கள் வாங்குவதில் முதலீடுகள் செய்யலாம். உங்கள் இராசியைப் பொறுத்தவரை வீடுகட்டி குடியேறும் அமைப்பைவிட கட்டிய வீடாக வாங்கி குடியேறும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

அந்த அடிப்படையில் பெரியளவில் சொத்துகள் வாங்குவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. அதற்குரிய தொகை கைவசம் இல்லையே என்று நீங்கள் நினைக்கயங்களில் காப்பாற்ற இயலாது. கூட்டாளிகள் தருவதாகச் சொன்ன தொகையைத் தருவதில் தாமதம் ஏற்படலாம். எனவே இதுபோன்ற காலங்களில் யாருக்கும் வாக்கு கொடுத்தால் ஒரு கணம் யோசிப்பது நல்லது.

மற்றவர்களுக்கு கொடுத்துதவும் எண்ணம்பெற்ற நீங்கள் ஒருசில சமயங்களில் ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். அந்த அடிப்படையில் யாருக்கேனும் பண உதவி செய்திருந்தால் அல்லது பணப் பொறுப்புகள் சொல்லியிருந்தால் அதில் சிக்கல்கள் உருவாகலாம். கேது பலம் பெறும் இந்த நேரத்தில் விநாயகப் பெருமானை விடாது வழிபடுவது நல்லது. சங்கடஹர சதுர்த்தி விரதம் இருப்பதன் மூலம் சங்கடங்கள் அகலும். அதுமட்டுமல்லாமல் சிதறு தேங்காய்உடைப்பதன்மூலம்துன்பங்கள்சிதறி ஓடும். கேதுக்குரிய தெய்வமாக விளங்கும் தும்பிக்கையான் மீது முழுமையான நம்பிக்கை வைக்கவேண்டிய நேரமிது.

### பெண்களுக்கான பலன்கள்!

தனுசு இராசியில் பிறந்த பெண்களுக்கு ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய நேரமிது. மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். விரயங்களைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.



டிய வீட்டை விற்றுவிட்டோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் சனியின் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் இக்காலம் ஒருபொற்காலம் ஆகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி பலன் தரும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அது நன்மையை வழங்கும். எதிரிகள் பின்வாங்கும் நேரமிது.

குரு சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது (12.12.2018 முதல் 12.2.2019 வரை):

இக்காலத்தில் இராசிநாதன் குருவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கப்போவதால்

# எட்டாமிடத்தில் வரும் இராகு எதிலும் கவனம் தேவை!




வேண்டாம். சந்திரன்வீட்டில்சஞ்சரிக்கும்இராகு கடன் வாங்கும் அமைப்பையும் கொடுப்பார்.

தொழில்மாற்றச்சிந்தனை மேலோங்கும். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. நடக்கும் தொழிலில் புதிய கூட்டாளிகளைச் சேர்த்துக் கொள்ளலாமா அல்லது பிள்ளைகளையே கூட்டாக வைத்துக் கொள்ளலாமா என்று சிந்திப்பீர்கள். உங்கள் சிந்தனைக்கு வெற்றி கிடைக்கும் விதம் நல்ல சம்பவங்கள் இப்பொழுது நடைபெறப்போகிறது.

### இரண்டாமிடத்து கேதுவின் பலன்!

இதுவரை உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் இப்பொழுது 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். மகர கேதுவின் ஆதிக்கம் குடும்பத்தில் பிரச்சினைகளை உருவாக்கினாலும் அதைச் சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவீர்கள். குறிப்பாக குடும்ப முன்னேற்றம் கருதி எடுக்கும் முயற்சிகளில் தடைகள் ஏற்படாமல் இருக்க அருகிலிருப்பவர்களின் அனுசரிப்பு உங்களுக்குத் தேவை. எனவே கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது. தீபத்தில் தெரியும் தெய்வத்தின் முகத்தைப் பார்த்து நீங்கள் வழிபட்டால் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.

வாக்கு ஸ்தானம் என்று வர்ணிக்கப்படும் 2ஆம் இடத்தில் கேது சஞ்சரிக்கப் போவதால் கொடுத்த வாக்கை ஒருசில சம குடும்பத்தில் உள்ளவர்களின் குணங்களைப் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச்செல்வது நல்லது. குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவர். குருப்பெயர்ச்சிக்கு பிறகு கடன் பாதிக்கு மேல் குறையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடி இடமாற்றம், இலாகா மாற்றம் வந்து சேரலாம். நவக்கிரகத்தில் உள்ள இராகு-கேதுக்களை வழிபடுவதன் மூலமும், பௌர்ணமி விரதத்தின் மூலமும் பலன்களை அதிகம் பெறலாம்.

### வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!

அஷ்டமத்து ராகுவால் ஆதாயம் குறையாமலிருக்கவும், தன ஸ்தான கேதுவால் வரவு தடையின்றிக் கிடைக்கவும் சுய ஜாதகத்தில் இராகு-கேதுக்களின் பலமறிந்து சர்ப்ப சாந்திப்பரிகாரம் செய்வதோடு, வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!

புதன் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 3.4.2018 வரை):

இக்காலத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். திடீர் பயணங்களால் திரவிய லாபம் உண்டு. வெளிநாட்டு அழைப்புகளை பரிசீலனை செய்ய முன்வருவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் சுபநிகழ்வுகளை முன்னின்று நடத்தி நல்லபெயர் எடுத்துக் கொள்வீர்கள்.

சனி சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (4.4.2017 முதல் 11.12.2018 வரை):

இக்காலத்தில் எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். எல்லா நாட்களும் நல்ல நாட்களாக அமையும். வழக்குகளில் வெற்றி கிட்டும். வருங்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்களுக்கு பிர பலஸ்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். கட் எந்தக்காரியமும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்தபடியே இலாகா மாற்றங்கள் வந்துசேரும். முன்னோர் வழிபாட்டிலும், தெய்வ வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுவது நல்லது. ஆரோக்கியத் தொல்லை அகலும். வீண் பழிகளிலிருந்து விடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து நல்ல திருப்பங்களைக் காணும் நேரமிது.

### பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!

செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 29.11.2017 வரை):

இக்காலத்தில் செவ்வாய் உச்சம்பெறும் மகர இராசியிலேயே செவ்வாயின் சாரத்தில் கேது சஞ்சரிக்கப் போவது யோகம்தான். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி கூடும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். ஆன்மீகப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். உடன்பிறப்புகளோடு சொத்துகளால் ஏற்பட்ட பிரச்சினை அகலும்.

சந்திரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (30.11.2017 முதல் 7.8.2018 வரை):

இக்காலத்தில் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். பணப்பற்றாக்குறை அதிகரிக்கும். பணம் வந்த மறுநிமிடமே குழப்பங்கள் அதிகரிக்கும். எதிர்மறைச் சிந்தனைகளை தவிர்த்தால் இனிய பலன் கிடைக்கும்.

சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (8.8.2018 முதல் 12.2.2019 வரை):

இக்காலத்தில் எதையும் சிந்தித்து யோசித்துச்செய்வது நல்லது. உறவினர்பகை அதிகரிக்கும். நீங்கள் மற்றவர் களுக்கு செய்யும்உதவிக்கு நன்றிகாட்ட மாட்டார்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். முன்னோர் வழிபாட்டை முறையாக மேற்கொள்வதன் மூலம் முன்னேற்றத்தில் ஏற்பட்ட தடைகளை அகற்றிக்கொள்ள இயலும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில்

## கந்தபுராண எழுச்சி விழாவின் பத்தாம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கந்தசுவாமிஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் பத்தாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ பரமேஸ் மனோகரக் குருக்கள் ஆகியோர் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவலர்கள் திணை க்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் கந்தபுராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவினை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி முதல்வர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் நிகழ்த்துவார். இதேவேளை சிறுப்பிட்டி சத்தியதாஸ் குழுவினர் வழங்கும் "பக்தி கானங்கள்" நிகழ்வும் இடம்பெறும். (இ-3)

## சின்மயாமிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகள்

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சின்மயாமிஷன் ஆன்மீக அருளுரைகள் (ஞான யக்ஞம்) இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.15 மணி முதல் இரவு 8 மணிவரை இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயாமிஷனில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா "இலக்கு" எனும் தலைப்பில் அருளுரை வழங்குவார். (இ-3)

## அருள்நெறி விழாவின் பத்தாம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறி விழாவின் பத்தாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் விருந்தினராக அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் நா. கேதீஸ்வரன் கலந்து கொள்வார். இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சித்திரவேலாயுதர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, பேச்சு, கதாப்பிரசங்கம், கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கதாப்பிரசங்கம், வில்லிசை, பேச்சு மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் தனி நடனம், குழு நடனம் என்பனவும் இடம்பெறும். (இ-3)

## தெய்வீக சிறப்பு நிகழ்வில் இன்று 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத்திருச்சபை நடத்தம் தெய்வீகச் சிறப்பு நிகழ்வின் பத்தாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்வில் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" எனும் தலைப்பில் இளஞ்சைவப் புலவர் சைவநெறிச் சன்மார்க்கர் ச.நவநீதன் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசையரங்கில் இன்று

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் பத்தாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும். இதில் வயலின் - சைந்தவி நிஷாகரன், மதுரா பாலச்சந்திரன், மிருதங்கம் வி.ரமணா, கடம் க.ரவிசங்கர் ஆகியோர் இச் சோலே நிகழ்வில் கலந்து கொள்வர். (இ-3)



மீசாலை மண்டுவில் சோலை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் தீர்த்தத் திருவிழாவின் போது...

## தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் 'ஸ்ரீராமாவதாரம்'

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபை 30 வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் "தெய்வீகத் தொடர் இசைப் பேருரை" (சங்கீத கதாப்பிரச்ங்கம்) இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் இடம்பெறும். கம்பராமாயணம் பற்றிய இசைப் பேருரையில் இன்று "ஸ்ரீராமாவதாரம்" எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மா கதாப்பிரசங்கம் நிகழ்த் துவார். இதில் வயலின்-வித்துவான் அ.ஜெயராமன், ஆர்மோனியம்-கண்ணன், முரளி, மிருதங்கம் -வித்து வான் து.ராஜன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களா கக் கலந்து கொள்வர். (இ-3)

## ஒக்டோபர் புரட்சியும் இரண்டாம் உலகப் போரும் ஆய்வரங்கு

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஏற்பா ட்டில் மகத்தான ஒக்டோபர் ரஷ்ய சோசலிசப் புரட்சியின் நூற்றா ண்டை முன்னெடு க்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் எட்டாவது ஆய்வரங்கானது நாளை திங்கட்கிழமை போயா தினத்தன்று பி.ப. 4.00 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முரு கையன் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது. ஒக்டோபர் புரட்சியும் இரண்டாம் உலகப் போரும் என்ற தலைப்பில் இடம்பெற வுள்ள இவ் ஆய்வர ங்கிற்கு தி.அனோஜன் தலைமை தாங்கவுள்ளதுடன், ஆய்வுரையினை டேவிட் சுரேன் ஆற்றவுள் ளார். புரட்சிக்குப் பிந்திய உலகத் தொழிலாளர் வர்க்க இயக்கங்கள், பாசிசமும் நாசி ஜேர்மனியும், நவபா சிச எழுச்சியும் தொழிலாளர் வர்க்கமும் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ள இவ் ஆய்வரங்கில் ஆய்வுரையினைத் தொடர்ந்து திறந்த கலந்து ரையாடலும் இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே ஆர்வமுள்ள அனைவரையும் இவ் ஆய்வரங்கில் கலந்து கொள்ளுமாறு புதிய-ஜன நாயக மாக்சிச-லெனினிசக் கட்சியினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-7)





கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளியும் கொக்குவில் மகிழ் முன்பள்ளியும்இணைந்துஅண்மையில் நடத்திய மெய்வல்லுநா் நிகழ்வின் போது...




## இந்துவாக வாழ்வோம்

பல்லவி

தேவ குமரனே ஞான வேல் கையனே
தேவர் சிறை மீட்ட நல்லைப் பெருமானே

அனுபல்லவி

போற்றித் துதிப் போர்க்கு அகத்தினில் ஒளி பெருகும்
தேடி வருவோர்க்கு அஞ்சேலென அபயம் தருவான்

சரணம்

பொன்மணி மாலையும் பூந்துகிலும் வேலும் காண
புலனைந்தும் அடக்கி ஒடுங்குதே
கற்பூர ஒளியினில் உன்தன் திருமுகம் காண
சித்தம் தெளிதந்து மெய்ப் பொருள் தெரியுதே (தேவ)

திருமதி சாந்தா வீரசிங்கம்
சின்மயாமிஷன்

## கஞ்சிக்கு வழிகாட்டும் திருநல்லைக் குமரனே



நஞ்சைக் கொட்டி நல்லன கெடுக்கும்
வஞ்சகர் நிறைந்த பாவபூமி இது
மஞ்ச வாழ்வுக்காய் மற்றவர் வாழ்வை
கிஞ்சித்தும் பாரார் பழிகள் செய்து
அஞ்சிப் பயணிப் போரை அடக்கிடும் அறிவிலார்
மிஞ்சிக் குடித்து வெறித்து வேஷம் காட்டும்
இஞ்சிக்கு ஒப்பானோரை இனிக்க வைப்பதெப்போ
கஞ்சிக்கு வழிகாட்டும் திருநல்லை குமரனே

மானந்தன்
அல்வாய்

## நல்லூரவனே

நீ இருந்து கோலோச்சும்
நிறை பதியாம் நல்லூரதனில்
நீதி நெறி தவறியதால்
நிலை குலைந்தோம் வேலவனே!



காலாதி காலமாய் உன் வீதி வாசலிலே
வேள்வித்தீ மூட்டி ஆகுதி சொரிந்தோம் காண்
மீளாத் துயர் குறைகள் மீண்டும் இங்கு வேண்டாமே
ஆறாத் துயர் களைந்து காத்திடுவான் நல்லூரவனே

- பரமன் அருமை -

## நல்லைக்கந்த சந்தப் "பா"

ஊமை யானவக் குருபர னுனை
உருகிப் பற்றியே யுளத்தி லேற்றிட
நாம ணக்குமோர் கவிதை யூற்றினை
நற்றமி ளொலிச் சிந்துங் காற்றினைப்
பாம ணத்துவிவ் வுலக மெங்கேனும்
பரவிக் காணவே விரவி விட்டனை
நேம னேயுயர் நாம னேகரம்
நீட்டிக் காத்திடும் நல்லைக் கந்தப்பா!



கலாபூஷணம், சந்தக்கவிஞர்
நவ.பாலகோபால்


நல்லூர்க்கந்தன் மஞ்சம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

உங்களுக்கு பிடித்த நவநாகரிக ஆடைகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள ஒருமுறை வந்து பாருங்கள்




கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
&
Boys and Baby Selection & K.T.Fashion

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.
உரும்பிராய்.TP:- 077 228 8245


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாண்டிக்குள புகையிரதக்கடவை தொடர்பாக

# அரச அதிபருக்கு அவசர கடிதம்

(குருமன்காடு)

தாண்டிக்குளம் பகுதியில் காணப்படும் புகையிரதக் கடவை பாதுகாப்பற்ற முறையில் காணப்படுவதனால் உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் பொருட்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட செயலகத்தின் அரசாங்க அதிபருக்கு வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் ஏ-9 வீதியையும், கல்மடு வீதியையும் இணைக்கும் தாண்டிக்குளத்தில் அமைந்துள்ள பிரதான புகையிரதக் கடவையானது இதுவரை காலமும் புகையிரதக் காப்பாளரின் கண்காணிப்பில் பாதுகாப்பான முறையில் செயற்பட்டு வந்துள்ளது. எனினும் அண்மையில் புகையிரதக்கடவை பாதுகாப்பு உத்தியோகத்தர் நீக்கப்பட்டு ஒளிச் சமிக்ஞை விளக்கு பொருத்தப்பட்டுள்ளது.

புகையிரதப் பாதைக்கு சமாந்தரமாகவும் மிக அருகிலும் இரண்டு பிரதான வீதிகள் காணப்படுவதால் அதில் பயணிக்கும் மக்களுக்கு ஒளிச் சமிக்ஞை விளக்கு எரிவது புலப்படாமலுள்ளது. அதனால் பொது மக்கள் அபாயகரமான நிலையில் கடவையை கடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர். இதனால் பாரிய அனர்த்தங்களும் உயிரிழப்புகளும் இந்தக் கடவையில் நடைபெறுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

எனவே உடனடியாக இந்த பாதுகாப்பற்ற கடவைக்கு பாதுகாப்பு கடவை உத்தியோகத்தரை நியமிப்பதுடன் முன்பிருந்தது போன்று பாதுகாப்புக் கதவை பொருத்துதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தங்களை மிகவும் அவசரமாக கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (3-8-250)

# வைத்தியசாலைகளின் தரமுயர்த்தல்களுக்கு மாகாண சபையின் முயற்சிகளே காரணம்

## வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, மல்லாவி, மாங்குளம் வைத்தியசாலைகளின் தரமுயர்த்தலுக்கும் கட்டுமானங்களின் வளர்ச்சிக்கும் மாகாண சபையின் முயற்சிகளே காரணம் என வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மாவட்டத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் எமது




தேவைகளை பலவகைகளிலும் எடுத்துக்கூறி வருகின்றோம். இந்த வகையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்த வேண்டுமென்று பல புள்ளிவிபரங்களுடன் 2014.01.27 ஆம் திகதி மாகாண சபையின் 5வது அமர்வில் பிரே ரணை முன்மொழியப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. பின்பு நடைபெற்ற சுகாதாரக்குழுக் கூட்டங்களிலும் புதுக்குடியிருப்பு, மல்லாவி, மாங்குளம் வைத்தியசாலைகள் ஆதார வைத்தியசாலைகளாக தரமுயர்த்த பரிந்துரை செய்யப்பட்டது.

அதன்பின் நெதர்லாந்து அரசின் உதவிகளாக மாகாண சுகாதார சேவைகளுக்கு என 9000 மில்லியன் ஐந்து மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டதில் வடமாகாண புனர்வாழ்வு வைத்தியசாலை மாங்குளத்தில் அமைப்பதற்கு 2700 மில்லியன் மிகவும் அதிகமாகவே ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்படி 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்தரமுயர்த்தல்களுக்கு அத்திபாரமிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதன்பயன் 2017.08.03 ஆம் திகதி மத்திய சுகாதார அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் எமது மாவட்டத்தின் மூன்று வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டு உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இது விடயத்தை மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தினேன். அத்தோடு தீர்மானம் நிறைவேற்றிய காலத்திலிருந்து பல தடவை இது விடயத்தில் நெருக்குதல் கொடுத்ததாகவே எண்ணுகின்றேன். அதனையும் அவருடன் நினைவு கூர்ந்து மாவட்ட மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்தேன். அத்துடன் இதற்காக உழைத்த சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளுக்கும், புதுக்குடியிருப்பு வைத்திய அதிகாரி சத்தியரூபன் மற்றும் புதுக்குடியிருப்பு மல்லாவி சமூகத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (4-7-8)

# அதிகரித்து வரும் யானைகள் தொல்லை



கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்மடுநகர், நாவல்நகர், றங்கன் குடியிருப்பு. ஆகிய பகுதிகளில் கடந்த சில நாட்களாக யானையின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டு என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுபோக நெற்செய்கையை யானைகள் அழித்து வருவதால் தமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் யானைத் தாக்கத்திலிருந்து பயிர்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் காவலுக்குச் சென்ற விவசாயிகளும் உயிராபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் அண்மைய சம்பவமாக கடந்த வியாழக்கிழமை காவலுக்குச் சென்ற விவசாயி ஒருவரை யானை துரத்திய சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

எனவே யானைகளின் அட்டகாசத்திலிருந்து பாதுகாப்புப்பெற குறித்த கிராமங்களுக்கு பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு இந்த பகுதியில் வாழும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# குடிநீர் இயந்திரத் தொகுதி திறந்து வைப்பு



(குருமன்காடு)

வவுனியா - புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் வடிகட்டும் குடிநீர் இயந்திரத் தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8.15 மணியளவில் பாடசாலையின் அதிபர் சொ.கமலாம்பிகை தலைமையில் இடம்பெற்றுள் ளது.

மாகாண சபை உறுப்பினர்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து அமைக்கப்பட்ட வடிகட்டும் குடிநீர் இயந்திர தொகுதியினை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் திறந்து வைத்தார்.

இதேவேளை, இந்நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.(3-8-250)

# வெடிபொருட்கள் மீட்பு



மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாப்பாமோட்டை கிராம அலுவலகர் பிரிவில் உள்ள காட்டுப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை சக்தி வாய்ந்த வெடி பொருட்கள் சிலவற்றை பாதுகாப்புத்தரப்பினர் மீட்டுள்ளனர்.

அடம்பன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பாப்பாமோட்டை கிராம அலுவலகர் ஊடாக பாப்பாமோட்டை காட்டுப்பகுதியில் வெடிக்காத நிலையில் உள்ள வெடி பொருட்கள் தொடர்பில் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைவாக குறித்த வெடி பொருட்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை மீட்கப்பட்டது.

அடம்பன்பொலிஸ் இராணுவம் மற்றும் விமானப் படையினர் இணைந்து நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமை காலை குறித்த பகுதிக்குச்சென்று அடையாளம் காணப்பட்ட வெடிக்காத நிலையிலுள்ள வெடி பொருட்களை மீட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் குறித்த வெடி பொருட்கள் கடந்த காலங்களில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பாதுகாப்புத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட வெடி பொருட்களை செயல் இழக்கச் செய்யும் நடவடிக்கையில், வெடி பொருட்களை மீட்ட குழுவினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-4)

# பிரதமரின் 40 வருட பூர்த்தி; கிளிநொச்சியில் சமய வழிபாடுகள்

(பரந்தன்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின்பொதுசன சேவையின் 40 வருட பூர்த்தியை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள கந்தசுவாமி ஆலயம் மற்றும் கிளிநொச்சியிலுள்ள விகாரை ஆகியவற்றில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொதுசன சேவையின் 40 வருட பூர்த்தி மற்றும் இந்நாட்டிற்கு திறந்த பொருளாதார முறைமையை அறிமுகப்படுத்தி 40 வருடங்கள் பூர்த்தியாவதை நினைவு கூரும் முகமாக நாடுபூராகவும் சர்வ மத பிரார்த்தனைகள் இடம்பெறுவதற்கு அமைவாகவே இப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் த.பிருந்தாகரன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (7-8-312)



வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரியின் இளைஞர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வும் அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று முன்தினம் 4ஆம் திகதி கல்லூரியின் பிரதான மண்டபத்தில் முதல்வர் [illegible] தலைமையில் நடைபெற்றது. (3-112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும் திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும்தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள். ~ லெனின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மன்றாடிப் பலனில்லை ஐயா உங்களால நாங்கள் மோசம் போனம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையாவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தர் மன்றாடியுள்ளார்.

பாவம் எங்கட சம்பந்தர் ஐயா கிழக்கு மாகாணத்தில் மே தினக் கூட்டத்தை நடத்திய போது இன்னும் இரண்டு வாரத்துக்குள் ஒரு நல்ல செய்தி வரும் என்று கூறியிருந்தார்.

ஆனால் அப்படி எந்தச் செய்தியும் வெளி வந்ததாகத் தெரியவில்லை.

இதற்கு முன்னதாக 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் தீர்வு கிடைக்கும் என்று கூறியதால் மொக்கோனப்பட்டதுதான் மிச்சம்.

இறுதியாக 2017 தீபாவளிக்கு முன்னதாக தீர்வு கிடைத்துவிடும் என்பதுதான் சம்பந்தர் ஐயாவின் செய்தியாக இருந்தது.

ஆனால் நிலைமை இப்போது எல்லை மீறி விட்டது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடையாது என்பதே உண்மை.

இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் நல்லாட்சி பரிசாகக் கொடுத்த எதிர்க்கட்சித் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்டு தமிழர்களின் பலத்தை உடைத்து எல்லாவற்றையும் சிதறடித்தவர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இனப்பிரச்சினை தீரும் வரை ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்பட வேண்டும் எனக் கேட்கும் இரா.சம்பந்தர் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ளவில்லை.

அதாவது நல்லாட்சி என்பது ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேசிய அரசை அமைத்ததும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுத்ததும் தமிழர்களின் இழப்பை மறைத்து சர்வதேசத்தின் அழுத்தத்தை மெலிய வைத்து, தமிழ் மக்களுக்கு எந்த உரிமையும் கிடைக்காமல் செய்துவிடுவதுதான்.

இதனைப் புரிந்து கொள்ளாத சம்பந்தர் ஐயா இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் வரையாவது ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்பட வேண்டும் எனக் கேட்டுள்ளார். அவரின் கோரிக்கை எதுவும் சாத்தியமாகாது.

மாறாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை இலங்கை அரசு நிறைவேற்றுவதென்பதும் சாத்தியப்பட மாட்டாது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பி தமிழ் மக்கள் மோசம் போனதுதான் உண்மை.

அன்று சர்வதேச விசாரணையை வலியுறுத்தியிருந்தால்; ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் எடுத்த தீர்மானத்தை நடை முறைப்படுத்துவதற்கு காலஅவகாசம் கொடுக்கக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுக்கமாக நின்றிருந்தால், இன்று தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கும்.

அவ்வாறு தீர்வு காணப்படாவிட்டால் அது தொடர்பில் ஐ.நா சபைக்கு இலங்கை அரசு பதிலளிக்க வேண்டியிருந்திருக்கும்.

இதைவிடுத்து சர்வதேசத்தின் எல்லா அழுத்தத்தையும் வலுக்குறைப்புச் செய்து இலங்கை அரசைக் காப்பாற்றி விட்டு; ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கெஞ்சுவது எந்தவகையிலும் பயனற்றது.

என்ன செய்வது கேவலம் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக சம்பந்தரும் அரச சலுகைக்காக மற்றவர்களும் விழுந்து எழும்பி தமிழர் தலையில் மண்ணைப் போட்டதுதான் மிச்சம். இதைவிட வேறு எதுவும் நடக்கவில்லை.

# இப்போது கிடைக்காவிட்டால் எப்போதும் தமிழருக்கு விடிவில்லை

## கல்வி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் தமிழுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை விட இலங்கையில் தமிழுக்கும் தமிழர்களுக்கும் முக்கியத்துவம் வழங்குகின்றனர் எனத் தெரிவித்துள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஸ்ணன் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை தீர்த்து அவர்களுக்கு விடிவுகாலத்தை பெற்றுக்கொடுக்கக் கூடிய ஓர் காலம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கனிந்துள்ள இக் காலத்தை தமிழர்கள் பயன்படுத்தி கொண்டு தமது விடிவு கால த்தை ஏற்படுத்தி கொள்ள வேண்டும். இப்போது இருக்கும் காலத்தை விட்டால் வேறெந்த காலத்திலும் தமிழர்களுக்கு விடிவினை பெற்றுக் கொடுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

உலக தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது சர்வதேச மாநாடு நேற்றைய தினம் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமானது. இதில் இணைத் தலைவராகக் கலந்து கொண்டிருந்த இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் மேலும் உரையாற்றுகையில்,

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்து மக்களையும் சிங்கள மக்களையும் இணைக்க முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. அந்தவகையில் நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. எமது பண்பாடுகளை, கலை, கலாசாரங்களை மறக்காது ஏனைய சமூகத்தோடு இணைந்து செயற்படக்கூடிய சம்பிரதாயத்தை உருவாக்க வேண்டும.

குறிப்பாக உலகத்தில் தமிழ் மக்களுக்கு என்றொரு தனியான நாடு கிடையாது. ஆனால் ஏழு கோடி தமிழ் மக்கள் வாழுகின்ற தமிழ் நாட்டில் தமிழுக்கு கொடுக்கப்படாத முக்கியத்துவம் இன்று இலங்கையிலே தமிழுக்கு கொடுக்கப்படுகின்றது. தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடக்கூடிய சூழலும், தமிழ் அமைச்சர்கள் செயற்படக்கூடிய சூழலும் தற்போது ஏற்பட்டுள்ளது. இவ்வாறான படிப்படியாக தமிழுக்கு அந்தஸ்து வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அதே நேரம் இன்னமும் அந்தஸ்து வழங்கப்படாத பல விடயங்கள் உள்ளன. அவற்றுக்காக போராடுவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

நாம் கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பங்களை பயன்படுத்தி இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும். இலங்கையை பொறுத்தவரையில் இரண்டு மொழி பேசுகின்ற நான்கு மதங்களை, இனங்களை சேர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள். அந்தவகையில் வடக்கு, கிழக்கு, மலையக மக்கள் அனைவரையும் ஒன்றாக சேர்த்து வாழக்கூடிய,செயற்படக்கூடிய நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

தறபோது பாராளுமன்றத்தில் கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு இணைந்து தமிழ் முற்போக்கு கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றதை காணமுடியுமாக இருக்கும். அந்தவகையில் தற்போது நாட்டிலே இருக்கின்ற சாதகமான சூழ்நிலையை பயன்படுத்தி முக்கியமாக இதனை தமிழ் மக்கள் பயன்படுத்தி கொண்டு தமிழ் மக்களுக்கு ரிய விடிவு காலத்தை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். அது இந்த காலத்தை விட்டால் வேறெந்த காலத்திலும் கிடைக்காது.

தற்போது இருக்கின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சொல்வதை செய்கின்றவராக இருக்கின்றார். அதேபோன்றே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தனது நாற்பதாண்டு கால அரசியல் பயணத்திலே தமிழ மக்களுக்கு உதவுபவராக இருந்துள்ளார்.

எனவே இச்சந்தர்ப்பத்தை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்பதுடன் கனிந்துள்ள நல்ல காலதமை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## பிரதமர் ரணிலுக்கு வாழ்த்துக்கூற மறுத்தது ஏன்? ஜே.வி.பி.விளக்கம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற வாழ்க்கைக்கு நாற்பது ஆண்டுகள் பூர்த்தியானமையை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்காமைக்கு ஜே.வி.பி. விளக்கமளித்துள்ளது.

பிரதமருக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நடைபெற்ற நிகழ்வில் ஜே.வி.பி. பிரதமருக்கு வாழ்த்து தெரிவிக்கவில்லை.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வுகளில் ஜே.வி.பி. பங்கேற்காமைக்கு காரணமொன்று உண்டு என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 28ஆம் திகதி நாடாளுமன்றம் உரிய முறையில் ஒத்தி வைக்கப்படவில்லை. சபாநாயகரும், பிரதமரும் அதனை உரிய வகையில் மேற்கொள்ளவில்லை. இதனால் ரணிலுக்கு வாழ்த்துக்கூறும் அமர்வைப் புறக்கணித்ததாக ஜே.வி.பி. விளக்கமளித்துள்ளது. (இ)

## கிழக்கு முதல்வர் பதவி தமிழருக்கு வேண்டும்

கிழக்கு மாகாண சபையின் ஆட்சி நீடிக்கப்பட்டால் முதலமைச்சர் பதவி தமிழருக்கு வழங்கப்படவேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கல்லடி, உப்போடை விவேகானந்த மகளிர் கல்லூரியின் வரலாற்று சாதனையாளர் பாராட்டு நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு ஆட்சி அதிகாரங்கள் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டால் கிழக்கு மாகாண சபையின் ஆட்சி பெரும்பான்மையினத்தவர்களின் கைகளில் இருக்கப் போகின்றது.இந்த நிலைமை ஏற்பட இடமளிக்கக்கூடாது.

கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 11ஆசனங்களைக் கொண்டுள்ளது. அத்துடன் ஏனைய மூன்றுதமிழ்மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளனர்,அவர்களுடன் 14 தமிழ் மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளனர்.

கிழக்கு மாகாண சபையின் காலம் நீடிக்கப்படுமாக விருந்தால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது கிழக்கு மாகாணசபையின் ஆட்சியில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அந்த ஆட்சியில் இருக்கக் கூடாது.

இரண்டரை வருடகாலம் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆட்சிய மைத்துள்ள நிலையில் அதில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் இருந்து வருகின்றார்.

இந்த நிலையில் கிழக்கு மாகாணசபையின் ஆட்சி அதிகாரம் நீடிக்கப்படுமாக விருந்தால் கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சர் பதவி தமிழருக்கு வழங்கப்படவேண்டும் என்பதுடன் அமைச்சரவையிலும் முக்கிய மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

நாங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தால் மட்டுமே கடந்த காலத்தில் பாதிப்புக்குள்ளான எமது பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதுடன் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளையும் ஓரளவு பூர்த்தி செய்துகொள்ளமுடியும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## உலகாளும் மாரியம்மா!

உலகெலாம் ஆளுகின்ற உமையவளின் சொரூபமென
உள்ளத்தே ஒளிர்கின்ற மெய்ப்பொருளின் உணர்விதென
எண்ணமெல்லாம் நிறைகின்ற மாரியுந்தன் அழகேந்தி
மெல்ல நகர்கின்ற இரதக் காட்சிதான் காண
கண்கோடி தாராயம்மா! கலியுகத்து நாயகியே
விண்ணிருந்து மண் வந்த முத்துமாரி தாயவளே!
தொன்மை நிறை மண்டைதீவு வேப்பந்திடல் உறைபவளே!
தொல்லையிலாப் பெருவாழ்வு தந்தெம்மை ஆளுமம்மா

சிரபுரத்தான்~ மண்டைதீவு

இன்று மண்டைதீவு வேப்பந்திடல் ஶ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய இரதோற்சவத்தை முன்னிட்டு இக் கவிதை பிரசுரமாகிறது.

## ஆங்கிலமொழி பயிற்சிநெறிக்கான பரிசில் வழங்கல் நிகழ்வு இன்று

யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் மழலைகளின் கலைச் சங்கமம் ஆங்கில மொழிப் பயிற்சி நெறிகளுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் வித்தியாலய கலையரங்கில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சுப்பிரமணியம், கௌரவ விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா. சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

இரத்த உறவில் திருமணம் செய்வதனால் குருட்டுத் தன்மை உள்ள பிள்ளைகள் பிறக்கும் சாத்தியங்கள் அதிகம். பார்வைக்குறைபாடு பரம்பரையாக ஏற்படக்கூடியது. எனவே பெற்றோர்களுக்கு பார்வைக்குறைபாடு இருப்பின் பிள்ளைகளை சிறு பராயத்திலிருந்தே கண் பரிசோதனைக்குட்படுத்தவும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
யாழ். மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி புதிய சாதனை




அகில இலங்கை பாடசாலை மட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் கொலன்னாவை மகளிர் வித்தியாலயத்தை வீழ்த்தி யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி பாடசாலை வலைப்பந்தாட்ட வரலாற்றில் புதிய சாதனை படைத்துள்ளது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் 360 பாடசாலைகள் பங்கேற்றுள்ள 2017ஆம் ஆண்டிற்கான அகில இலங்கை வலைப்பந்தாட்டப் போட்டிகள் பதுளை. விச்சென்ட் டயஸ் மைதானத்தில் ஆரம்பமாகின. இதன் முதல் சுற்றின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், கொலன்னாவை மகளிர் வித்தியாலய அணியும் பலப்பரீட்சை நடத்தின. போட்டியின் ஆரம்பம் முதலே அபார விளையாட்டை வெளிப்படுத்திய யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர், 28-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியது.

யாழ்.மாவட்ட பாடசாலையான இக்கல்லூரியின் வலைப்பந்து அணி தேசிய மட்டப் போட்டிகளில் இதுவரையில் எந்தவொரு வெற்றியையும் பெற்றதில்லை. இவ்வாறான ஒரு நிலையில் இவ்வணி பெற்றுள்ள இந்த முதல் வெற்றியானது கல்லூரிக்கு சரித்திர வெற்றியாகவும் உள்ளது.

அகில இலங்கை பாடசாலைகள் வலைபந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நெஸ்ட்லே லங்கா லிமிட்டெட்டின் மைலோ 26ஆவது வருடமாக அனுசரணை வழங்குகின்ற அகில இலங்கை பாடசாலை வலைப் பந்தாட்ட போட்டித் தொடரில் 13 வயதுக்குட்பட்ட பிரிவில் 90 அணிகளும் 15, 17 மற்றும் 19 ஆகிய வயதுக் குட்பட்ட ஏ பிரிவில் தலா 60 பாடசாலை அணிகளும், பி பிரிவில் தலா 30 பாடசாலை அணிகளும் இறுதிச் சுற்றில் பங்குபற்ற தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III -2017 யாழ். மாவட்ட இறுதிப் போட்டி

## சென்றலைட்ஸ் எதிர் யாழ். பல்கலைக்கழகம்




சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பலம் பொருந்திய இரு அணிகளான சென்றலைட்ஸ், யாழ்.பல்கலைக்கழக அணிகள் மோதவுள்ளன. அத்துடன் இவ்விரு அணிகளும் மேற்படி தொடரின் 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றமை குறிப்பித்தக்கது. மேற்படி போட்டிக்கு சட்டத்தரணி வி.ரி. சிவலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். அத்துடன் இவர் வி.ரி.மகாலிங்கம் பிறிமியர் லீக் தொடருக்கு அனுசரணையாகவுள்ளார். இப் போட்டிக்கு கௌரவ விருந்தினராக முன்னைனாள் சென்றலைட்ஸ் துடுப்பாட்ட வீரரும் கடந்தகால யாழ். மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுநருமான வி.கே.சண்முகலிங்கம் கலந்து சிறப்பிப் பார்.(க)




## கரவெட்டி ஐக்கியத்தை வென்றது துறையூர் ஐயனார் வி.கழகம்



திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் கடந்த 3 ஆம் திகதி அன்று நடைபெற்ற போட்டியில் கரவெட்டி ஐக்கிய வி.க. எதிர்த்து துறையூர் ஐயனார் வி.க. மோதியது. இதில் துறையூர் ஐயனார் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஐயனார் அணி சார்பாக விதுசன் மற்றும் சுபிதன் தலா ஒவ்வொரு கோல் களைப்போட்டனர். (க)

## திக்கம் இளைஞர் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

### சென். மைக்கல் வெற்றி



திக்கம் இளைஞர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் நக்கீரன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் மோதியது. பரபரப்பான போட்டியில் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை 3.0 என்ற கோல் கணக்கில் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் சார்பில் T.கொமறோ 2 கோலினையும் T.டினோஜன் ஒரு கோலினையும் பெற்றனர். (க)

## உதயதாரகையின் மாபெரும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

2017 ஆம் ஆண்டுக்கான உதயதாரகையின் மாபெரும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வுகள் பருத்தித்துறையில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அமரர் கந்தசாமி ஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நடைபெற்றுவந்த வடமராட்சி மற்றும் பருத்தித்துறை கழகங்களுக்கு இடையிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியே நடைபெறவுள்ளது.

இதற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, கலை, பண்பாட்டு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)




## அரியாலை பிறிமியர் லீக்-2017 நேற்று ஆரம்பம்



அரியாலை பிறிமியர் லீக் - 2017 கிரிக்கெட் விழா நேற்றுக் காலை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது. அரியாலை மண்ணின் ஒற்றுமையை பறைசாற்றும் வண்ணம் அரியாலையின் கிரிக்கெட் திருவிழா 8 அணிகளுடன் ஆரம்பமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துன்னாலை குடத்...



கிள்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை காலை 6.30 மணி முதல் 9.30 மணிவரை பெரும் எடுப்பிலாக இச் சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த யூலை மாதம் 9ஆம் திகதி அன்று சட்டவிரோத மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வேம்படி துன்னாலை கிழக்கைச் சேர்ந்த யோகராசா தினேஸ் (வயது 25) என்ற இளைஞர் பலியானார்.

இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பருத்தித்துறைப் பொலிஸாரின் ஜீவ் வண்டி அப்பகுதி இளைஞர்களால் சேதமாக்கப்பட்டதுடன் புலோலி கொடிகாமம் வீதியில் புளியங்கியான் சந்தியில் இருந்த பொலிஸ் காவலரணும் சேதமாக்கப்பட்டது.

மேலும் கரவெட்டியில் உள்ள பொலிஸ் அதிகாரி ஒருவரின் வீடும் சேதமாக்கப்பட்டது. மறுநாள் 10ஆம் திகதி அன்று ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டு வீதியூடான போக்குவரத்து தடை செய்யப்பட்டது.

துன்னாலைப் பகுதிக்கு சென்ற விசேட அதிரடிப் படையினரின் பவள் கவசவாகனம் மீதும் கல்வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் இ.போ.ச பஸ் வண்டி ஒன்றும் தாக்கப்பட்டது. வீதியால் சென்ற சிலர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் தமது கடமைகளை பொலிஸ் நிலையத்திற்குள் முடக்கியிருந்தனர்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வகை தொகையின்றி சட்ட விரோத மணல் அகழ்வு வல்லிபுரம் முதல் குடத்தனை வகையில் நடைபெற்று வந்தது.

அதேவேளை மற்றொரு சம்பவமாக கடலோர பாதுகாப்புப் பணியினை முடித்து விட்டு முகாம் திரும்பிய கடற்படையினர் மீது வல்லிபுரம் மாவடிச் சந்தியில் வைத்து சட்ட விரோத மணல் ஏற்றி வந்தோர் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர்.

இதன்பிற்பாடு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி விட்டு வீடு திரும்பிய பொலிஸ் உப பொறுப்பதிகாரி ஒருவரும் தாக்கப்பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து பொலிஸ் தலைமையகத்தின் உத்தரவுகளிற்கு அமைய பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொலிஸார்களும் இறக்கப்பட்டு விசேட ரோந்துப் பணிகளை மேற்கொண்டு பதினான்கு வரையானோரைக் கைது செய்திருந்தனர்.

நேற்று அதிகாலையில் சிறப்பு பயிற்சி பெற்ற விஷேட அதிரடிப் படையினர் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் இருந்து பஸ், றக், ஜீப், மோட்டார் சைக்கிள்கள் சகிதம் ஆயுதங்கள் கொட்டன்களுடன் துன்னாலை குடவத்தைப் பகுதியை காலை 6.30 மணிக்கு சுற்றிவளைத்தனர்.

சுற்றி வளைக்கப்பட்டு வீடு வீடாக சோதனை மேற்கொண்டதில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும் அனுமதிப் பத்திரங்கள் இன்றி காணப்பட்ட ஐந்து ஹண்டர் வாகனங்கள் மற்றும் ஒன்பது மோட்டார் சைக்கிள்களையும் மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். இதைவிட தேடுதல் நடவடிக்கைகள் நேற்று மாலையும் அப்பகுதிகளில் பரவலாக முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-60,4)

## இந்திய குடியரசு...

பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளராக களமிறங்கிய வெங்கைய நாயுடு 272 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையில், எதிர்க்கட்சிகளின் வேட்பாளராகக் களமிறக்கப்பட்ட தேசத்தந்தை மகாத்மா காந்தியின் பேரனும், முன்னாள் ஆளுநருமாகிய கோபாலகிருஷ்ண காந்தியை விட 272 வாக்குகள் அதிகம் பெற்று முன்னாள் மத்திய அமைச்சர் வெங்கைய நாயுடு வெற்றி பெற்றுள்ளார். இதனைத் தொடர்ந்து இந்தியாவின் 15-வது குடியரசு துணைத் தலைவராக வெங்கையா நாயுடு விரைவில் பதவியேற்றுக் கொள்வார். அவருக்கு குடியரசுத் தலைவர் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வெங்கைய நாயுடுவுக்கு, பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

நாட்டை கட்டமைக்கும் குறிக்கோளுக்காக, விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய குடியரசு துணைத் தலைவராக வெங்கைய நாயுடு செயற்படுவார் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளேன் என தனது டு விட்டர் பதிவில் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேற்று காலை தொடங்கிய குடியரசு துணைத் தலைவருக்கான தேர்தலில் மொத்தம் 771 வாக்குகள் பதிவாகின. வாக்குப் பதிவு சதவீதம் 98.21 சதவீதமாக இருந்தது.

வாக்குப்பதிவு முடிந்ததும் உடனடியாக வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் வெங்கையா நாயுடு 516 வாக்குகளும், கோபால கிருஷ்ண காந்தி 244 வாக்குகளும் பெற்றுள்ளதாக தேர்தல் அலுவலர் ஷெம்ஷெர் கே ஷெரிப அறிவித்துள்ளார். (செ-11)

## சீனக்கப்பல்...

கும் வெற்றி என்ற கோட்பாட்டை ஏற்று சர்வதேச மனிதாபிமான பொறுப்பை நிறைவேற்றும் பணியில் இந்த கப்பல் ஈடுபட்டுள்ளது.

இந்தக் கப்பல் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும். நாளை மறுதினம் எட்டாம் திகதி செவ்வாய்க்கிழமை மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதாக சீன தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தக் கப்பல் மூன்று சமுத்திரங்களை தாண்டி ஐந்து கண்டங்களில் உள்ள 29 நாடுகளுக்குச் சென்று ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேருக்கு மருத்துவ சேவைகளை வழங்கியிருப்பதாக சீன தூதரகத்தின் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (செ-11)

## இறுதி யுத்தத்தில்...

ரப்படுகிறது என்று இறுதி யுத்தத்தில் முக்கிய பங்கு வகித்த 53ஆவது படைப்பிரிவுக்கு தலைமை தாங்கிய ஓய்வுபெற்ற இராணுவ உயரதிகாரி மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் மிலேனியம் சிற்றி போன்ற பல காட்டிக்கொடுப்புக்கள் கடந்த ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நந்திக்கடலுக்கான பாதை என்ற புத்தகத்தின் ஊடாக தான் செய்தது ஒன்றும் காட்டிக்கொடுப்பு அல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் சிங்கள சமூகத்தை தெளிவுபடுத்தி வரும் நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றனர்.

அந்த வகையில் குவைத் நாட்டில் இந்த செயலமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றதுடன் இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவும் கலந்துகொண்டார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன நந்திக்கடலுக்கான பாதை என்ற நான் எழுதிய புத்தகத்தை தனது கையில் எடுத்துக்காண்பித்த நிதியமைச்சர் மங்கள சமரவீர, இது நந்திக்கடல் அல்ல, அந்திக்கடல் என்று பெயர் வைக்க வேண்டும் என்றும், இதில் அதிகளவான போர்க் குற்றங்கள் பற்றி காணப்படுகிறது எனவும் கூறியிருந்தார். இந்த புத்தகத்தின் ஊடாக ஒட்டுமொத்த இலங்கை இராணுவத்தையும் காட்டிக்கொடுத்துவிட்டதாக என்மீது குற்றம் சுமத்தினார். நாட்டிற்காகவும், மக்களுக்காவும் பாடுபட்டவர்களில் ஒருவரான நான் காட்டிக்கொடுத்தேனா? எம்மவர்களால் குற்றங்கள் இப்படியா இழைக்கப்பட்டன, அதனை சரிசெய்ய அரசாங்கம் மற்றும் இராணுவத் தலைமையகம் இப்படியான நடவடிக்கையை மேற்கொண்டது, அதற்கு காரணமாக முழு படையணியையும் கலைத்தது, எனவே இந்த சம்பவங்கள் நினைவுக்கு வருகையில் இன்று எனக்கு ஏற்படுகின்ற வெட்கம் சகித்துக்கொள்ள முடியாதவை என்றே நான் எனது புத்தகத்தில் கூறினேன். குற்றங்கள் என்று நான் கூறியிருப்பது பாலியல் வன்புணர்வுகள், அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுதல் போன்றன அல்ல. அவற்றை விடவும் குறைந்த குற்றங்களாகும். ஏற்பட்ட குற்றங்களுக்காக மனவருத்தம் அடைவதா? காட்டிக்கொடுத்தல்? அல்லது இன்னொரு நாடுடன் இணைந்து தமது நாட்டுப் படைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைப் பேரவையில் தீர்மானமொன்றை கொண்டுவருவதாக காட்டிக்கொடுத்தல்? இன்று பிரதமராக இருக்கின்றவர் முன்பு பிரதமராக இருந்த அரசாங்கத்தில் சிங்களவரால் காட்டிக்கொடுக்கப்பட்ட மிகப்பெரிய காட்டிக்கொடுத்தலானது மிலேனியம் சிட்டி சம்பவமாகும் என்று சிங்களப் பத்திரிகையில் செய்தி பிரசுரமாகியது. அதன் பின்னர் பாதுகாப்பு பிரிவின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதுவே காட்டிக்கொடுத்தலாகும். இப்படியான காட்டிக்கொடுத்தல்கள் ஒருபுறமிருக்க, எங்களை ஒரு வழிப்பாதையில் வெளிநாட்டு நீதிமன்றத்துக்கு அனுப்புவது ஒன்றும் பெரிய விடயமல்ல. காட்டிக்கொடுத்தலுக்கு நாங்கள் மிகவும் பிரபல்யமானவர்கள். எமது வரலாற்றில் பலதரப்பட்ட காட்டிக்கொடுத்தல்கள் உள்ளன. இந்த காட்டிக்கொடுத்தலும் அப்படிப்பட்டதாகும்" என்று தெரிவித்தார். (செ-11)

## ஒரே நாளில்...

திருத்தம் மாகாண சபைகள் தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பாக கடந்த ஜுலை 25, மற்றும் ஓகஸ்ட் 2ஆம் திகதிகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது.

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடைபெற வேண்டும். அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்பட வேண்டிய திகதியை நாடாளுமன்றம் தீர்மானிக்கும் என குறிப்பாக உத்தேச அரசியல் யாப்பு 20ஆவது திருத்தம் கூறுகின்றது.

நாடாளுமன்றம் தீர்மானிக்கும் குறித்த திகதி, இறுதியாக தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையின் பதவிக்காலம் முடிவு திகதிக்கு பின்னராக இருக்க கூடாது

அந்தத் திகதிக்கு முன்னதாக பதவிக் காலம முடிவடைகின்ற மாகாண சபைகளின் பதவிக்காலம் நாடாளுமன்றம் குறிப்பிடுகின்ற திகதி வரை நீடிக்கப்பட்டதாக கருதப்படும்.

நாடாளுமன்றம் தீர்மானிக்கும் குறித்த திகிக்குப் பின்னர் மாகாண சபையொன்றின் பதவிக் காலம் இருந்தாலும் அதே திகதியில் அந்த மாகாண சபையும் கலைக்கப்பட்டதாகவே கருதப்பட வேண்டும் என்றும் உத்தேச அரசியல் யாப்பு 20ஆவது திருத்த சட்ட மூலத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டிலுள்ள 9 மாகாண சபைகளில் இறுதியாக 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி ஊவா மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது. அதன் 5 வருட பதவிக் காலம் 2019 செப்ரெம்பர் மாதம் முடிவடைகின்றது. அதன் பதவிக் காலத்திற்கு பின்னர் நாடாளுமன்றத்தினால் திகதி தீர்மானிக்க முடியாது என்பதை உத்தேச அரசியல் யாப்பு திருத்தம் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

தற்போதுள்ள தேர்தல் சட்டத்தில் ஒரு மாகாண சபையின் ஐந்தாண்டு பதவிக் காலம் முடிவடைந்ததும் அது கலைந்ததாக கருதப்படுகின்றது. உத்தேச திருத்தம் நாடாளுமன்றத்தினால் குறித்துரைக்கப்படுகின்ற திகதியில் கலைந்ததாக கருதப்படும் என்று குறிப்பிடுகின்றது.

இந்த திருத்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் செப்ரெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் பதவிக்காலம் முடிவடையவுள்ள கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளின் பதவிக காலமும் குறித்த திகதி வரை நீடிக்கின்றது.

ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதால் அரசு நிதி தேர்தலுக்கு கூடுதலாக செலவிடப்படுவதை தவிர்க்க முடியும் என அரசு தனது பக்க நியாயத்தை முன்வைத்தாலும் தேர்தலுக்கு முகம் கொடுக்க அரசு பயப்படுவதாக கூட்டு எதிரணி மற்றும் ஜே.வி.பி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

தேர்தல் சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வந்து தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிப்பு செய்வது ஜனநாயக விரோத போக்கு என்றும் எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

ஏற்கெனவே உள்ளூராட்சி சபைகளுககான தேர்தலும் தேர்தல் சட்டத்தில் திருத்தம் என்ற காரணத்தை முன் வைத்து தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டு வருவதையும் எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன.

தற்போது 9 மாகாண சபைகள் உள்ளன. இதுவரையில் ஒரே நாளில் தேர்தல் நடந்த வரலாறு இல்லை. மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபையொன்றின் பதவிக் காலம் 5 வருடங்களாகும்.

பதவிக் காலம் முடிந்த பின்னர் தற்போதைய தேர்தல் சட்டத்தில் அதனை நீடிப்பதற்கான வாய்ப்பு இல்லை. பதவிக் காலத்திற்கு முன்னதாக கலைப்பது என்றால் மாகாண முதலமைச்சரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

எதிர்வரும் செப்ரெம்பர் 8ஆம் திகதி கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலமும் 28ஆம் திகதி சப்ரகமுவ மாகாண சபையின் பதவிக் காலமும் ஒக்டோபர் 1ஆம் திகதி வட மத்திய மாகாண சபையின் பதவிக் காலமும் முடிவடைகின்றது.

பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் தேர்தல் ஆணையம் ஒரு வார காலத்தில் அடுத்த தேர்தலுக்கான வேட்பு கோரும் அறிவித்தலை வெளியிட வேண்டும் என தற்போதுள்ள மாகாண சபை தேர்தல் சட்டம் கூறுகின்றது.

உத்தேச திருத்தம் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் குறித்த மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறாது. அதற்கு பதிலாக சபைகளின் பதவிக் காலமும் அனைத்து மாகாண சபைகளையும் கலைப்பதற்காக நாடாளுமன்றத்தால் தீர்மானிக்கப்படும் திகதி வரை மேலும் நீடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இளைஞர்கள்...

கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் குருநகர் ஆலடி பகுதியில் நேற்று பி.ப 2 மணியளவில், மேற்படி இளைஞர் குழுவினர் நின்றுள்ளனர். அவ் வேளையில் அந்த வழியாக பொலிஸார ரோந்து சென்றுள்ளனர். அப்போது சந்தேகமடைந்த பொலிஸார் குறித்த இளைஞர்களிடம் விசாரணை செய்த போது இளைஞர்கள் பொலிஸாருடன் தகராற்றில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது முதலில் அந்த இடத்தில் இருந்து விலகிச்சென்ற பொலிஸார் சற்று நேரத்தின் பின்னர் அவ்விடத்துக்கு வந்து தகராற்றில் ஈடுபட்ட இளைஞர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 8 இளைஞர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக்காக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ-9)

## நாளை மறுதினம்...

உயிரிழந்த அரசியல் கைதிகளுக்கான நினைவேந்தலும் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகளான நிமலரூபன், டில்ருக்ஸன் இருவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தாக்குதலுக்குள்ளாகியதன் காரணமாக கடந்த 2012ஆம் ஆண்டு கொல்லப்பட்டனர். இவர்களுடைய 05ஆம் ஆண்டு நினைவேந்தலும், இதுவரை கொல்லப்பட்ட அனைத்து அரசியல் கைதிகளினதும் நினைவேந்தலும் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்ஆகிய இடங்களில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மேலும் அரசியல் கைதிகள் இல்லையென அரசாங்கம் கூறுவதோடு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாக வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்ற நிலையில், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இவர்களை விடுதலை செய்ய மாட்டோம் என நீதிமன்றுக்கு சவால் விட்டுள்ளார். இவரது கருத்தினை கண்டிப்பதுடன், அரசியல் கைதிகள் தொடர்பில் அரசு அரசியல் தீர்மானம் எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்த நினைவேந்தல் அனுஷ்டிப்பு மற்றும் கவனயீர்ப்பு போராட்டம் நாளை மறுதினம் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலை 9 மணிக்கும் கிளிநொச்சியில் காலை 10 மணிக்கும் யாழ்ப்பாணத்தில் பிற்பகல் 3.30 க்கும் நடைபெறவுள்ளது.

மேற்படி போராட்டத்திற்கு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை தீர்வுகளில் களத்தில் நிற்போரும் ஆதரவு சக்திகளும் இணைந்து குரல் எழுப்பி ஒன்று திரளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டில் மரம் வெட்டி...

றுள்ளனர்.

மேற்படி சம்பவமானது கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு இடம்பெற்றுள்ளது இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வனவளதிணைக்களத்தின் பூநகரி வட்டார அலுவலகத்தில் இருந்து மேற்படி பிரதேசத்திற்கு கள விஜயம் மேற்கொண்ட வனவள திணைக்கள பகுதி வன அதிகாரி மற்றும் அலுவலர்கள்சென்றபோது மரம் அரியும் இயந்திரத்தின் ஒலி காட்டுப் பகுதியில் கேட்டுள்ளது. அதனை தொடர்ந்து வனவள அலுவலர்கள் காட்டுக்குள் தேடுதல் நடத்தியபடி சென்றுள்ளனர்.

கிராமத்தில்இருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் அளவில்அடர்ந்த பல பெறுமதியான மராங்களை கொண்ட பகுதியில் ஐந்துக்கும் மேற்பட்டவர்கள்மூன்று மரம் அரியும் இயந்திரத்தை பயன்படுத்தி சட்டவிரோதமாக மரங்களை வெட்டிஅவற்றை பலகைகளாக அறுத்துக்கொண்டிருப்பதனை அவதானித்துள்ளனர். இதன்போது சட்டவிரோத மரம் கடத்தல் காரர்கள் தப்பிச்செல்ல முற்பட்ட போது அவர்களை பிடிக்க வனவள அலுவலர்கள் முயற்சித்துள்ளனர்.



அவ்வேளையில் ஏற்பட்ட கைகலப்பில் மரம்வெட்டிய நபர்கள் தாம் வைத்திருந்த இயந்திரம் மூலம் அலுவலரின் கையில் வெட்டிவிட்டு இயந்திரத்தையும் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அவற்றில் இரண்டு இயந்திரத்தை மரம் வெட்டிய நபர்கள் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளதுடன் ஏனைய அலுவலர்களையும் தாக்கியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த வனவள அலுவலர் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களில் ஒருவர் ஏற்கெனவே நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப் பட்டவர் என வனவள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பூநகரி முட்கொம்பன் பிரதேசத்தின் அடர்ந்த காட்டுப்பகுதியில் முதிரை, பாலை போன்ற பெறுமதியான நீண்ட காலம் முதிர்ந்த மரங்கள் காணப்படுகின்றன.

இவற்றை இலக்கு வைத்து அப்பகுதியில் நீண்ட காலமாக சட்ட விரோதமாகமராங்கள் வெட்டப்பட்டு வருகின்றமை தொடர்பில் பொது மக்களினால் அனைத்து தரப்பினரதும் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (செ-312)


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள Dynamlc Holdings (Lanka) PVT LTD நிறுவனத்தின் 3ஆவது கிளைக்கு வேலையாட்கள் தேவை.

பயிற்சியளிக்கப்பட்டு உள்வாங்கப்படுவர். பயிற்சிக்காலத்தில் ஆரம்ப சம்பளமாக 15000 - 25000 மும் பின் நிரந்தரமாக்கலுடன் 45000 - 60000 வரை அடிப்படை சம்பளம் வழங்கப்படும், ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உற்சாகமும் துடிப்புமிக்க இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகைமை - G.C.E O/L. A/L

தங்குமிட வசதிகள் உண்டு

தொடர்புகளுக்கு : 0768442821 / 0776644442

No. 74, Kannathiddy Road, Jaffna. (049)

## Techno world

(மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி அருகாமை, புதிய லிங்கம் கூல்பார் அருகாமை)

A/L தொழில்நுட்ப பிரிவில் பாடசாலை மட்டத்தில் முதலிடத்தை பெற்ற எமது மாணவர்கள்

2019 A/L

| No | Name | Rank | School | Marks | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Bio-Tec | SFT | தெரிவுப் பாடம் |
| 01 | லாவண்யா | 1st | J/KHC | 90 | 85 | 90 |
| 02 | சந்துயா | 1st | J/MHC | 88 | 86 | 83 |

புதிய கிளை:-யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களுக்காக யாழ் Town இல்

A/L தொழில்நுட்ப பிரிவு

A/L-2018, 2019

A/L 2019-புதிய பிரிவு

ஆரம்பம்-(06.08.2017), ஞாயிறு காலை 9.00, 3.00

தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)

சக்தி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)

பிரபல ஆசிரியர்

ஜெகநாதன் (விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி)

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio-Tec)

திருக்குமரன் (நெல்லியடி மகா வித்தியாலயம்)

ICT

உமாகாந்தன் BIT (யா/மத்திய கல்லூரி)

விவசாய விஞ்ஞானம்

விஸ்ணுவர்த்தன் (யா/வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி)

GROUP Class, தனிப்பட்ட வகுப்புக்கள் அமைத்து தரப்படும்

0770175346

Note:-(தொகுதிப் பாடங்கள் அனைத்தும் நடைபெறும்)
விரும்பிய பாடங்களை மட்டும் கற்கமுடியும்

எமது கிளைகள்:-கொக்குவில் (குளப்பிட்டிச் சந்தி)
அச்சுவேலிச் சந்தி (யூனியன் வங்கி அருகாமை)
புத்தூர்ச் சந்தி (நெஸ்லே அருகாமை)
நெல்லியடிச் சந்தி (NSB அருகாமை) (C-9254)

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் முன்னணி நிறுவனமான US International Company தனது புதிய கிளையை திறக்கவுள்ளதால் அதற்கான பதவி வெற்றிடங்களுக்காக பின்வரும் இடங்களில் இருந்து கோரப்படுகின்றன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி

**வரவேற்பாளர் - Trainee, விநியோகஸ்தர் - Trainee, முகாமையாளர்- Trainee, கிளை முகாமையாளர்- Trainee** இவற்றுக்கு

- முன்அனுபவம் அவசியமற்றது.
- வயதெல்லை 18 - 30.
- O/L, A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- 03 தொடக்கம் 06 மாதகால பயிற்சி நெறி.
- பயிற்சியின் போது ஊக்குவிப்புத் தொகை 12000/-
- பயிற்சியின் பின் நிரந்தர வருமானம் 65000 +
- மருத்துவ காப்பீடு, ETF, EPF உட்பட
- வெளிமாவட்டங்களில் இருந்து வருவோருக்கு முன்னுரிமை.
- தங்குமிட வசதி இலவசம்.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா இவ் இடங்களில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

**கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் : 0777009820**

**மன்னார் : 0770095294** (044)

## வீடு வாடகைக்கு

யாழ். வைத்தியசாலை, புகையிரத நிலையம், பஸ்நிலையம் போன்ற இடங்களை அண்மித்ததாக அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777110281 (041)

## MATHS PERSONAL CLASSES

தரம் 6-11 வரையான மாணவர்களிற்கான பிரத்தியேக கணித வகுப்புக்கள் (ஆங்கில மற்றும் தமிழ்மொழி மூலமான) வீடு வந்து நேர்த்தியாக மற்றும் இலகுவான முறையில் கற்பிக்கப்படும். எத்தகைய மாணவராயினும் குறித்த ஓர் தவணைக்குள் சிறந்த அடைவினை பெறுவதற்கான முறையில் கற்பிக்கப்படும். (046)

தொடர்பிற்கு:-0774540529, 0772369133

Mr.S.Tharshan (Jaffna Central College)

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-9256)




CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062

follow us : cnrworldwideexpress

## காணி விற்பனைக்கு

ஈச்சமோட்டையில் வீட்டுடன் கூடிய 4 பரப்புக் காணியும், கச்சேரி A9 வீதியில் 3 1/4 பரப்புக் காணியும், கைதடி வடக்கு மாகாண சபைக்கு முன்பாக 2 பரப்பு காணியும், அல்லைப்பிட்டி பீச் றோட்டில் 43 பரப்புக் காணியும் விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 546 5660 (043)

இதோ ஓர் அரிய வாய்ப்பு...!

இதுவரைக்கும் 3200 முன்பள்ளி டிப்ளோமாதாரிகளை உருவாக்கிய நிறுவனத்தில் கல்வி பயின்று டிப்ளோமாதாரியாக மாறி சாதனை படைத்திட வாரீர்!!!

**ஆறுதல் நிறுவனத்தின் 2016/2017ஆம் ஆண்டுக்குரிய முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

எமது பலம்

- கல்வி அமைச்சு மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
- பயிற்றப்பட்ட சிறந்த வளவாளர்கள்.
- நவீன முறையிலான கற்றல் கற்பித்தல் செயன்முறை வகுப்புகள்.
- பயிற்சிக்காலம்-ஒரு வருடம் (வார இறுதி நாட்களில் விரிவுரைகள் இடம்பெறும்)

முன்பள்ளி ஆசிரியர்கள் க.பொ.த சாதாரண சித்தியுடனும் ஏனையவர்கள் க.பொ.த உயர்தர சித்தியுடனும் விண்ணப்பிக்க முடியும்

**உங்கள் விண்ணப்ப படிவங்களை**

**முன்பள்ளி ஆசிரியர்கள்**

தமது வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) ஊடாகவும் ஏனையோர்

**இல.51 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் அமைந்துள்ள எமது நிறுவனத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:-021 221 7092**

விண்ணப்ப முடிவுத் திகதி:-20.08.2017

உங்கள் விண்ணப்பப் படிவங்களை (www.aaruthal.lk) எனும் இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-9258)

## WIN Repair

ACகளும் சகல விதமான குளிர் சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். (047)

T.P-0779648942

அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com (C-9232)

கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

உடுவில் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள 5 பரப்பும் 15.5 குளியும் கொண்ட காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0777755175 (025)

## குளிரூட்டிகள் விற்பனைக்கு

மிக நல்ல நிலையிலுள்ள சிறிய பெரிய பிறீசர்கள், பெரிய கண்ணாடி பிறிச் மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 237 7469 (019)

## காணி விற்பனைக்கு

மீனாட்சி அம்மன் வீதி கொட்டடியில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (035)

தொடர்புகளுக்கு : 076 547 1308

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள வீடு ஒன்றிற்கு சமையல் வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை.

■ வேலைக்கு காலை வந்து மாலை போகலாம் அல்லது தங்கி நின்றும் வேலை செய்யலாம்.

தொடர்பு: 0768514296 (026)

## முகாமைத்துவ உதவியாளர் தேவை

வெளிநாட்டு மொழி கற்பிக்கும் நிறுவனத்திற்கு A/L 3 சித்தியுடன் 6km க்குள் வசிக்கும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளோர் நாளை (07.08.2017) திங்கள் 10.30 மணிக்கு CV யுடன் நேரில் வரவும்

No. 40, Palaly Road, ஆரியகுளம்.

T.P : 0779 789 456. (C-9267)

## காணி விற்பனைக்கு

மருத்துவ பீடத்துக்கு அண்மையில் பொற்பதி வீதிப் பிள்ளையார் கோயிலை அடுத்து உள்ள ஒழுங்கையில் 2 1/4 பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்**

**0766399277** (048)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண்,மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9206)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378
வாரமலர்
நாதம் 129

# வலம்புரி

சங்குநாதம்
வள்ளுவர் ஆண்டு 2048 06.08.2017 தொலைபேசி : 021 222 3378

# மீண்டும் அச்சம்




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## தனிமனிதரைத் தாக்கி மாகாண சபையில் உரையாற்ற முடியுமா?

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**பண்டிதர்:**எல்லாம் ஒரே குழப்பமாக இருக்குது. நீதிபதியை நோக்கிய துப்பாக்கிச் சூடு, கொக்குவிலில் பொலிஸாருக்கு வாள்வெட்டு, மீண்டும் விசேட அதிரடிப் படையினர் குவிப்பு , பொலிஸார் மிக மோசமாக நடப்பதாகக் குற்றச்சாட்டு. இப்படியே எல்லாம் கந்தறுந்து காவடி எடுபடுகுது.

**விதானையார்:** அது சரி, வடக்கு மாகாண சபையின்ர எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். இந்தக் குழப்பங்களுக்கு வடக்கு மாகாண சபையும் காரணமெண்டு .

**மூப்பர்:** வடக்கு மாகாண சபை காரணம் எண்டால் அவரும் காரணம் எண்டது தானே பொருள்.

**கங்காணி:** சீசீ... அவர், ஆளும்தரப்பு, அவைத் தலைவர் எல்லோரும் இப்ப ஒண்டல்லோ. வடக்கு மாகாண சபை எண்டு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுவது தனித்து வடக்கு மாகாண முதலமைச்சரைத்தான்.

**மூப்பர்:** அட சங்கதி அப்படியோ. அப்ப வடக்கு மாகாண சபையில இருக்கிற மற்றைய உறுப்பினர்கள் முதலமைச்சரைக் குழப்பவும் மாகாண சபைக்குரிய சலுகைகளைப் பெறவுமோ.

**சாத்திரியார்:** இப்ப யாழ்ப்பாணத்தில நடக்கிற வாள்வெட்டுச் சம்பவங்கள் எல்லாவற்றுக்கும் வடமாகாண சபையும் காரணம் எண்டு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுறதை தனிய, வடக்கு மாகாண முதலமைச்சர் என்பதைத்தான் குறிக்கிறது எண்டு நான் நினைக்கல்ல. எதிர்க்கட்சித் தலைவர், எல்லா ஆளும் கட்சி உறுப்பினர்களையும் தான் சொல்லுறார் எண்டு தான் நான் நினைக்கிறன்.

**கங்காணி:** சாத்திரியார் சொல்லுறது சரி எண்டால் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் விட்ட அறிக்கைக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள், அவைத் தலைவர் எல்லாரும் மறுப்பு விட்டல்லோ இருக்க வேணும்.

**சாத்திரியார்:** சிலவேளை அடுத்த சபைக்கூட்டத்தில எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராகக் கதைப்பினமாக்கும்.

**விதானையார்:** சாத்திரியார் எங்கட வடக்கு மாகாண சபையில எதிர்க்கட்சித் தலைவற்ற கருத்துக்கு மறுத்தான் கொடுக்கிற தெண்டால் அது உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், ஐங்கரநேசன், கலாநிதி சர்வேஸ்வரன், திருமதி அனந்தி இவையலல்லாது மற்றவர்கள் வாயும் திறப்பதில்லை.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். இப்ப வடக்கு மாகாண சபையின்ர எதிர்க்கட்சித் தலைவருக்கு இராஜமரியாதை.

**வாத்தியார்:** அது சரி ஆலடி மாநாட்டில இண்டைக்கு ஒரு ஐயத்தை தெளிவு படுத்தவேணும்.

**பண்டிதர்:** வாத்தியாருக்கு என்ன ஐயம்.

**வாத்தியார்:** வடக்கு மாகாண சபையில எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து நின்று ஒரு பாடசாலை அதிபர் பற்றி கண்டபாட்டிலை கதைத்திருக்கிறார், பச்சைப் பொய் சொல்லுகிறார். இது தொடர்பில சம்பந்தப்பட்ட அதிபர் வடக்கு மாகாண சபை அமர்வொன்றில தோன்றி தன்பக்கத்து நியாயத்தை- உண்மையை தெரிவிக்க முடியுமா? இதற்கு மாகாண சபை நியமங்களில ஏற்பாடு இருக்கிறதா?

**பண்டிதர்:** மாகாண சபையில தனிநபர் ஒருவர் தோன்றி விளக்கம் கொடுக்கிற ஏற்பாடுகள் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் பதில் அளிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாத ஒருவரைப் பற்றி மாகாண சபையில எதிர்க்கட்சித் தலைவர் பேசுவது எந்த வகையில நியாயம். இதற்கு அவைத்தலைவர் எப்படி சந்தர்ப்பம் கொடுத்தவர். மாகாண சபையில எதிர்க்கட்சித் தலைவர் நீட்டோலை வாசிக்க முன்னதாகவே தான் எழுதின நீட்டோலையை ஊடகங்களுக்கு அனுப்பிப் போட்டார்.

**விதானையார்:** ஒரு பாடசாலையின்ர அதிபரைக் குறிப்பிட்டு அவர் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் வடக்கு மாகாண சபையில கூறின அத்தனை விடயங்களும் உண்மைக்குப் புறம்பானவை. அரசியல் பழி தீர்க்கும் நோக்கில அவர் பேசியிருக்கிறார். இது தொடர்பில சம்பந்தப்பட்ட அதிபரின் உண்மையான கருத்துக்களை அந்த அதிபர் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு எப்படித் தெரிவிக்க முடியும், வடக்கு மாகாண மக்களுக்கு எப்படி அறிவிக்க முடியும் எண்டு வாத்தியார் கேட்கிறதில நியாயம் இருக்கத்தான் செய்யுது.

**பண்டிதர்:** அப்ப நாங்கள் ஒரு கோரிக்கைக் கடிதத்தை வடக்கு மாகாண அவைத் தலைவருக்கு அனுப்பி வைப்பம்.

*கௌரவ அவைத் தலைவர் ,*
*வடக்கு மாகாண சபை.*

*மேற்படி இவ்விடத்தில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் குறித்த ஒரு அதிபர் தொடர்பில் தனிமனித உரிமையை மீறும் வகையில் சபையில் உரையாற்றியிருக்கிறார். ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய இடத்தில் ஜனநாயகம் மீறப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரின் உரை திட்டமிட்டதும் அரசியல் பழிவாங்கும் நோக்குடனும் கூறியது என குறித்த அதிபர் கருதுகிறார்.*

*எனவே உண்மையை நிலைநாட்ட, எதிர்க்கட்சித் தலைவரின் சதியை முறியடிக்க சம்பந்தப்பட்ட அதிபர் தனது தரப்பு நியாயத்தை, கருத்தை வடக்கு மாகாண சபையில் தோன்றித் தெரிவிக்க ஏதேனும் ஏற்பாடுகள் இருப்பின் அதனை ஆலடி மாநாட்டிற்கு அறியத் தருமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறான ஏற்பாடுகள் இல்லாதவிடத்து மாற்றுவழி பற்றிய தங்களின் மேலான ஆலோசனையையும் தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.*

*இங்ஙனம்*
*பண்டிதர் பரமலிங்கம்,*
*தலைவர், ஆலடி மாநாடு.*

**விதானையார்:** வடக்கு மாகாண சபைத் தலைவருக்கு இந்தக் கடிதத்தை அனுப்பி வைக்கிறது நல்லது. இதை ஆலடி மாநாட்டில் ஏகமனதாக தீர்மானிப்பம்.

(விதானையார் இப்படிக் கூறியதும் மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.)

**வாத்தியார்:** சரி... சரி... பொழுது சரியும் நேரம் வந்திட்டுது. இப்ப உயர்தரப் பரீட்சைக்காலம் எண்டபடியால வடக்கு மாகாணத்தில மின்சாரம் கட்டாயம் தடைப்படும். அதனால கோயிலுக்கு போயிற்று கெதியா வீட்டிற்குப் போவம்.

**சாத்திரியார்:** வாள் வெட்டுமல்லோ நடக்குது...

சாத்திரியார் இப்படிக் கூற அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவக் குவிப்பு சுமுகமான நிலையை ஏற்படுத்துமா?



தற்போதுள்ள நல்லாட்சி அரசாங்கமும் சரி கடந்த காலத்தில் இருந்த மகிந்த அரசாங்கமும் சரி இராணுவத்தை நம்பியே தனது செயற்பாடுகளையும் மக்களுக்கான சேவைகளையும் மேற்கொண்டு வருகிறதாக பல்வேறு தரப்புகளாலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான கருத்துக்களுக்கு எல்லாவிதமான பிரச்சினைகளிலும் பாரபட்சமின்றி இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு வருகின்றமையே காரணமாக அமைகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவிற்கு இலங்கை இராணுவத்தின் தலைமைப் படைத்தலைவர் பதவி கொடுக்கப்பட்டமையே இந்த குற்றச்சாட்டுக்களுக்கு வித்திட்டுள்ளதாக சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் தொடர்பான அனைத்து விடயங்களிலும் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டமையானது அரசியல் காய்நகர்த்தலாகவே சமூக ஆர்வலர்களால் நோக்கப்படுகிறது.

இலங்கையின் ஏனைய பகுதிகளை விடவும் வட மாகாணம் என்பது மிகவும் கலாசார தொன்மை மிக்க பகுதியாக அடையாளப்படுத்தப்படுகிறது. அதிலும் குறிப்பாக யாழ்.மாவட்டம் கலாசாரத்தை உயிர் மூச்சாக கொண்டு விளங்கும் மாவட்டமாக காணப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது யாழில் வாள்வெட்டுச் சம்பவங்கள், துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள், போதைப்பொருட்கள் பாவனை என்பன அதிகரித்து காணப்படுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக யாழில் படையினர் குவிக்கப்பட்டுள்ளதுடன் யாழிலிருந்து படையினரை வெளியேற்றும் செயற்பாட்டிற்கு இந்த கலாசார சீரழிவானது முட்டுக்கட்டை போட்டுள்ளது.

வட மாகாண முதலமைச்சர் தொடர்ச்சியாக வடக்கிலிருந்து இராணுவத்தினரின் வெளியேற்றத்திற்கு ஆதரவு தெரிவித்து வந்த நிலையிலும், மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கிச்சூட்டு சம்பவமானது அனைவரையும் ஒரு கணம் உறைய வைத்துள்ளது.

யாழில் நடைபெற்று வரும் கலாசார சீர்கேடுகளை தடுத்து முற்றுப்புள்ளி வைத்து, யாழில் பெண்கள் நள்ளிரவு 12 மணி வரையிலும் தனியாக செல்லும் சுதந்திரம் கிடைக்கும் வரையில் தான் இங்கிருந்து அசையப் போவதில்லை என தெரிவித்திருந்த நீதிபதி இளஞ்செழியன் இலக்கு வைக்கப்பட்டமை மற்றும் யாழில் கடந்த சில நாட்களாக தொடரும் தாக்குதல் சம்பவங்கள் அனைவரையும் தற்போது இருள் சூழ தொடங்கும் முன்னதாகவே வீட்டிற்குள் முடங்க வைத்துள்ளது.

இந்த சம்பவங்கள் யாழிலிருந்த இராணுவத்தினரின் வெளியேற்றத்தை தள்ளிப் போட்டுக் கொண்டே செல்கிறது எனலாம். அத்துடன் காலம் செல்லச் செல்ல வடக்கில் படையினரின் ஆதிக்கமும் பரம்பலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் கடந்த வாரம் பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள் மூன்று நாட்களாக மேற்கொண்டு வந்த



பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் நாடு முழுவதும் ஸ்தம்பிதம் அடைந்து போன நிலை ஏற்பட்டது.

இருப்பினும் எரிபொருள் அத்தியாவசிய சேவையாக அறிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை மீண்டும் பணிக்கு திரும்புமாறு அறிவித்ததுடன், பணிக்கு திரும்பாத ஊழியர்கள் தாமாகவே பணியிலிருந்து விலகியதாக கருதப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வதற்காக படையினரை களத்தில் இறக்கியது அரசாங்கம். இது ஒரு புறம் இருக்க இறுதி யுத்தத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் படையினர் மீது தொடர்ந்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

கடந்த வேலைநிறுத்தம் போன்ற மனித உரிமை கோரல் போராட்டங்கள் நடைபெற்ற போது அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டதே தவிர அதனை அடக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

படையினர் மீது விசாரணைகள் நடத்துவதற்கு ஒரு போதும் அனுமதி வழங்கப் போவதில்லை என இப்போதுள்ள அரசாங்கமும், கடந்த காலத்தில் இருந்த அரசாங்கமும் வலியுறுத்தி வந்தன.

எல்லா விடயங்களிலும் வெளிப்படையாக மோதிக்கொள்ளும் மகிந்த அணியும், மைத்திரி - ரணில் அணியும் படையினர் விவகாரம் தொடர்பில் ஒற்றுமை போக்கையே கடைப்பிடித்து வருகிறது.

இந்த நிலையானது அனைவரது மனதிலும் சந்தேகத்தை எழுப்பும் விதத்தில் அமைந்து வருகிறது. இருப்பினும் ஜெனிவா பிரச்சினையில் இராணுவத்தினரை அரசாங்கம் காட்டிக் கொடுக்கும் என்றவாறான கருத்தும் நிலவி வருகிறது.

இந்த நிலையில் இவ்வாறு அனைத்து விடயங்களிலும் இராணுவத்தினரை உள்நுழைக்கும் செயற்பாடானது அரசாங்கம் ஒருபோதும் இராணுவத்தை காட்டிக்கொடுக்காது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் போதைப்பொருள் பாவனை, துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள், வாள்வெட்டு சம்ப வங்கள் மற்றும் கொள்ளை போன்ற சமூக விரோத செயற்பாடுகள் நடைபெறும் இடங்களில் இராணுவத்தி னரை குவிப்பதை விடுத்து பொலிஸாரை பயன்படுத்துவதே பிரச்சினைகளுக்கும், குற்றச் சாட்டுக்களுக்கும் நிரந்தர தீர்வி னைப் பெற்றுக் கொடுப்பதாக அமை யும் என சுட்டிக்காட்டியுள்ளனர்.


நன்றி இனையம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# பலம் எது? பலவீனம் எது



ஒரு காட்டில் நிறைய விலங்குகள் வசித்து வந்தன. அனைத்து விலங்குகளும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழ்ந்து வந்தன. அங்கே வசித்த மயில் மட்டும் எப்போதும் மற்றப் பறவைகள் மற்றும் விலங்குகளை பார்த்துப் பொறாமைப் பட்டுக்கொண்டே இருந்தது.

உதாரணத்திற்கு யானையைப் பார்த்து பெரியதாய் இருக்கிறது என்றும், மானை பார்த்து வேகமாக ஓடுகிறது என்றும் பொறாமைப் படும். இப்படியிருக்க ஒரு மழைகாலத்தில் அந்த மயில் அழகாக ஆடத்துவங்கியது. அப்போது பாட ஆரம்பித்த மயில் தன் மோசமான குரலை எண்ணி அழத்துவங்கியது.அப்போது அங்கு வந்த மைனா மயிலை சமாதானப்படுத்த அருகில் சென்றது. மயில் தனது வருத்தத்தை மைனாவிடம்கூற, மைனா மயிலிடம் நீ மிகவும் அழகாய் இருக்கிறாய், அதை நினைத்து நீ சந்தோசப்பட்டிருக்கிறாயா? என்றது. மயில் சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு இல்லை என்று பதில் கூறியது.

இதனை கேட்டு சிரித்த மைனா உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு சிறப்பும் வலிமையும் இருக்கும், அது என்ன என்பதை உணர்ந்து அதனை மேம்படுத்தவேண்டுமே அன்றி எது நம்மிடம் இல்லையோ அதை நினைத்து வருத்தப்படவோ பொறாமைப்படவோகூடாது என அறிவுரை கூறியது. தன் தவறை உணர்ந்த மயில் மைனாவிற்கு நன்றி தெரிவித்தது.

நம்மிடம் இருக்கும் பலத்தை பயன்படுத்தி நமது பலவீனத்தை எதிர்கொள்ள வேண்டுமென்பதே இக்கதையின் நீதியாகும்.



# பொது அறிவு

1. காகிதம் முதன்முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டது?
   **சீனா**
2. பால் பதனிடும் முறையைக் கண்டுப்பிடித்தவர் யார்?
   **லூயி பாஸ்டர்**
3. கிரேக்கர்கள் வணங்கிய சூரியக்கடவுளின் பெயர் என்ன?
   **அப்போலோ**
4. ஓமோன் இல்லாத உயிரினம் எது?
   **பக்றீரியா**
5. நூற்றாண்டு போர் எந்த இரு நாடுகளுக்கு இடையில் நடந்தது?
   **இங்கிலாந்துக்கும்—பிரான்சுக்கும்**
6. உயிர் வெள்ளி எனப்படுவது எது?
   **பாதரசம்**
7. இரும்பு லத்தீன் மொழியில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   **பெர்ரம்**
8. மிகவும் வேகமாக ஓடக்கூடிய மிருகம் எது?
   **சிறுத்தை**
9. இங்கிலாந்து ஒலிபரப்பு நிலையமான பி.பி.சி. எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
   **1900 ஆண்டு**
10. எக்ஸ்ரேயை கண்டுபிடித்தவர் யார்?
   **W.C.ராண்ட்ஜன்**


# விடுகதைகள்

1. மேலே பூ பூக்கும், கீழே காய் காய்க்கும். அது என்ன?
2. இருட்டில் கண் சிமிட்டும் ஆனால் நட்சத்திரமல்ல.அது என்ன?
3. வெளுத்த அழகி மஞ்சள் புடைவை கட்டியிருக்கிறாள்.அவள் யார்?
4. உதை வாங்கி, உதை வாங்கி ஊருக்கு சேதி சொல்வான்.அவன் யார்?
5. உருவம் இல்லாத ஒருவன், உலகெங்கும் உலவித் திரிவான்.அவன் யார்?
6. நடந்தால் நடக்கும், நின்றால் நிற்கும் அது என்ன?
7. நம்மைப்போல் இருக்கும், நாம் இறந்தாலும் இறக்காது. அது என்ன?
8. தலையில் வைக்க முடியாத பூ, சமையலுக்கு உதவும் பூ.அது என்ன?
9. நித்திரையின் தூதுவன், நினையாமல் வருவான். அவன் யார்?
10. வெளியே வெள்ளி, உள்ளே தங்கம். அது என்ன?

**விடைகள்**

1. வேர்க்கடலை, 2.மின்மினிப் பூச்சி
3. வாழைப்பழம் 4.தண்டோரா
5. காற்று 6.நிழல்
7. புகைப்படம் 8. வாழைப்பூ
9. கொட்டாவி 10.முட்டை

ஹாய் குட்டீஸ்!
இந்த முயல் கரட்டை சாப்பிடுவதற்கு உதவுங்கள் பார்க்கலாம்!





# சேவல்




கொக்... கொக்... கொக்...
கொக்கரக்கோச் சேவல் - அழகுக்
கொண்டை உள்ள சேவல்
உன் கொக்கரக்கோ உலகை எழுப்புகிறதே
(கொக்...)

கொள்ளையழகு இறகும் வாலும்
கொற்றவனாய் உன்னைக் காட்டும்.
கொக் கொக் கொக்காம்
கொக்கியால் கோழியை வளைக்கிறாய்.
(கொக்...)

கொண்டைச் சேவல் கொக்கரக்கோ
கொல்லையில் நின்று கூவுவாய்
கொக்கரக்கோ கொடியை ஏற்றி
கொக்கரித்து நாள் தொடக்கிறாய்
(கொக்...)

வெள்ளை, கறுப்பு.சேவல்
கொள்ளையிடும் கலப்பு நிறம்
உள்ளம் கவரும் கொக்கரக்கோ
உள்ளபடி ஒன்று தான்
(கொக்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








பள்ளிப் பருவத்தில் காதல் வேண்டுமா?

வீரம் துரோகத்தால் தோற்கடிக்கப்படுமா?

இலங்கை- இந்தியா டெஸ்ட் பற்றி?

**சுதன் — குப்பிளான்**

**நல்லாட்சி என்று சம்பந்தன் ஐயா சொல்கிறார்களே அது உண்மையா?**

காணாமல் போன உறவுகளின் போராட்டம் நூறு நாளைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. 2017 ஓகஸ்ட் நடந்து கொண்டிருக்கிறது. அரசியலமைப்பு சீர்திருத்தம் அடியில் போடப்பட்டு விட்டது.

நடக்கும் அத்தனை கொலை, கொள்ளைகளுக்கும் முன்னாள் போராளிகளே பொறுப்பு. சர்வதேச, போர்க்குற்ற விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை. இவற்றை எல்லாம் கேட்ட பின்பும் இப்படிக் கூறிக்கொண்டிருந்தால் நாமென்ன செய்ய முடியும்.

**சிந்துவர்மன் — அல்வாய்**

**பணம், சொத்துக்காக உறவுகளை உதறியெறிபவர்கள் பற்றி?**

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சொத்துப் பிரிப்பதற்காக நீதிமன்ற படி ஏறுகிறார்கள் எனின் நாம் எப்படிப்பட்ட சமூகத்தில் வாழ்கின்றோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

பணம், சொத்து அதிகமாக இருந்தாலும் பிரச்சினை, இல்லை என்றாலும் பிரச்சினை. ஒரு காலத்தில் அண்ணனுக்காக தம்பியும் தம்பிக்காக அண்ணனும் பரம்பரை சொத்துக்களை விட்டுக் கொடுத்த காலம் போய் தமக்குள் பிரிப்பதற்காக அடித்துக்கொள்ளும் நிலையில் வந்து நிற்கிறோம். அவ்வளவுதான்.

**சகானா — மானிப்பாய்**

**இலங்கையின் நிலைப்பாடு எப்படி இருக்கிறது?**

புலிப் புரளி

**மதன் — வரணி**

**தத்துவம் பிளீஸ்?**

மதிப்பில்லை என்றாலும் சில்லறைகளே பொக்கட்டை கனமாக்குகின்றன. எங்கேயோ படித்த ஞாபகம்.

**டிலக்‌ஷன் — நவாலி**

**இலங்கை- இந்தியா டெஸ்ட் பற்றி?**

பத்து வருடங்களுக்கு முன்பிருந்த இலங்கை அணி இப்போது இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. இந்திய அணியின் அபார வளர்ச்சியும் கோலியின் விடாமுயற் சியும் இந்திய அணியை வெற்றிகள் நோக்கி நகர்த்துகின்றது. இலங்கை அணியில் பாரிய எழுச்சி தேவை. அந்த எழுச்சியைக் கொடுக்க வல்லவர்களாக ஹப்புகெதர, மத்தியூஸ், பெரேரா போன்றவர்கள் உள்ளனர் மீதமுள்ள போட்டிகளில் எழுச்சி உண்டா பொறுத்திருந்து பார்ப்போம்.

**தர்சி — மாதனை**

**அடுத்தவர்களின் வளர்ச்சியை கண்டு பொறுக்க முடியாமல் துரோகம் செய்பவர்கள் பற்றி?**

ஒரு அடி ஆழத்தில் நாட்டப்படும் மரங்களின் வேர் பத்து ஆண்டுகளின் பின் அப்படியே இருப்பதில்லை. வேர்களின் முயற்சி நீரைத் தேடிச் செல்வது அதாவது வெற்றியை நோக்கிய பயணம்.

இவைதான் வாழ்க்கை. நாம் முயற்சி செய்யாமல் மற்றவர்களின் வளர்ச்சியை கண்டு பொருமுவது முறையல்ல. ஏனென்றால் வெற்றி எப்போதும் முயற்சியுடையவர் பக்கம் தான் நிற்கும்.




**வீனஸ் — நல்லூர்**

**உங்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த விடயம்?**

சிறிய ஒப்பரேசன் தான் பயப்படத் தேவையில்லை என டாக்டர் நம்பிக்கை ஊட்டினார் வாள் வெட்டுக் குழுத் தலைவனுக்கு.

**கலை — மிருசுவில்**

**அண்மையில் தங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது?**

அண்மைக்காலமாக ஆபிரிக்க நாட்டில் மொட்டத் தலை உள்ளவர்கள் பலர் மர்மமான முறையில் தலையில் பயங்கரமாக தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

பொலிஸாரின் விசாரணையில் அதிர்ச்சி. வழுக்கைத் தலை இருப்பவர்களின் மண்டைக்குள் தங்கம் இருப்பதாக வந்த வதந்தியை நம்பி அப்பாவிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நல்ல வேளை இங்கு இப்படி ஒரு வதந்தி பரவவில்லை. பரவியிருந்தால்...

**சயன் — யாழ்ப்பாணம்**

**கூட்டமைப்பின் நிலை என்ன?**

நிபந்தனைகள் எதுவுமின்றி குருட்டு நம்பிக்கையில் அரசுக்கு ஆதரவு வழங்கிய கூட்டமைப்பின் தலைமை இப்போது தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வரையாவது ஜனாதிபதி -பிரதமர் இணைந்து செயற்பட வேண்டும் என்கிறது.

நிபந்தனை இன்றிய ஆதரவு வேண்டாம் என்று தொண்டைத் தண்ணீர் வற்றும் வரை கத்திக் கத்திசொன்னோம் நடந்ததா? எதிர்க்கட்சித்தலைமைக்கு ஆசைப்பட்டு தமிழர் எதிர்காலத்தைப் பாழாக்கி விட்டோம் அவ்வளவு தான்.

**கவி — மானிப்பாய்**

**வீரம் துரோகத்தால் தோற்கடிக்கப்படுமா?**

2009 இல் அதுதானே நடந்தேறியது; போர்க்களத்தில் தனது படைகளை இழந்து கையில் இருந்த ஆயுதம் அத்தனையும் இழந்து நிராயுதபாணியாய் நின்ற இராவணனை இன்று போய் போருக்கு நீ நாளை வா என்றானே இராமன் இதுதானையா வீரம். வீரத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் உதாரணமாக இதை விட வேறு எதனையும் கூறிவிட முடியாது.

**அபிராஜ் — அச்சுவேலி**

**பள்ளிப் பருவத்தில் காதல் வேண்டுமா?**

பள்ளிப்பருவம் அல்ல வேறு எந்தப் பருவத்திலும் அந்தக் கண்றாவியை தூக்கி ஒரு பக்கத்தில் போட்டுவிட்டால் வாழ்க்கை பிரகாசமாய் இருப்பது உண்மை.

**கமல் — நெல்லியடி**

**உயிருக்கு இல்லாத மதிப்பு பணத்திற்கு ஏன் இருக்கிறது?**

மனிதனால் உருவாக்கப்பட்டவற்றில் மனிதனை அழிக்கும் அளவிற்கு பாரிய வளர்ச்சி அடைந்தது பணம் மட்டும்தான்.

அதனால் தான் பணம் பாதாளம் வரை பாயும் எனச் சொன்னார்கள் நம் முன்னோர்.

**ரஜீ — வல்வெட்டித்துறை**

**எட்டில் ஐந்து எண் கழியும் என்றால் ஐந்து எட்டில் ஏன் கழியாது. இதன் அர்த்தம்?**

சைவத்தில் நமசிவாய என்பது ஐந்தெழுத்து மந்திரம். வைஸ்ணவத்தில் ஓம் நமோ நாராயணா என்பது எட்டெழுத்து. இதை மையமாகக் கொண்டுதான் வைஸ்ணவரான கூமல் அந்த கேள்வியை சோழ மன்னனிடம் கேட்கிறார்.

**ஜெனீபா — கொக்குவில்**

**பிரபாகரன் பற்றி சொல்லுங்க?**

அடுத்த வாரம் நான்காம் மாடி பற்றிச் சொல்ல வேண்டிவரும் பரவாயில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

### என்னூர் அழகு

பச்சிலை மண்ணிலே
பனைமரக்கூட்டங்களும்
தென்னம் தோப்பிலே
தென்றலின் துள்ளிசைக்
கானமும் செம்மையே...
பசுமைக் குடில் வயல் வெளிப்
போர்வையும்
பனித்துளி படிந்த
பச்சைப்புல் நிறைந்த
பல் பயிர் தோட்டமும்
உய்த்த மண் மணலே...
இலைக்கறி நிறைந்த
இயக்கர் வாழ்ந்த
இயக்கச்சி நிலமும்
நன்னீர் வளம் நிறைந்த நம்
மண்ணில் நீர் உறிஞ்சும்
மணச்சிறப்பும் அழகே...
செந்தாமரை உறங்கும்
இன்னாசி குளத்தின்
இன்னிசை தென்றலாய்
குளிர்வாடைக் காற்றிலே
அசைந்துவரும் அலை
எனைக்கூடவே அழைக்கும்
கும்மாளம் இடுவதற்கே...
தோகை மயில் கூடியிருக்கும்
சோலைவனக் காடுகளும்
மான் விழி மங்கை
மருதாணி தேடிவரும்
கானங்கோழி கதைப்பேச்சும்
நம்மூர் அழகே...

**ந.நிரோசன்**
**முல்லையடி, பளை**

### நாகரிக மாற்றம்

கண் இமைகளில் பல வெட்டு
ஒற்றைக்காதில் தொங்கு தோடு
கழுத்திலோ முத்துமாலை
விரல்களில் வெள்ளி வளையம்
காற்றில் பறக்கும் நீண்ட கூந்தல்
அதனைப் பேண இரட்டைப் பின்னல்
தண்ணீர் காட்டாத ஜீன்ஸ்
வாயிலே குச்சிப் புகையோடு
மோட்டார் சைக்கிளில் ஜெட்வேகம்
அட...அட... அடடா...
நாகரிகக் காலம் என்பதனால்
பெண்களே வியக்கும் வகையில்
நல்லாவே முன்னேறி விட்டார்கள்
வாலிபப் பயலுகள்

**முல்லை அனுமிகா**

### எங்களுயிர் தமிழ்

எங்கள் தமிழ் என்றும்
அது இன்பத் தமிழ்
என்றும் எங்கள் இனிய தமிழ்
புகழ்பாடும் எங்கள் தமிழ்பாடும்
அந்தத் தமிழெங்கள்
உயிராகும்
ஒளவைப்பாட்டி காத்துவந்த
எங்களுயிர் தமிழங்கே
வெள்ளைக்கார ஆட்சியாக
மாறிப்போகும் காட்சியிங்கே
ஆறுமுகநாவலரும்
காத்துவந்த எங்கள் தமிழ்
மம்மி டாடியாச்சு
எங்கு போச்சு பழம் பேச்சு
அரும்பதங்கள் நிறைந்த தமிழ்
இலக்கணங்கள் குவிந்த தமிழ்
புலவர்களை வளர்த்த தமிழ்
பெருமைகளைத் தந்த தமிழ்
தமிழ் எங்கள் உயிராகும்
அந்த உயிர் எங்கள் உயிராகும்
களிப்புட்டு தொலைந்ததே
உளுத்தங்களியும் மறைந்ததே
பலாக்கொட்டை துவையல் எங்கே
பனங்களியின் பண்டமெங்கே
குருத்தோலைப் பாயெங்கே
கும்மி நடனமெங்கே
வாயென்று வரவேற்கும்
எங்கள் தமிழ் பண்பெங்கே?
ஆச்சி அப்பு உண்ட எங்கள்
அரும் சுவையெங்கே?
ஆட்டுக்கல்லு திருகையிலே
அரைச்சமாவுப் பண்டமெங்கே?
ஒடியல் கூழும் எங்கே?
கூடி வாழ்வதெங்கே?
முன்னோர்கள் பேணி வளர்த்த
இனிய தமிழ் எங்கே?

**கவி R. மணிமாறன்**

### கடந்த காலத்துடன்...

ஏங்கி ஏங்கி
உயிரைக் கையில் பிடித்து
தாங்கிய உடல் இது!

பாணுக்கு வரிசை
பசிபோக்க வழியின்றி
ஓடித் திரிந்தோம்

எப்போது வானிலிருந்து– என்ன
கொட்டும் என்று தெரியாமல்
எப்போதுமே
அண்ணாந்து பார்த்தபடி...

வரப்புயர்த்தினோம்
வானை அண்ணாந்து பார்த்தோம்
விதைவிதைக்க மழை வருமென,
மழையல்ல எம் உயிரைக் குடிக்க
கழுகுகள் வந்தன!

சூரியன் அஸ்தமித்தால்
எங்குமே இருள்மயம்
எரிபொருள் எமக்கு
எட்டாக்கனியானது!

குருவிகள் பறக்கவே
உரிமைகள் இருந்தது
மனிதர் நாம் குருவிகளாகி
கூண்டடைபட்டோம்

பட்டினி கிடந்தாலும்
குண்டுமழை பொழிந்தாலும்
கூண்டடைபட்டாலும்
எம்மவர் என்றொரு
எண்ணமிருந்தது

அப்போது எதுவுமே இல்லை!
ஆனால் நிம்மதி இருந்தது!
இப்போது எல்லாம் இருக்கிறது
நிம்மதியைத் தவிர!

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 363



### எம் மண்டையைக் குடைகிறதே

பாவப்பட்ட ஜென்மங்களாய்
பாரினில் பிறந்த
இரு உயிர்களின் நட்பு
எம் நெஞ்சினில் அன்பைச்
சுரக்கத்தான் செய்கின்றது
ஆனால்
மனித வாழ்வினில்
அன்பைச் சுரக்கும் காதல்
கடைச்சரக்காகி
வேதனையை விதைத்து
அன்பால் இணைந்த
உறவு பிரிவதும்
குடும்பத்தில் வெறுமை
நிறைந்து
தற்கொலைக்கு
முனைவதும்
ஏனென்று புரியாது
எம்மண்டையைக்
குடைகிறதே!

**வ.ச.செல்வராசா**
**திருநாவலூர்**

### அன்பின் உயர்வு

குரங்கும் நாயும்
கூடிக்குலாவ
குறைவற்ற அன்பே
நிறைவுள்ள காரணம்
அறிவாய் மனிதா
அவை ஐந்தறிவுப் பிராணியே
ஆறறிவு படைத்த நீ
அன்பின்றி அறிவு கெட்டாய்
வஞ்ச நினைவோடு
துஞ்ச மதி கொண்டாய்
துன்பத்தில் துடிக்கும்
சகோதர நிலை கண்டும்
சிறிதேனும்
சிந்தையில் இரக்கமற்றாய்
அன்பையும் பண்பையும்
அதனிடம் நீ கற்பாய்

**சி.திவ்வியா**
**யா.ப.மெ.ம.வி.**

### தோழமை

குரங்கில் இருந்து
தோன்றிய மனிதனும்
மனிதனுக்கு உறவான
நாயும்
நேசிப்பது நிம்மதியளிக்கிறது
துன்பத்தில் துடிக்கும்
தோழனை ஆறுதல்படுத்தி
அரவணைப்பது மேன்மை
ஐந்தறிவு படைத்த மிருகத்திற்கு
உள்ள உணர்வு
ஆறறிவு படைத்த
மனிதனுக்கு இல்லையே

**பா.கலாதேவி**
**சண்டிலிப்பாய் மேற்கு**

### வாழ்த்தி நிற்போம்

தான் பெற்ற பாலகனைக்கூட
குப்பைத் தொட்டிதனில்
வீசுகின்ற தவறிவிட்ட
தாய்மார் வாழும்
இப்புவிதனில்
தான் பெற்றெடுக்காத
நாய்க்குட்டியை அணைத்து
ஆதரிக்கும் ஐந்தறிவு மிருகத்தின்
செயலை வரவேற்போம்
வாழ்த்தி நிற்போம்

**அபிகுலமாலிகா**
**சங்கானை**

### மனிதக்குரங்கு

ஐந்தறிவென்று எம்மை
அகிலத்தில் பிரித்து வைத்தான்
ஆறறிவென்று சொல்லி
ஆதிக்கம் விதைத்து விட்டான்
அடைமொழி ஒப்பிலிட்டான்
சொந்தமும் சுகமும் தேடும்
எமைப்போல் தேசத்தில்
எவருமில்லை
பாசத்தில் சிறந்த எம்மை
பார்த்துமா நீ திருந்தவில்லை
இனங்களால் இன்னலானாய்
மதங்களால் மிதப்புக் கொண்டாய்
மொழியினால் பல விழிகள் மூட
வேறு வழிகளே இன்றி
மருவுது எம் மறு மனிதக் குரங்கு

**யாழ்வாகீஷ்**

### அரவணைப்பு

மனிதர்களிடம் ஒருவருக்கொருவர்
இல்லாத அன்பான அரவணைப்பு
இங்கே ஐந்தறிவு ஜீவன்களிடம்
நாம் காண்கின்றோம்

**சு.ஜெயரூபன்**
**பருத்தித்துறை**

### ஆசை

மாறுபட்ட
மிருக இனம்
ஒன்றுபட்ட
உணர்வு
இப்படி இருக்க!
ஆறறிவு ஐயாக்களே
வேறுபட்டு
குழிபறித்து
நிற்பதேனோ

**தேன்நிலா**
**நல்லூர்**

# மௌனத்தின் தேடல் –364



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 09.08.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாரை வாழவைக்கும் அலம்பில் பிரதேசத்தில் கடற்றொழில் செய்பவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். கடற்றொழில் அல்லாத வேறு தொழில் செய்பவர்கள் இருந்தாலும் கூட இவர்களும் விடுதலை நாட்க




ளில் கடலை நோக்கி நகரத்தான் செய்கிறார்கள். தங்குவலை, கரைவலை போன்ற தொழில்களில் ஈடுபடுவதைக் காணலாம். இதமான கடல காற்றை சுவாசிப்பதன் மூலம் இப்பகுதி மக்கள் மத்தியில் நோய் நொடிகள் குறைவாகக் காணப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தில் தான் கவிதாவும் பிறந்தாள். கவிதாவிற்கு கூடப் பிறந்த இரண்டு தங்கைகள் உள்ளனர். இந்த மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்றோர்கள் அன்பாகவும் பண்பாகவும் வளர்த்து வந்தனர். இருந்தும் மூத்த பிள்ளை கவிதாவிடம் தந்தைக்கு கூடிய அக்கறை இருந்தது. கவிதாவை எப்படியும் படிப்பித்து ஏதாவது ஒரு அரசாங்க வேலையில் புகுத்த வேண்டும் என்பதே தந்தையின் எண்ணமாக இருந்தது. இதற்காகக் கடுமையாக உழைக்கத் தொடங்கினார். இவரது உழைப்பு வீண் போகவில்லை. கவிதாவிற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அரசினர் வைத்தியசாலையில் மருத்துவ தாதி வேலை கிடைத்திருந்தது. கவிதாவிற்கு இவ்வேலை கிடைத்தது குடும்பத்திலுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. கவிதாவும் மக்களுக்கு சேவை செய்யும் மருத்துவதாதி வேலையை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டாள். நாட்கள் நகரத் தொடங்கியது. கவிதா தொழிலில் கூடிய அக்கறை காட்டத் தொடங்கினாள். வைத்தியசாலையில் மேலதிக வேலை கிடைத்தாலும் விடுவதே இல்லை. இப்படியே பத்துவருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. அந்த பத்து வருட காலத்தில் பெற்றோர்கள் உயிருடன் இருக்கவே இரு தங்கைகளையும் கரைசேர்த்து விட வேண்டும் என்ற தனது இலட்சியத்தை நிறைவேற்றியிருந்தாள். தமது இரண்டு பிள்ளைகளும் கரைசேர்ந்து விட்ட நிம்மதியில் சிறிதுகாலம் நோய்வாய்ப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாக இறந்து போகவே தனிமைப்படுத்தப்பட்ட கவிதா ஊருக்குப் போவதையே நிறுத்தி விட்டாள். வைத்திய அதிகாரியுடன் கதைத்து வைத்தியசாலையிலேயே தனக்கென ஒரு நிரந்தர வதிவிடத்தை பெற்றுக் கொண்டாள். வெளியில் இருந்தால் தனது கற்பிற்கு களங்கம் ஏற்படும் என அச்சம் அவளுக்கு. கவிதாவின் நன்னடத்தையிலும் ஒழுக்கத்திலும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்த வைத்திய அதிகாரி கவிதா எந்தக் கோரிக்கை வைத்தாலும் நிறைவேற்ற தவறுவதேயில்லை. மாதம் ஒருமுறையாவது வாழ்க்கைப்பட்ட தங்கைமார்கள் தமது கணவன்மார்களுடன் கவிதாவை வந்து பார்த்து விட்டுத்தான் போவார்கள். தங்கைமார்கள் வந்து போகும்போது அவ்வப்போது பணம் கொடுத்துதவுவாள். தங்கைமார்கள் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு கவிதா பூரித்துப் போவாள். இப்படியே கவிதாவின் காலம் கழிந்து கொண்டேயிருந்தது. கவிதா தன் தனிமையைப் பற்றியோ தனது எதிர்காலம் பற்றியோ சிந்தித்தது கிடையாது.

வைத்தியசாலையில் நடக்கும் மருத்துவ தாதிமார்கள் கூட்டம் , கலந்துரையாடல்கள் அனைத்தும் கவிதா இல்லாமல் இயங்காது எனலாம். இக்கூட்டங்களில் பங்குகொள்ளும் வைத்திய அதிகாரி அடிக்கடி கவிதா கவிதா என்று அழைப்பது மற்றைய தாதிமார்களுக்கு எரிச்சலை உண்டு பண்ணினாலும்கூட கவிதாவின் நற்குணங்களை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

ஒருநாள் இரவு கவிதா இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு படுக்கையறைக்குப் போனபோது கவிதாவின் தொலைபேசி மணி ஒலித்தது. வைத்திய அதிகாரிதான் அழைப்பு எடுத்திருந்தார். கவிதா நாளைக்கு காலை 10 மணிக்கு என்னை வீட்டில் வந்து சந்திக்கவும். மிக முக்கியமான விடயம் கதைக்க வேண்டும். வரும்போது தனியாக வரவேண்டாம்.

துணைக்கு யாரையாவது கூட்டி வரவும். வைத்திய அதிகாரியின் தெலைபேசித் தகவல் கவிதாவின் மனதை குழப்பிக் கொண்டிருந்தது. படுக்கையிலிருந்து பலவாறு சிந்தித்தவள் அப்படியே உறங்கிப் போனாள். மறுநாள் விடிய ஆரம்பித்தது. ஐந்தறிவு பறவை ஒன்று தனது பாஷையால் பொழுது விடிவதை ஆறறிவு மனிதர்களுக்கு அறிவித்தது. காகங்களும் அப்படியே. பொழுது நன்றாக விடிந்ததும் கவிதா காலை உணவை தயாரித்துச் சாப்பிட்டுவிட்டு காலை எட்டு மணிக்கு சிநேகிதி ஒருத்தியுடன் வைத்தியர் வீட்டிற்குப் புறப்பட ஆயத்தமானாள். நல்லவேளை அன்று கவிதாவுக்கு இரவு வேலையாததால் கடமைக்கு லீவு போட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. வைத்தியசாலை வளவிலிருந்து வைத்தியரின் வீட்டிற்கு கிட்டத்தட்ட ஒருமைல் தூரம் தான் இருக்கும். இதனால் இருவரும் வைத்தியர் வீட்டிற்கு நடந்தே சென்றார்கள்.

இவ்விருவரையும் எதிர்பார்த்துக் காத்திருந்த வைத்திய அதிகாரி இவர்களைக் கண்டதும் கைச் செய்கை மூலம் அவர்களை உள்ளே வரவழைத்து இருக்கையில் அமரும் படி கூறிவிட்டு தானும் இருக்கையில் அமர்ந்து கொண்டார். ஒரு நிமிட மௌனத்திற்குப் பின் பேசத் தொடங்கினார் வைத்திய அதிகாரி.

" கவிதா நான் உம்மை என் வீட்டுக்கு கூப்பிட்டது ஏன் தெரியுமா?"

"தெரியாது சேர்"

கவிதாவின் இந்தக் குழைவான பதில் வைத் திய அதிகாரிக்கு சிறிது தென்பை ஏற்படுத்தவே சற்று உரத்த தொனியில் "ஏன் கவிதா உமக்கென்றொரு வாழ்க்கையை நீர் ஏன் அமைக்கக்கூடாது.



வைத்திய அதிகாரியின் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தடுமாறிய கவிதா எப்படியும் பதில் சொலித் தானாக வேண்டும் என்ற நினைப்பில் "சரி எனக்கு வயது முப்பத் தெட்டாய்ப் போய்ச்சு. இனி யார் என்னை திரு மணம் செய்து கொள்ள முன்வருவாங்க"

கவிதாவின் இந்தப் பதிலில் தாழ்வு உணர்ச்சி புரையோடு வதைக் கண்ட வைத்திய அதிகாரி "கவிதா நீர் அப்படி சொல்லக்கூடாது. உமக்கென்று ஒரு வாழ்க்கை நிச்சயம் இருக்கும்.

அந்த வாழ்க்கையை அமைத்துத் தருவது எனது பொறுப்பு என்று சொன்ன வைத்திய அதிகாரி மேலும் தொடர்ந்தார். எனக்கொரு நண்பர் இருக்கிறார். அவரும் என்னைப் போல் வைத்திய அதிகாரியாக மட்டக்களப்பில் வேலை பார்க்கிறார்.

வைத்தியக் கல்லூரியில் அவர் படிக்கும் போது ஒரு பெண்ணால் ஏற்பட்ட மனக்காயத்தால் வயது நாற்பதாகியும் இன்னும் திருமணம் செய்யாமல் இருக்கிறார். ஆனால் கொஞ்ச நாட்களாக நண்பர் மனதில் திடீர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ரொம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். தொலைபேசி உரையாடலில் கூட நண்பரின் மகிழ்ச்சி தெட்டத் தெளிவாக இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கவிதா உமது விடயத்தையும் நண்பரின் காதில் போட்டபோது நண்பர் எந்தவித மறுப்பும் தெரிவிக்கவேயில்லை என்று சொல்லிக் கொண்டு வைத்திய அதிகாரி இருககையை விட்டெழுந்து மேசை லாட்சிக்குள் கைவைத்து ஒரு புகைப்படத்தை எடுத்து காகித உறையில் வைத்தபின் இந்தாரும் என்னுடைய நண்பரின் புகைப்படம் எனக்கூறி கவிதாவிடம் கொடுத்தார்.

அந்தப் புகைப்படத்தை வாங்கிப் பார்த்த கவிதா பேரதிர்ச்சிக்குள்ளானார். இப்படி வரும் என்று கவிதா சற்றும் எதிர்பார்க்கவேயில்லை. ஒரு மரியாதைக்காக இருக்கையை விட்டு எழுந்து நின்றார். கவிதாவுடன் உதவிக்கு வந்த சிநேகிதியும் வாயடைத்துப் போய் நின்றார். அந்தப் புகைப்படத்தில் இருந்தவர் யார் தெரியுமா வேறு யாருமல்ல. கவிதாவுடன் நேருக்கு நேர் பேசிக்கொண்டிருக்கும் வைத்திய அதிகாரியே தான்.

(யாவும் கற்பனை)

க.கணபதிப்பிள்ளை
விசுவமடு,
மாணிக்கபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசைச் சூழ்கின்ற புதிய சிக்கல்கள்!

'நல்லாட்சிக்கான அரசாங்கத்தின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது?' என்ற கேள்வியை எழுப்புகின்றன நாட்டில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளுக்குள் இந்தக் கேள்விகள் எழுந்திருக்கின்றன. அந்தளவுக்கு எல்லாப் பக்கத்திலிருந்தும் நெருக்கடிகள் கூடிக் கொண்டிருக்கின்றன. இந்த நெருக்கடிகள் இரண்டு வகைப்பட்டன.

ஒன்று அரசாங்கம் சந்திக்க வேண்டியுள்ள நெருக்கடி. மற்றையது மக்கள் சந்திக்க வேண்டியிருக்கின்ற நெருக்கடி. மக்களுக்கான நெருக்கடி என்பது, மக்களுடைய தேவைகள் நிறைவேற்றப்படாததால் ஏற்படுவதாகும். கூடவே மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இழுத்தடிப்பதன் மூலமாக ஏற்படும் நெருக்கடிகள். இதற்கு எதிராக அவர்கள் நடத்துகின்ற தொடர்ச்சியான போராட்டங்களினாலும் அதை அடக்க முனைகின்ற அரச எதிர்ப்பினாலும் ஏற்படுவதாகும். இந்த இரண்டு வகையான நெருக்கடிகளும் ஒட்டுமொத்தத்தில் நாட்டையே பாதிப்புக்குள்ளாக்குகின்றன.

முக்கியமாக நாட்டிலுள்ள எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாமல் தவிக்கிறது அரசாங்கம். இனப்பிரச்சினைக்கான தீர்வு, அந்தத் தீர்வுக்கான அரசியல் யாப்பு உருவாக்கம், பொருளாதார நிலைமைகளைச் சீராக்கல், வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்றுறை வளர்ச்சியை ஏற்படுத்துதல், வெளியாரின் தலையீடுகள், தனியார் மயமாக்கல், இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல் என சுற்றியிருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது அரசாங்கம். இதனால் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை இழப்பு பல்வேறு தரப்புகளிடமும் உருவாகியுள்ளது.

வடக்கிலே காணி மீட்புக்கும், காணாமலாக்கப்பட்ட உறவுகளின் மீட்புக்குமாக போராடிக் கொண்டிருக்கிறார்கள். தமக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்று மாதக்கணக்கில் கேட்டுக் கொண்டிருக்கின்றனர் வேலை கோரும் பட்டதாரிகள்.

தெற்கிலோ தனியார் மருத்துவக் கல்லூரியை அனுமதிக்க வேண்டாம் என்பதிலிருந்து பெற்றோலியத் தொழிலாளர்களின் போராட்டங்கள், தபால் ஊழியர்களின் போராட்டங்கள், புகையிரத ஊழியர்களின் போராட்டங்கள் என்று பல எதிர்ப்பு நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இது மேலும் வளர்ச்சியடையக் கூடிய சாத்தியங்களே அதிகமாகத் தென்படுகின்றன.

இதற்கெல்லாம் காரணம், அரசாங்கம் தன்னுடைய பொறுப்புக்களைச் சரியாகச் செய்யாததனால் ஏற்பட்டதே ஆகும். ஆனால், பிரச்சினைகளைத் தீர்த்துப் புதியதொரு வளர்ச்சி யுகத்துக்குள் நாட்டை வழிநடத்திச் செல்வதற்கு இந்த அரசாங்கத்துக்கே அதிக வாய்ப்புக்களும் அதிகமான சாத்தியங்களும் கிடைத்தன. நாட்டின் எதிரெதிர்த் துருவங்களாக இருந்த இரண்டு பெரிய கட்சிகளான ஐ.தே.கவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏனைய முஸ்லிம், மலையக, தமிழ் அரசியற் சக்திகளும் இணைந்து உருவாக்கிய அரசாங்கம் இது.

அதாவது எதிர்நிலைச் சக்திகள் எல்லாம் இணைந்து உருவாக்கிய கூட்டரசாங்கம். இதனால், இந்த அரசாங்கத்துக்கு எதிர்ப்போ - எதிர்க்கட்சியோ இல்லை என்ற நிலை இருந்தது. ஆகவே, இந்த அரசாங்கத்துக்கு எதிர்ப்புக்கள் என்பது மிகக் குறைவே. இருந்தும் இந்த அரசாங்கம் அக்கறையாக நடந்து கொள்ளவில்லை.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைக் குறை சொல்வதிலும் அந்த அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவதிலும் இந்த அரசாங்கத்தின் முதலாண்டுக் காலம் கழிந்தது. அதே குற்றச்சாட்டையும் குறை கூறல்களையும் இந்த அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

அப்படிச் சொன்னாலும் அதையெல்லாம் மக்கள் இனி நம்பவும் மாட்டார்கள். ராஜபக்ஷக்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு வெளிப்படையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் வெளிப்பாடே இதுவாகும். தொடக்கத்தில் ராஜபக்ஷக்களின் மீது ஊழல் குற்றச்சாட்டும் அதிகார துஷ்பிரயோகக் குற்றப்பத்திரங்களும் முன்வைக்கப்பட்டன.

அதிரடியான கைதுகளும் விசாரணைகளும் கூட மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பிறகு இந்த நடவடிக்கைகள் எல்லாம் மெல்ல மெல்லத் தளர்வைக் கண்டன.

இது மக்களிடையே சந்தேகங்களை உருவாக்கியுள்ளன. ராஜபக்ஷவினர் மீதான குற்றச்சாட்டுகள் உண்மையானவையா? அல்லது அரசியலுக்கான பொய்க் குற்றச்சாட்டுகளா? என்று மக்களே சந்தேகிக்கும்படி நிலைமை ஆகியுள்ளது.

மறுபுறத்தில் சிறுபான்மை இன மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்த அரசாங்கம், அந்த மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றத் தவறியது.

அரசியலமைப்புத் திருத்தம் தொடக்கம் தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கியுள்ள எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணவில்லை. பதிலாக கடந்த காலத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் எத்தகைய பிரச்சினைகளுக்கெல்லாம் முகம் கொடுத்தார்களோ, அத்தகைய ஒரு சூழலையே இப்போதும் இந்த மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே சிறுபான்மைச் சமூகத்தினர் இது தங்களுக்கு நெருக்கமான அரசாங்கம் என்று நம்பியதற்கு மாறாகவே நிலைமைகள் அமைந்து கொண்டிருக்கின்றன.

'நெஞ்சில் உறுதியும் நேர்மைத்திறனுமிருந்தால் அஞ்சுவதற்கிடமில்லை' என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளவில்லை என்பதன் விளைவே இது. எதையும் உறுதியுடன் எதிர்கொள்ளத் திராணி இல்லாமல் இருந்ததற்கான பயனை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

தெற்கிலே பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் போராட்டத்தை முறியடிப்பதற்காக படைகள் களமிறக்கப்பட்டன.

வடக்கிலே வன்முறை மற்றும் கொலைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் படைகள் களமிறக்கப்படுகின்றன.

இவ்வாறு படைகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும் அதிரடி நடவடிக்கைகளின் மூலமாக உடனடியாக நிலைமையைக் கட்டுப்படுத்திச் சீராக்கி விட்டதாக அரசாங்கம் கருதலாம். ஆனால், அப்படி நடக்கப் போவதேயில்லை.

எத்தகைய சிவில் செயற்பாடுகளிலும் படைகளின் ஆதிக்கமும் பிரசன்னமும் இருப்பதை மக்கள் விரும்பவே மாட்டார்கள்.

இந்த நிலைமைகள் நிச்சயமாக எதிர்விளைவுகளைப் பாரதூரமாக வளர்த்துச் செல்லப் போகின்றன. அதாவது பிரச்சினைகளும் நெருக்கடிகளும் கூடப் போகின்றன. தீர்வு எதையும் காண முடியாத நிலையில் படைகளின் தயவையே நாடி நிற்கப் போகிறது அரசாங்கம். இப்படிச் செய்யச் செய்யப் படைகளின் ஆதிக்கம் சிவில் வெளியை ஆக்கிரமிக்கும். மக்களின் அதிருப்தியும் எதிர்ப்பும் அரசாங்கத்தின் மீது பயங்கரமாக மேலெழும்.

நாட்டில் அமைதி இல்லை, சமாதானம் இல்லை, சட்டம் ஒழுங்கு சீராக இல்லை என வெளியுலகிற்கு காட்டுவதை இலக்காக கொண்டு சில சிறிய குழுக்கள் இயங்கி சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து வருகின்றன.

அதனைக் கட்டுப்படுத்த முதல் கட்டமாக ரோந்துப் பணிகளை தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். தேவை ஏற்படும் பட்சத்தில் இராணுவத்தினர், கடற்படையினர், வான்படையினர் மற்றும் விசேட அதிரப் படையினரையும் இணைத்து செயற்படுவோம். சிவில் பாதுகாப்பு குழு மற்றும் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பை நாம் இவ் விடயத்தில் எதிர்பார்க்கின்றோம்.

குற்றச்செயல்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து தாம் அறிந்த தகவல்களை பொலிஸ் துறையினருக்கு வழங்க பொதுமக்கள், சிவில் பாதுகாப்புக் குழுவினர் முன்வர வேண்டும் என யாழில் வைத்து பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர கேட்டிருக்கிறார். இது இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அதை மேலும் அதிகரிக்கவே செய்யப் போகிறது. அப்படியென்றால் சுமுக நிலைமைகளில் எத்தகைய முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை.

இதற்குச் சமநேர் விகிதத்திலேயே, அரசியல் யாப்பு உருவாக்கத்தை மகாநாயக்க தேரர்களிடம் கொண்டு போய் விட்டிருக்கிறது அரசாங்கம்.

இதெல் லாம் பிரச்சினைகளைப் பெருக்கும் வழிகளே தவிர, குறைக்கும், தீர்க்கும் முறையல்ல.

**கருணாகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவரால் தவிர்க்கப்படுவது இன்னொருவருக்கு உதவுகிறது




THE HERBAL SPOON

நீங்க ஹோட்டல்லயூஸ்பண்ண பாதி மீதி சோப்பை என்ன பண்றாங்கன்னு தெரியுமா?

வெளியூர் சென்றால் ஹோட்டல்களில் தங்குவது சிலருக்கு அலாதி பிரியம் அளிக்கும். ஒரு புதிய உணர்ச்சி எழும். புதிய இடம், நம்மளை உபசரிக்க சிலர், எப்படியும் நாம் சுற்றிபார்க்க தான் சென்றிருப்போம். ஆகையால், மனதில் ஒரு பட்டாம்பூச்சி பறந்து கொண்டே இருக்கும். வெளியே சொல்ல முடியாத சில விடயங்களும் நாம் செய்ய தவறமாட்டோம். முக்கியமாக பாத்ரூம் செயல்கள். ஆம்! எப்படியும் புதிய பிரஷ், சோப்பு, ஃபேஷ்வாஷ் க்ரீம், ஷாம்பூ எல்லாம் அவர்கள் வைத்திருப்பார்கள். தினமும் மாற்றி, மாற்றி புதியதை வைப்பார்கள். பலர் பாதி பயன்படுத்திய அவற்றை அங்கேயே வைத்துவிட்டு வந்துவிடுவார்கள். சிலர் "நாம இதுக்கும் சேர்த்து தானே காசு தரோம்..." என அதை எடுத்து பையில் போட்டுக் கொண்டு வந்து விடுவார்கள். உண்மையில், நாம் பாதி பயன்படுத்திய மீதி சோப்பு, க்ரீம் எல்லாம் அவர்கள் என்ன செய்கிறார்கள் என உங்களுக்கு தெரியமா?

**அமெரிக்காவில் மட்டும்...!**

அமெரிக்காவில் மட்டுமே 46 இலட்சம் ஹோட்டல் அறைகள் இருக்கின்றன. இந்த ஒவ்வொரு ரூமிலும் பாதி சோப்பு என்று கணக்கு போட்டு பாருங்கள். எவ்வளவு சோப்பு வீணாகின்றன? சோப்பு மட்டுமா? ஷாம்பூ, ஃபேஷ் வாஷ், க்ரீம் என அனைத்தும் தான் வீண் ஆகின்றன. ஆனால், நீங்கள் நினைப்பது அங்கே நடப்பது இல்லை. கிளீன் தி வேர்ல்ட்! குளோபல் சோப்பு புரோஜக்ட் உடன் இணைந்து கிளீன் தி வேர்ல்ட் எனும் அமைப்பு, அந்த பாதி மீதி சோப்பு, க்ரீம்களை மீள் சுழற்சி செய்து, அதை வளரும் உலக நாடுகளில், பின் தங்கிய நாடுகளில் சுகாதார வசதிகள் அல்லது இயலாதோருக்கு புதியதாக கொடுத்து உதவுகிறார்கள்.

**சுகாதாரம்! உங்களுக்கு தெரியுமா?**

உயிர்க்கொல்லி வைரஸ்கள் மற்றும் விபத்துகள், இயற்கை சீற்றங்கள் போன்ற காரணத்தால் உயிரிழக்கும் அதே எண்ணிக்கையில் அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாத ஒரே காரணத்தினால் பலர் இறக்கின்றனர். முக்கால் அமெரிக்க டொலர்! ஒரு ஹோட்டல் அறையில் வீணாகும் பாதி பொருட்களை மீண்டும் மீள் சுழற்சி செய்ய முக்கால் அமெரிக்க டொலர் செலவாகிறது. அதாவது 0.75 டொலர். இதை சுத்தம் செய்து, அதை பியூரிட்டி சரிபார்த்து சுகாதார பொருட் கள் வாங்க முடியாத நிலை யில் இருக்கும் மக்களுக்கு இந்த அமைப்புகள் கொடுத்து உதவுகிறார்கள். மற்றும் சிலர்... இந்த அமைப்பு மட்டுமன்றி... பல ஹோட்டல்களில் தங்கள் அறைகளில் மீதமாகும், வீணாய் போகும் பொருட்கள் சுகாதார தரம் பிரித்து வீடுகள் இல்லாதவர்கள், ஏழை மக்களுக்கு அளித்து உதவுகிறார்கள்.

இது போன்ற செயல்களில் ஆங்காங்கே சிலர் செய்து கொண்டிருந்தாலும். அனைவரும் செய்து வந்தால் பெரும் மாற்றமாகவும், உதவியாகவும் இருக்கும். இதில் இருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது.

இனி மேல், அநாவசியமாக நம் வீட்டில் பொருட்களை வீண் செய்யக் கூடாது என்பதே ஆகும்.

# செய்யக்கூடாதது? பெண்ணிடம் சத்தியம்!



பொதுவாக மனைவியிடம் ஏக போகமாக சத்தியம் செய்து, வேக வேகமாக மறப்பது ஆண்களின் குணாதிசயங்களில் ஒன்றாக மாறிவிட்டது.

இதில் சில சத்தியங்கள் நீங்கள் செய்து மறப்பதற்கு செய்யாமலேயே இருந்து விடலாம். ஏனெனில் அதன் எதிர்விளைவு மற்றும் வீரியம் ஓரிரு நாட்கள் என்ன, ஓரிரு வாரங்கள் கூட நீடிக்கலாம். இந்த காலகட்டத்தில் நீங்கள் பல வேளைகளில் பட்டினியாக தூங்க வேண்டிய கட்டாயம் கூட ஏற்படலாம். எனவே, மறந்தும் பெண்களிடம் இந்த சத்தியங்களை செய்துவிட வேண்டாம்.

**மாலை படத்திற்கு கூட்டி செல்வது**

பெரும்பாலும் ஆண்கள் ஓர் சத்தியத்தை செய்து தங்களது இரவு உணவை இழப்பது அல்லது அன்றிரவு ஹோட்டல் சாப்பாட்டை வாங்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் என்றால் அது இந்த சத்தியமாக தான் இருக்கும். மாலை வந்ததும் உன்னை வெளியே கூட்டி செல்கிறேன் என்று கூறி மறந்துவிடுவது ஆண்களின் குலத்தொழிலாக மாறிவிட்டது.

**நகை, புடைவை வாங்கி தருவது**

நகை மற்றும் புடைவை விடயத்தில் நீங்கள் உங்கள் மனைவியிடம் சத்தியம் செய்து மறப்பதும், தனக்கு தானே சாங்கு ஊதிக் கொள்வதும் ஒன்று தான். உங்கள் மனைவியை பத்திரகாளியாக பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தால் இந்த சத்தியத்தை நீங்கள் செய்யலாம்.

**மாமனார் வீட்டுக்கு அழைத்து செல்கிறேன்**

என்னதான் நீங்கள் தங்க தட்டில் வைத்து பார்த்துக் கொண்டாலும் கூட, தனது பிறந்த வீட்டிற்கு செல்வது என்பது பெண்களுக்கு எப்போதுமே குதூகலம் அடையும் ஓர் தருணம். இந்த விடயத்தில் சத்தியம் செய்து ஏமாற்றினால் இரவு பட்டினியாக தான் தூங்க வேண்டும்.

**வீட்டிற்கு சீக்கிரம் வந்துவிடுவேன்**

இது பல வீடுகளில் அன்றாடம் நடக்கும் ஓர் நிகழ்வு தான். அதிலும் மனைவி முக்கியமாக, அழுத்தமாக சீக்கிரம் வீட்டிற்கு வர சொல்லும் போது தான், நாம் மிகவும் நேர தாமதமாக செல்வோம். திருமணமானவர்களுக்கு மட்டுமே தெரியும் இந்த தருணத்தில் பெண்களின் முக பாவனை நவரசத்தையும் தாண்டும் என.

**குழந்தையை நானே பாடசாலையில் விட்டுவிடுகிறேன்**

இது மனைவியை மட்டுமல்ல, குழந்தைகளையும் கூட எரிச்சலூட்டும் சத்தியம். அவர்கள் தயாராகி கிளம்பலாம் என்று இருக்கும் போது தான், என்னால் இப்போது முடியாது, முக்கியமான வேலை, தாமதமாகி விடும் என்று நேற்று செய்த சத்தியத்தை, சுத்தியல் கொண்டு உடைப்பார்கள் ஆண்கள்.

**வீட்டு வேலைகளை செய்து முடிக்கிறேன்**

வீட்டு வேளைகளில் ஆண்கள் செய்யும் சத்தியங்களுக்கு எல்லையே கிடையாது, அதை செய்து விடுகிறேன், இதை செய்து விடுகிறேன் என கடைசியில் ஒன்றைக் கூட செய்ய மாட்டார்கள்.

**நிகழ்வுகளை நினைவில் வைத்துக் கொள்வது**


திருமணம், பிறந்தநாள், நண்பர்கள், உறவினர்கள் வீட்டு விசேஷம் போன்றவை ஆண்களின் மண்டையில் சேமிப்பது மிகவும் கடினம். மறந்த பின்பும் கூட நினைவில் இருப்பது போல உளறிக்கொட்டி மனைவியிடம் மாட்டிக் கொள்ளும் ஆண்கள் கூட்டம் மிகவும் பெரிது.

# ஏன்? எதற்கு? எதில்? மைலேஜின் மஜிக் ஸ்விட்ச்

மோட்டார் சைக்கிளை எல்லோருமே ஓட்டலாம். ஆனால், சரியான நேரத்தில் கிளட்சைப் பிடித்து... ரிலீஸ் செய்து... அக்ஸிலரேட்டரை முறுக்கி என மோட்டார் சைக்கிளை பெர்ஃபெக்ட்டாக ஓட்டும் ரைடர்கள் குறைவுதான். இதனால்தான் ஒரே மோட்டார் சைக்கிள், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மைலேஜ் தருகிறது.

நெடுஞ்சாலைப் பயணத்தின்போது, கிளட்ச் பயன்பாடு அவ்வளவாக இருக்காது. அதனால், நகரத்தைவிட நெடுஞ்சாலையில் ஒரு மோட்டார் சைக்கிள் அதிக மைலேஜ் தரும். இன்னும் சொல்லப்போனால், கிளட்ச்தான் மைலேஜுக்குச் சிம்மசொப்பனமும் உற்ற நண்பனும்!

**கிளட்ச் என்றால் என்ன?**



ஒரு வாகனம், எப்போதுமே ஒரே பவர் மற்றும் டார்க்கில் செல்லாது. நேரத்துக்கும் வேகத்துக்கும் தகுந்தாற்போல இதை மாற்றிக்கொண்டே இருப்பதுதான் கியர்பாக்ஸின் வேலை. இன்ஜினுக்கும் கியர்பாக்ஸுக்கும் நடுவில், சமாதானத் தூதுவர்போலச் செயற்படுவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட டிவைஸ்தான், கிளட்ச்.


**கிளட்ச் அசெம்பிளி:**

கிளட்ச் பிடித்து, கியரைப் போட்டுவிட்டு மீண்டும் கிளட்சை ரிலீஸ் செய்தால், வாகனம் முன்னே செல்கிறது. இந்த வேலைக்குப் பின்னால் கிளட்ச் மட்டும் இல்லை ஒரு கூட்டமே இருக்கிறது. இதற்குப் பெயர்தான் 'கிளட்ச் அசெம்பிளி.' கிளட்ச் பிளேட், கிளட்ச் ஹப், பிரஷர் பிளேட், கிளட்ச் ஸ்பிரிங்குகள், கிளட்ச் லீவர் மற்றும் கிளட்ச் கேபிள் - இவை எல்லாம் சேர்ந்ததுதான் ஹகிளட்ச் அசெம்பிளி.'

**கிளட்ச் பிளேட்:**

பெயருக்கு ஏற்றபடி ஒரு தட்டுபோலவே இருக்கும் இதில் டிரைவ் **(Friction)** பிளேட் மற்றும் டிரைவன் **(Steel)** பிளேட் என்று, இரண்டு வகை உண்டு. ஃபைபரால் செய்யப்பட்டிருக்கும் ஃப்ரிக்ஷன் பிளேட், நீங்கள் கிளட்ச் பிடிக்கும்போது ஏற்படும் உராய்வைத் தாங்கிக் கொள்ளும். வெளியே பற்கள் இருந்தால், அது டிரைவ் பிளேட். கிளட்ச் ஹப்புக்கு இடையில் இது ஃபிட் செய்யப்பட்டிருக்கும். பிரேக் ஷூவில் ஒருவித மெட்டீரியலைக் கவனித்திருக்கிறீர்களா, அதுவும் டிரைவ் பிளேட்டில் இருக்கும்.

**மோட்டார் மன்னன் பக்கம்**



டிரைவன் பிளேட்டில் பற்கள் உள்பக்கம் இருக்கும். இது அலுமினியம் மற்றும் ஸ்டீலால் தயாரிக்கப்பட்டிருக்கும். இந்தப் பற்கள், ஹப்புக்கு இடையில் இருக்கும் கேப்புகளில் பொருந்தியிருக்கும். கம்யூட்டர் வகை மோட்டார் சைக்கிள்களில் ஸ்டீல் பிளேட்டுகள்தான் பெரும்பான்மையான சாய்ஸ். சூடு தாங்கும் சக்தியிருப்பதால், இதற்கு ஆயுள் அதிகம். அலுமினியம், குறைந்த எடைக்குப் பெயர்பெற்றது. மோட்டோ ஜீபி பைக்குகளில் இருப்பது அலுமினியம் பிளேட்தான். ஸ்டீல் பிளேட்டுகளைவிட இதன் ஆயுள் ரொம்பக் குறைவு. இந்த பிளேட்டுகள் தேயத் தேய, உங்கள் மைலேஜில் பெரிய வீழ்ச்சி தெரியும்.

**பிரஷர் பிளேட்:**

கிளட்ச் அசெம்பிளியில், இது நகர்ந்துகொண்டே இருக்கும். கிளட்ச் ஸ்பிரிங்குகளில் ஏற்படும் உராய்வுக்கு எதிராகப் போராடுவது இதுதான். நீங்கள் கிளட்ச் லீவரைப் பிடிக்கும்போது, ஒரு டைட் ஃபீலை உணர்வீர்கள்தானே! அது கிளட்ச் பிளேட்டுகளிலிருந்து, பிரஷர் பிளேட் விடுபடுகிறது என அர்த்தம்.

**கிளட்ச் ஸ்பிரிங்குகள்:**

குட்டி காயில்கள்தான் இந்த ஸ்ப்ரிங்குகள். சாதாரண பைக்குகளில் நான்கு ஸ்பிரிங்குகள் இருக்கும். பைக்குகளின் பெர்ஃபாமென்ஸைப் பொறுத்து, ஐந்து ஸ்பிரிங்குகள் வரைகூட இருக்கலாம். கிளட்ச் லீவரை ரிலீஸ் செய்யும்போது, ஒரு லைட் ஃபீல் கிடைக்குமே... அதற்குக் காரணம் இந்த ஸ்பிரிங்குகள் கம்ப்ரஸ் ஆகி ரிலீஸ் ஆவது தான். நீங்கள் கிளட்ச் லீவரை 'டப் டப்' என வேகமாக ரிலீஸ் செய்தால், ஸ்பிரிங்குகளுக்கு அதிக வேலைப் பளு இருக்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில் சசிகலாவுக்கு சூடச்சூட சாப்பாடு

பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் இருந்து வெளியான ஒரு மொட்டைக் கடிதம், மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டிருக்கிறது. இதில் கர்நாடக சிறைத்துறை அதிகாரிகளைத் தாண்டி, தமிழகக் கால்நடைத் துறை அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டி பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளதால் இரண்டு மாநிலங்களிலும் பரபரப்பு.

இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதற்காகத் தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாக எழுந்த புகாரில், டி.டி.வி.தினகரன், டில்லியைச் சேர்ந்த இடைத்தரகர் சுகேஷ், தினகரனின் நண்பர் மல்லிகார்ஜுனா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். மல்லிகார்ஜுனாவின் தொலைபேசிகளை ஆராய்ந்த டில்லி பொலிஸார், பிரகாஷ் என்பவரிடம் அவர் அடிக்கடி பேசியதைக் கண்டுபிடித்தனர். இந்தப் பிரகாஷ், கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான பரமேஸ்வராவின் உதவியாளர். இதைத் தொடர்ந்து பிரகாஷிடமும் பொலிஸார் விசாரணை நடத்தினர். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் லிங்க் கிடைத்தது இந்த இடத்தில்தான்.

அந்த விசாரணையில் பிரகாஷ் ஒரு விடயத்தைச் சொன்னார். "சசிகலாவுக்குச் சிறையில் சில வசதிகள் செய்து கொடுப்பதற்காக கர்நாடக சிறை அதிகாரிகளுக்கு இரண்டு கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்ததாக மல்லிகார்ஜுனா என்னிடம் சொன்னார். பரப்பன அக்ரஹாரா சிறை பாதுகாப்புப்பணியில் இருக்கும் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தமிழக அமைச்சரின் வீட்டில் இருந்து காய்கறி, பழங்கள்,



## மீண்டும் சர்ச்சையில் சசி அணி

சாப்பாடு ஆகியவற்றை அம்புலன்ஸ் மூலமாகக் கொண்டு செல்வதாகவும் என்னிடம் கூறினார்" என்பதே பிரகாஷ் சொன்ன அந்தத் தகவல்.

பிரகாஷின் வாக்குமூலத்தை நிரூபிக்கும் விதமாக இருக்கிறது இந்த மொட்டைக் கடிதம். கர்நாடக சிறைத்துறையில் லஞ்சம் பெற்றதாக டி.ஐ.ஜி ரூபா குற்றம் சாட்டிய டி.ஜி.பி சத்யநாராயண ராவ், கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டார். அவருக்குப் பதிலாக வந்துள்ள ஏ.டி.ஜி.பி மெஹரிக், ரூபா கூறிய குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவர் வினய்குமார் மற்றும் ஊடகங்களுக்கு இந்த மொட்டைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில், 'கர்நாடக மாநிலத்தில் தொழில் பாதுகாப்புப் படை இயங்கி வருகிறது. அந்தப் படையில் சப் - இன்ஸ்பெக்டர் கஜராஜ் மாகனூரு என்பவர் பரப்பன அக்ரஹாரா சிறை பாதுகாப்புப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டிருந்தார். அவர் தனக்கு ஒதுக்கிய பாதுகாப்புப் பணியைச் செய்யாமல் சிறையில் உள்ள வி.ஐ.பி-களுக்கு வீட்டு உணவு, மருந்து, மாத்திரைகள் மற்றும் பழங்கள் என்று தேவையான பொருட்களை கொடுக்கிறார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் கைதான சசிகலா, கறுப்புப் பணப் பதுக்கலில் கைதான வீரேந்திரா, புதிய இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் பதுக்கி வைத்த கர்நாடக மாநில நெடுஞ்சாலை துறை உயர் அதிகாரி ஜெயச்சந்திரா, இரும்புத் தாது ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி கங்காராம் படேரியா ஆகியோருக்கு இப்படி இவர் சகல பொருட்களையும் வழங்கி வருகிறார்.

சிறையின் தலைமைக் கண்காணிப்பாளர் கிருஷ்ணகுமார் ப்ரிந்துரையின் பேரில், எஸ்.ஐ கஜராஜ் மாகனூரு, சசிகலாவுக்குத் தேவையான மின் அடுப்பு, பிரிட்ஜ், எல்.இ.டி டி.வி., கட்டில், மெத்தை உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் அம்புலன்ஸ் மூலமாகச் சிறைக்குள் கொண்டு வந்தார். இது தவிர, ஓசூரில் உள்ள அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டிக்கு நெருக்கமான மாதேவ என்பவரின் வீட்டில் இருந்து சசிகலாவுக்குத் தேவையான பொருட்கள், உடைகள், சாப்பாடு, பழங்கள், மருந்து ஆகியவற்றைக் கொண்டு வந்தார். இவை அனைத்தும் சிறை கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளன.

இதற்காக KA-42G919, KA-42G799 என்ற பதிவெண் கொண்ட இரண்டு அம்புலன்ஸ்களைப் பயன்படுத்தினார். சசிகலாவுக்குச் சகல வசதிகளையும் கஜராஜ் செய்து கொடுத்ததால் கட்சியினர், உறவினர் ஆகியோர் அவருடன் நெருக்கமான தொடர்பில் இருந்தனர். இதற்காக அவருக்கு மூன்று தொலைபேசிகளையும் நான்கு சிம்கார்டுகளையும் வாங்கிக் கொடுத்தார்கள். சசிகலாவை உறவினர்கள், கட்சிக்காரர்கள், வழக்கறிஞர் ஆகியோர் இரவு 7 மணிக்குப் பிறகும் சிறைக்கு வந்து சந்தித்துள்ளனர். சசிகலா இவர்களைச் சந்திக்க, பாதுகாப்பு அதிகாரியின் அறையை இவரே ஒதுக்கிக் கொடுத்தார்.

இதற்காக கஜராஜ், சிறையின் தலைமைக் கண்காணிப்பாளராக இருந்த கிருஷ்ணகுமார், டி.ஜி.பி-யாக இருந்த சத்யநாராயண ராவ் ஆகியோருக்குப் பெருமளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சத்யநாராயண ராவ் ஆரம்பத்தில் கெடுபிடி காட்டினார். பிறகு லஞ்சம் வாங்கிக்கொண்டு கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டார். சசிகலாவுக்கு உதவியதால் கிடைத்த லஞ்சப் பணத்தில் பன்னார்கட்டா சாலையில் 1,200 சதுர அடியில் வீட்டுமனை வாங்கியுள்ளார் கஜராஜ். நாகனஹள்ளியில் இரண்டு அடுக்கு மாடி வீடும் கட்டியுள்ளார். டிராவல்ஸ் தொழிலும் செய்து வருகிறார்' என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தை சிறை அதிகாரிகள் கூட்டாக எழுதி, கையெழுத்துப் போடாமல் வெளி யிட்டிருக்கிறரர்கள்.

ஓசூர் அண்ணன் தொழிற்சங்க செயலர் பொருட்களைக்கூட சின்னம்மா விரும்பமாட்டார். 'இதெல்லாம் வாங்கித் வருவதாக இருந்தால் இனி இங்கு வர வேண்டாம்' என்று சொல்லிவிடுவார். சிறை அதிகாரிகள் அலுவலகத்தின் அருகில் பார்வையாளர்கள் அறை இருக்கிறது. சின்னம்மாவைப் பார்க்கச் சென்றால் கூடவே பெண் அதிகாரிகளும் இருப்பார்கள். சுதந்திரமாகப் பேசக்கூட முடியாத சூழ்நிலையில் எப்படி பொருட்களைக் கொண்டு செல்ல முடியும்? நான் தினமும் அமைச்சர் வீட்டில் இருந்து அம்புலன்ஸ் மூலமாகச் சிறைக்கு உணவு மற்றும் பொருகளைக் கொண்டுச் சென்றேன் எனச் சொல்வது உண்மைக்குப் புறம்பானது" என்று கூறுகிறார்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்சிலோனாவுக்கு நெய்மர் குட்பை! மெஸ்ஸியின் நிழல் சுடுகிறதா?




காற்பந்து உலகின் இளம் நட்சத்திரம் நெய்மரை நீங்க வாங்கணுமா? அதுக்கு நீங்க பெரிசா ஒன்னும் செலவு செய்ய வேண்டியது இல்ல. சுமார் 1,677 கோடி ரூபாய் கொடுத்தா போதும்! ஷாக் ஆயிடலயே? ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆமாங்க. தோராயமா 1,677 கோடி ரூபாய். துல்லியமா சொல்லணும்னா 222 மில்லியன் யூரோக்கள்! அவ்வளவு செலவு செய்து நெய்மரை பார்சிலோனா அணியிடமிருந்து வாங்கியுள்ளது பிரான்சின் பாரீஸ் செயின்ட் ஜெர்மன் அணி **(PSG)**.

கடந்த ஆண்டு மான்செஸ்டர் யுனைடெட் அணி 105 மில்லியன் யூரோ கொடுத்து யுவன்டஸ் அணியிலிருந்து பால் போக்பாவை வாங்கியது. அதுவே ஒரு கால்பந்து வீரருக்குக் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய தொகை. அதனால் உலகின் காஸ்ட்லி வீரர் என்ற சிறப்பைப் பெற்றார். அப்போது மொத்த கால்பந்து உலகமும் மான்செஸ்டர் யுனைடெட் அணியை வசை பாடியது. ஒரு வீரருக்கு இவ்வளவு தொகை செலவு செய்வதா?, பணத்தால் கால்பந்து பாழாகிறது, "கால்பந்தின் நிலை இனி எங்கே செல்லப் போகிறது" என்றெல்லாம் புலம்பினர். காரணம் 100 மில்லியன் யூரோவைத் தாண்டி ஒரு டிரான்ஸ்ஃபர் நடந்தது அதுவே முதல் முறை. கால்பந்தின் நடப்பு ஜாம்பவான்கள் கிறிஸ்டியானோ ரொனால்டோவும், மெஸ்ஸியும் தத்தமது அணிகளுடனான ஒப்பந்த காலத்தை நீட்டித்துக் கொண்டதால், போக்பாவின் அச்சாதனை முறியடிக்கப்பட இனி சில வருடங்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இப்பொழுது அரங்கேறியுள்ளது கால்பந்தின் மாபெரும் வியாபாரம். அதுவும் போக்பாவை விட இரட்டை மடங்கு விலைக்கு. கடந்த இரண்டு வாரங்களாக நடந்து வந்த பேச்சு வார்த்தைக்கு இடையில் இவ்வளவு பெரிய தொகை கைமாறுவதை லா லிகா அமைப்பு எதிர்த்தது. இருந்தாலும் பி.எஸ்.ஜி. அணிக்கு 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் ஆகியுள்ளார் நெய்மர்.

### யார் இந்த நெய்மர்? எதற்கு இவ்வளவு தொகை?

பிரேசில் - பீலே, ரொனால்டோ, ரொனால்டினோ, ககா, ராபெர்டோ கார்லோஸ் என்று பல ஜாம்பவான்களை கால்பந்திற்குக் கொடுத்த தேசம். கால்பந்தின் பிறப்பிடம்! ஆனால் கடந்த சில ஆண்டுகளாய் உலக அரங்கில் சாதிக்கத் தவறி வருகிறது அவ்வணி. சோதனைகளுக்கு நடுவில், தன் தேசத்தை மீண்டும் வெற்றி பாதைக்குக் கொண்டுவர சாம்பா தேசத்தில் பிறந்த ஆபத்வாந்தவன் தான் நெய்மர்.

இளம் வயதிலேயே உலகின் பார்வையைத் தன் பக்கம் திருப்பியவன். மெஸ்ஸி, ரொனால்டோ எனும் இரண்டு அரசன்களுக்குப் பிறகு அடுத்து கால்பந்து உலகை ஆளப்போகும் இளவரசன். வெறும் 17 வயதில் தொழில்முறை கால்பந்திற்குள் அடியெடுத்து வைத்த நெய்மர் இதுவரை சான்டோஸ் மற்றும் பார்சிலோனா ஆகிய இரண்டு கிளப்களுக்காக 411 போட்டிகளில் விளையாடி 241 கோல்கள் அடித்துள்ளார். தற்போது வெறும் 25 வயதேயான நெய்மர் பிரேசில் அணிக்காக வெறும் 77 போட்டிகளில் 52 கோல்களை அடித்து அசத்தியுள்ளார். டிரிபிளிங்கில் கில்லாடி. எதிரணி வீரர்களை ஏமாற்றுவதில் வல்லவன்.

ஆனாலும், இவ்வளவு தொகை செலுத்தியிருக்க வேண்டுமா? நிச்சயம், இது விவாதத்திற்கு உட்படுத்த வேண்டியதே. பி.எஸ்.ஜி என அழைக்கப்படும் பாரீஸ் செயின்ட் ஜெர்மன் அணி முன்பு ஒரு சாதாரண அணியாகவே விளங்கியது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு கத்தார் ஸ்போர்ட்ஸ் என்டெர்டெயின்மென்ட் நிறுவனத்தால் வாங்கப்பட்ட பிறகு பல மில்லியன் டொலர்களை செலவு செய்து பல முன்னணி வீரர்களை வாங்கியது. அதன் பிறகு பிரான்சின் லீக் 1 தொடரை தொடர்ந்து 4 முறை வென்று அசத்தியது. ஆனாலும், சம்பியன்ஸ் லீக்கில் அந்த அணியால் பெரிய அளவு சாதிக்க முடியவில்லை.

ஐரோப்பிய அளவில் சாதிக்க வேண்டுமானால் ஒரு அணிக்கு 'ஸ்கோர்' பலமானதாக இருக்க வேண்டும். இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மாறும் வீரர்களை வைத்துக்கொண்டு எதுவும் சாதிக்க முடியாது.

தங்கள் அணிக்கு மையமாய் செயற்படும் ஒரு வீரன். அவனைச் சுற்றி இயங்கும் சில வீரர்கள். அவர்களை ஒருங்கிணைக்கும் பயிற்சியாளர் இவையெல்லாம் அவசியம். கடந்த 4 ஆண்டுகளாக பார்சிலோனாவும் ரியல் மாட்ரிட்டும் மட்டுமே சம்பியன்ஸ் லீக்கை வெல்வதற்குக் காரணம் அதுதான். அத்தொடரை வெல்ல வேண்டுமேயானால் ஒரு ஜீனியஸ் அணியில் இருப்பது அவசியம். மெஸ்ஸியையும் ரொனால்டோவையும் கூட வளைத்துப் போட சிலமுறை அவ்வணி முயற்சித்து தோற்றுப்போனது. அதற்கடுத்த நிலையில் நிற்பது நெய்மர்... அவரையும் இதோ வாங்கியாகிவிட்டது. இன்றைய நிலைமையைப் பொருத்தமட்டில் 222 மில்லியன் யூரோக்கள் என்பது சற்று அதிகமே. ஆனால் கால்பந்துப் புத்தகத்தில் அந்த அணியின் வரலாற்றை இந்த வீரனால் அன்றி வேறு எவராலும் இனி எழுத முடியாது. அந்த வகையில் இது பி.எஸ்.ஜி-க்கு மிகச்சிறந்த முதலீடு.

### முடிவுக்கு வரும் MSN

MSN - கால்பந்து ரசிகர்கள் கடந்த 3 ஆண்டுகளாகக் கொண்டாடிய பெயர். மெஸ்ஸி, சுவாரஸ், நெய்மர் ஆகிய மும்மூர்த்திகளின் இணைதான் MSN . கால்பந்து உலகின் மிக அபாயகரமான இணையாகவும் இவர்கள் விளங்கினார்கள்.

எதிரணிகளின் தடுப்பை பீரங்கியைப் போல் உடைத்துத் தகர்த்தார்கள். விங்குகளில் மெஸ்ஸியும் நெய்மரும் மாயாஜாலம் காட்ட, ஸ்டிரைக்கராக சுவாரஸ் அதிரடி காட்டினார். இவர்கள் மூவரும் சேர்ந்து விளையாடிய 113 போட்டிகளில் 253 கோல்கள் அடித்துள்ளார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். அந்தப் போட்டிகளில் நெய்மர் மட்டுமே 59 கோல்களும் 36 அசிஸ்டுகளும் செய்து அசத்தியுள்ளார்.

### நெய்மர் ஏன் மாறினார்?

உலகின்டொப் கால்பந்து கிளப்கள் என்றால் அது ரியல் மாட்ரிட்டும் பார்சிலோனாவும் தான். அந்த அணிகளிலிருந்து எந்த அணிக்குப் போனாலும் ஒரு வீரருக்கு அது பின்னடைவு தான். அப்படியிருக்கையில் ஏன் நெய்மர் பார்சிலோனாவை விட்டுப் போக வேண்டும்? பி.எஸ்.ஜி அணிக்கு 5 ஆண்டு காலம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நெய்மர் இந்தக் காலகட்டத்தில் வாங்கவிருக்கும் சம்பளம் மட்டுமே சுமார் 450 மில்லியன் பவுண்டுகள். அதாவது ஒரு ஆண்டுக்கு 90 மில்லியன் பவுண்டுகள். ஒரு மணிநேரத்திற்கு 3,200 பவுண்டுகள். இந்தப் பணம் தான் நெய்மர் பார்சிலோனாவை விட்டு செல்லக் காரணம் என்று பார்சிலோனா ரசிகர்கள் குறை கூறுகிறார்கள். இதற்குப் பின்னால் ரியல் மாட்ரிட் அணியின் சதி இருப்பதாகவும் குற்றம்சாட்டுகின்றனர். ஆனால் நெய்மரின் இந்த முடிவிற்கு அந்த பார்சிலோனா ரசிகர்கள்தான் காரணம்.

கடந்த ஆண்டு சம்பியன்ஸ் லீக்கில் காலிறுதிக்கு முந்தைய சுற்று. இப்போது சம்பந்தப்பட்டுள்ள அதே பார்சிலோனாவும் பி.எஸ்.ஜியும் நேருக்கு நேர் மோதின. இரண்டு சுற்றுகள் கொண்ட போட்டியின் முதல் சுற்றில் 4-0 என படுதோல்வியைச் சந்தித்தது பார்சிலோனா. அந்தத் தோல்வியிலிருந்து மீள்வது எவ்வளவு கடினம்? ஆனால் மீண்டது. இரண்டாவது சுற்றில் 6-1 என சரித்திர வெற்றி பெற்று சாதனை படைத்தது. அடுத்த நாள் அனைத்து பேப்பர்களிலும் மெஸ்ஸி சுப்பர் மேன் போன்று கையை உயர்த்தியிருக்கும் புகைப்படம் வெளியானது. மொத்த ரசிகர்களும் மெஸ்ஸியைக் கொண்டாடித் தீர்த்தனர்.

ஆனால் அந்தப் போட்டியில் பார்சிலோனாவை வெற்றி பெற வைத்தது உண்மையில் நெய்மர் தான். கடைசி 10 நிமிடங்களில் 2 கோல்கள் 1 அசிஸ்டு என மாயாஜாலம் புரிந்து தன் அணியை வெற்றி பெற வைத்தார். ஆனால் ரசிகர்களெல்லாம் மெஸ்ஸியை மட்டுமே கொண்டாடினார்கள். தங்களின் ஒற்றைத் தலைவனை மட்டுமே கொண்டாடுவது ரசிகர்களின் வழக்கம் தானே. நாம் கூட உலகக்கோப்பை வெற்றியில் யுவராஜ், கம்பீரையெல்லாம் மறந்து டோனியை மட்டும் தானே கொண்டாடினோம்.

அப்படித்தான். அப்படி மெஸ்ஸியின் நிழலில் தான் மறைந்து விடக்கூடாது என்பதற்காக நெய்மர் எடுத்த முடிவாகத்தான் இது இருக்கும். காரணம் இன்னும் தான் மெஸ்ஸியுடனேயே விளையாடி வந்தால் உலகின் சிறந்த கால்பந்து வீரர்' **(Ballon d'or)** போன்ற விருதுகளை தான் வெல்ல முடியாது என்பதும் அவருக்குத் தெரியும். ஆனாலும் இதையெல்லாம் வெளிப்படையாகச் சொல்லாமல் "பி.எஸ்.ஜி அணியின் எதிர்காலத்திட்டம் என்னைக் கவர்ந்ததால் அங்கு செல்கிறேன்" என்று கூறிவிட்டு மெஸ்ஸிக்கும் நட்போடு குட்பை சொல்லி விடைபெற்றிருக்கிறார் நெய்மர்.

### யாருக்கு லாபம்?

ஏற்கனவே சொல்லியது போல் பி.எஸ்.ஜி அணிக்கு இந்த டிரான்ஸ்ஃபரால் பெரிய லாபம். உலக அரங்கில் மாபெரும் சக்தியை அவர்கள் தங்களை நிலை நாட்டிக்கொள்ள முடியும். அடுத்து இதனால் லாபம் பெறப்போவது ரியல் மாட்ரிட் அணி. தங்களின் மாபெரும் வைரியின் ஒரு கால் உடைந்திருக்கிறது என்றால் அவர்களுக்கு ஆனந்தம்தானே? இதனால் இனி எல் கிளாசிகோ போட்டிகளில் மாட்ரிடின் கரம் ஓங்கலாம்! ரியல் மாட்ரிட் ரசிகர்கள் நெய்மரின் இந்த மூவை நியூ இயர்போல்கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையைச் சொல்லப் போனால் கடந்த இரண்டு வாரங்களாக பி.எஸ்.ஜி ரசிகர்களை விட இந்த டிரான்ஸ்ஃபரை அதிகம் எதிர்பார்த்தவர்கள் அவர்களாகத் தான் இருக்கும். பெரிய லாபம் அடையப் போவது நெய்மர்தான். முன்பு கூறியது போல் மெஸ்ஸியின் நிழலிலிருந்து விடுபட்டு தன் தனித்துவத்தை உலகிற்கு அவர் காட்ட வேண்டிய தருணம் வந்து விட்டது. எனவே இதில் பெரிய லாபம் நெய்மருக்குத்தான்.

### யாருக்கு நட்டம்?

பார்சிலோனா அணிக்கு இது மிகப்பெரிய இழப்பு. மெஸ்ஸி, சுவாரஸ் போன்றவர்கள் இருந்தாலும் இதுவரை செட்டாகி இருந்த பார்ட்னர்ஷிப் உடைந்திருப்பது அவர்களுக்கு சற்று சறுக்கலே. அதுவுமில்லாமல் பயிற்சியாளர் வெல்வர்டேவுக்கு இது தான் முதல் சீசன்.

அதனால் அணியை அவர் எவ்வாறு மாற்றி வடிவமைக்கப் போகிறார் என்பதை காத்திருந்து தான் பார்க்க வேண்டும். டிபாலா, கோடின்ஹோ, ஹசார்டு போன்ற வீரர்களை நெய்மருக்கு மாற்றாக வாங்க அவர்கள் முயல்கிறார்கள். அடுத்து இதனால் நட்டம் அடையப்போவது மெஸ்ஸியும் ரொனால்டோவும். இவர்களுக்கு என்ன நட்டம் என்று ஷாக் ஆக வேண்டாம். கடந்த 10 ஆண்டுகளாக உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதை இவர்களே வாங்கி வருகிறார்கள்.

இவர்களுக்குப் போட்டி தரக் கூடிய தரமான வீரர்களில் பெரும்பாலோனோர் இவர்களுடனேயே டீம் மேட்டாக இருந்ததால் இவர்களுக்கு அது உதவியாக இருந்தது. இப்போது நெய்மர் தனியாகப் போயிருப்பது இந்த ரேசில் அவர்களுக்கு நேரடி சலஞ்சாக அமையும்.

ஆக மொத்தம் நெய்மரின் இந்த 222 மில்லியன் யூரோ டிரான்ஸ் ஃபரால் கால்பந்து உலகம் சற்று ஆடித்தான் போயிருக்கிறது. இனி இதனால் அனைத்து வீரர்களின் விலையும் உயரும். சாதாரண வீரரைக் கூட அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கும்" என மான்செஸ்டர் யுனைடட் அணியின் மனேஜர் ஜோசே மொரினியோ கூறியிருக்கிறார். அதுவும் உண்மைதான். இதனால் கால்பந்து உலகில் ஒரு பொருளாதார இடி விழும். நெய்மர் சான்டோஸ் அணியிலிருந்து பார்சிலோனாவால் 57 மில்லியன் யூரோவிற்கு பார்சிலோனாவால் வாங்கப்பட்ட போதே அதில் பித்தலாட்டம் நடந்திருப்பதாக விசாரணை நடத்தியது ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு. இப்போது 222 மில்லியன் யூரோக்கள். என்னென்ன பூதமெல்லாம் கிளம்பப்போகுதோ? (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: இரு வல்லவர்கள்
இசை: வேதா
பாடல் வரிகள்: கவிஞர் கண்ணதாசன்
பாடியவர் : டி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்
நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்

நீ இல்லாமல் யாரோடு உறவாட வந்தேன்?
உன் இளமைக்குத் துணையாக தனியாக வந்தேன்

நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்

நீ வருகின்ற வழிமீது யார் உன்னைக் கண்டார்?
உன் வளை கொஞ்சும் கைமீது பரிசென்ன தந்தார்?
உன் மலர்க்கூந்தல் அலைபாய அவர் என்ன சொன்னார்?
உன் வடிவான இதழ்மீது சுவை என்ன தந்தார்?
உன் மலர்க்கூந்தல் அலைபாய அவர் என்ன சொன்னார்?
உன் வடிவான இதழ்மீது சுவை என்ன தந்தார்?

நீ இல்லாமல் யாரோடு உறவாட வந்தேன்?
உன் இளமைக்குத் துணையாக தனியாக வந்தேன்

நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்

பொன்வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத
நான் வளைகொண்ட கையாலே மெதுவாக மூட
பொன்வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத
நான் வளைகொண்ட கையாலே மெதுவாக மூட
என் கருங்கூந்தல் கலைந்தோடி மேகங்களாக
நான் பயந்தோடி வந்தேன் உன்னிடம் உண்மை கூற
என் கருங்கூந்தல் கலைந்தோடி மேகங்களாக
நான் பயந்தோடி வந்தேன் உன்னிடம் உண்மை கூற

நீ இல்லாமல் யாரோடு உறவாட வந்தேன்?
உன் இளமைக்குத் துணையாக தனியாக வந்தேன்

நான் மலரோடு தனியாக ஏன் இங்கு நின்றேன்? - என்
மகராணி உனைக் காண ஓடோடி வந்தேன்

# உங்கள் மாதப்பலன் எப்படி?

(கடந்த வார தொடர்ச்சி)

மேலே குறிப்பிட்ட நாட்களுக்குள்பிறந்தவர்கள் மிக இயற்கையாகவே எதையும் உடனே புரிந்து கொள்ளும் தன்மை பெற்றவர்களாக இருப்பார்கள். இந்த அறிவை இவர்கள் புத்தகத்தைப் படிப்பதினாலோ கல்வியினாலோ பெறுவதில்லை. சரித்திரம், நாடுகள், உலகப் பயணம், ஆராய்ச்சி ஆகியவை பற்றி பொதுவான விடயங்களை மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பார்கள்.

பொதுவாக இவர்கள் இளகிய மனத்துடன் இருந்தாலும் மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டுத் என்ற தன்மையைப் பெற்றிருந்தாலும் பண விடயங்களைப் பொறுத்த வகையில் எப்போதும் ஆவல் மிகக் கொண்டு இருப்பார்கள்.

நாளை நம்முடைய நிலை என்ன ஆகுமோ என்ற கேள்வி இவர்களுக்குள் இருந்து கொண்டேயிருக்கும். பணத்தின் மீது உள்ள ஆசையினால் இவர்கள் இப்படி நடந்துகொள்வதில்லை. தம்மிடம் பணமில்லாவிட்டால் மற்றவர்களை நம்பி, மற்றவர்களின் உதவியை நாடி வாழ வேண்டுமே என்று எண்ணுவதால் தான் இவர்கள் பணத்தில் மிகுந்த கவனமும் ஆவலும் செலுத்துவார்கள்.

இந்தக் குணத்தை மிக இயற்கையாகவே இவர்கள் பெற்றிருப்பதனால் பலர் இவர்களைத் தவறாகப் புரிந்து கொள்வார்கள். பணத்தின் மீது மட்டும்தான் இவர்களுக்கு கண் என்று மற்றவர்கள் நம்பும்படி தோற்றமளிப்பார்கள். ஆனால் உண்மை பலருக்குத் தெரியாது.

பணத்தில் இவர்களுக்குப் பற்றுதல் இருப்பதால் துன்பத்தைப் பற்றியும் உலகம் முழுவதும் நமக்கு எதிராகக் கிளம்பி விட்டதைப் போலவும் எண்ணிக் கொள்வார்கள். இந்தச் சிந்தனையிலிருந்து இவர்களுடைய கருத்து அகலவே அகலாது. அதேநேரத்தில் இவர்கள் என்றும் இறவா வரம் பெற்றவர் களைப் போல் நடந்து கொள்வார்கள்.

இவர்களை நம்பி விட்ட

## பெப்ரவரி 20-மார்ச் 20ம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

பல விடயங்களில் இவர்கள் நன்மையாக நடந்து கொள்ளத் தவறி விடுவதுண்டு. ஏதாவது ஒரு சூழ்நிலையில் உணர்ச்சி வசப்பட்டு பணம் தருவதாகச் சொல்லி விடுவார்களே தவிர, அதைப் பற்றி எண்ணிப் பார்க்க மாட்டார்கள். அல்லது சொன்னத்தில் பாதியைத் தான் தருவார்கள்.

இவர்கள் மனத்தில் எப்போதும் ஆசை அலைகள், எழும்பியபடி இருக்கும். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரிந்தாலும் தாம் எடுத்துக்கொண்ட செயல் வெற்றியுடன் முடியும் என்று ஐயத்துடன் செயற்படுவார்கள். செயலில் இதற்கு முன் பல தடவைகள் சிந்திப்பார்கள்.

எப்போதும் இவர்கள் செயல்களில் இவர்கள் மிகவும் கடமை தவறாமலும் நடந்துகொள்வார்கள். எந்த வேலையை ஏற்றுக்கொண்டாலும் விடாப் பிடியுடனும் முழு மூச்சுட னும் அதைச் செய்து முடிப்பார்கள். பொறுப் புள்ள பணிகளை ஏற்றுச் செய்வதில்தான் இவர்கள் சிறப்புடன் விளங்குவார்கள்.

உலகத்தின் பெரும் ஓவியர்களுள் பலரும் பாடகர்களில் பலரும் இலக்கிய எழுத்தாளர்கள் பலரும் இந்தத் திகதிகளில் பிறந்தவர்களே! ஏற்றுக் கொண்ட தொழிலில் ஆதரவும் பாராட்டும் இருந்தால்தான் இவர்களால் தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடியும்.

(தொடரும்)

# பொழுதுபோக்கு

(நிமிடக்கதை)

அன்பானவர்களே இனிய ஞாயிறு வணக்கம். பிள்ளைகளுக்கெல்லாம் சோதினை முடிஞ்சுதாக்கும். விடுதலையும் விட்டாச்சுது. என்ன யோசிக்கிறியள். நான்தான் ஜிம்மிக் குட்டி கதைக்கிறன். இதெல்லாம் எனக்கெப்பிடித் தெரியும் எண்டு யோசிக்கிறியளோ. நான் நல்லாப் படிச்ச பெரியவர் வீட்டிலை தானே இருக்கிறன். எங்கடை கந்தையாண்ணை போன மாதம் லதாக் குட்டிக்குக் குடுத்த தக்காளி, கத்தரி, மிளகாய்க் கண்டுகள் அந்த மாதிரிச் செழிச்சு வளர்ந்து எவ்வளவு வடிவா நிக்குதுகள். சின்னவாளி, சின்ன மண்வெட்டி எல்லாம் வாங்கிக் குடுத்திருக்கினம். பிள்ளையும் நல்ல கவனம். புல்லுப்புடுங்கிப் பாத்தி கட்டித் தண்ணிவிட்டு அதையேன் பேசுவான் இண்டைக்குக் கந்தையாண்ணை எருப் போட்டுத் தண்ணி கட்டிறார். பெரியவர் கதிரையைப் போட்டுக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்.

"மகன் ! இலைச்சுருள் நோய், பூச்சி, அழுக்கணவன் பிடிக்காமல் சின்னக் கத்திரிக்கோலாலை கவனமா வெட்டி விடய்யா. பூக்கிற காலம் வருது–நோய் அணுகாமல் பார்க்க வேணும்..."

எப்பிடியும் லீவு முடியிறதுக்கிடையிலை தக்காளிக்காய் பால்கறி சாப்பிடலாம்போல.

"தாத்தா... கனகாம் பரக் கண்டெல்லாம் எப்பிடிப் பூத்திருக்குப் பார்த்தியளே. கண்பட்டிடும் எண்டு காவல் வெருளி வைச்சிருக்கிறன். நல்ல மாதிரி வடிவா இருக்கெல்லோ..."

ம்...வெருளி எண்டாலே சிரிப்புத்தான் வரும். ஆனால் பிள்ளை அதையும் வடிவாக் கிடக்குதெண்டு ரசிக்குது. பெரியவர் கைதட்டிப் பாராட்டி ரசிக்கிறார். ஒரு மரக்குத்திக்கு மேலை இரண்டு பற்றறி றேடியோ பாடிக் கொண்டிருக்கிறது. ஏன் தெரியுமோ...? பாட்டுக் கேட்டால் பயிர் விளைச்சல் கூடுமாம் எண்டு கந்தையாண்ணையின்ரை ஏற்பாடுதான். எனக்குப் பாட்டெண்டால் பிடிக்கும்.

"மெய்யே கந்தையா இப்பெல்லாம் மல்லியைத் தூவினால் முளைக்குதில்லை. என்ன பிரச்சினையப்பா...? மல்லிக் கீரை வயிற்றுப் பொருமல், மாந்தம் போல பிரச்சினைக்கு சம்பல், ரசம் வைச்சுச் சாப்பிட்டால் அருமை. ம்... மல்லியை அவிச்சுப் போட்டுஅனுப்புறாங்களோ?"

உண்மைதான். முந்தி பின் வீட்டுக்கார அப்பம்மா ரசம் கொதிக்க விட்டிட்டு மல்லிக் கீரைக்கு வாறவா. பூச்சட்டியளுக்கை மல்லி, இஞ்சி, றம்பை எல்லாம் பெரியவர் உண்டாக்கி வைச்சிருந்தவர். கேற் திறந்து சத்தம் கேக்குது... கார்ச்சாவியை சுழற்றிக் கொண்டு அந்த பாலாண்ணை வாறார்.

"என்ன சேர்...வீட்டுத் தோட்டத்தோடை பொழுது சந்தோசமாப் போகுது போல... நானும் போன கிழமை மழையோடை மரக்கறி, மூலிகைகள், வாழை எல்லாம் நாட்டியிருக்கிறன்... பிள்ளையளும் பின்னேரம்அதோடை பொழுது போக்கினம். ரியூசனுக்குஇப்பவிடுறேல்லை... பள்ளிக்கூடத்தாலை வந்து சங்கீதமும் டான்சும் மகள் படிக்கிறா. மகன் மிருதங்கம் படிக்கிறார். உண்மையிலை நல்ல சந்தோசமாப் பொழுது போகுது சேர். எல்லாம் உங்கடை அட்வைஸ்தான்".

பாலண்ணை தோட்டத்தைப் பார்க்கிறார். பெரியவரின் மகன் ரீ எடுத்துவர உள்ளுக்குப் போறார். பெரியவர் ஏதோ யோசித்தபடி...


"மெய்யே பாலா... மெயின் ரோட்டிலை ரியூசன் வகுப்பு முடிஞ்சு பிள்ளையள் எல்லாம் குறுக்கும் நெடுக்கும் ஓடி வாகனத்திலை அடிபடப் பார்க்குதுகள். எதிர்ப்பக்கத்திலை பிள்ளையை ஏத்திக்கொண்டு போகவாற பெற்றோர்... "வா...வா"... "பொறு... பொறு"... "நில்லு பிள்ளை அம்மா வாறன்" எண்டு ஒரே குழப்பமாக் குவிஞ்சு போய் ஒரே நேரத்திலை எல்லா வகுப்பும் ரியூசன் முடியப் பெரிய பயங்கரமாக் கிடக்குது ஐயா... பெற்றோரோ, ரியூட்டரியை நடத்திற நிர்வாகிகளோ, படிப்பிக்கிற ஆசிரியர்களோ, பாதுகாப்பு உத்தியோகத்தர்களோ, பொலிஸாரோ யாரும் பொறுப்பில்லாமல், பொறுப்பெடுக்காமல் ஏனோதானோ எண்டு நடக்கினம். இப்பிடி ஓடி ஓடிப் படிச்சும், படிப்பிச்சும் எங்கடை மாவட்டம் கல்வியில் பின்னுக்குத்தானே ஐயா நிக்குது. போக்குவரத்திலை ஒரு ஒழுங்குமுறை வேணும் தம்பி. பொது மக்களுடைய வாகனங்களுக்கு இது பெரிய இடையூறாகவும் பிள்ளைகளின்ர உயிருக்கு உத்தரவாதம் இல்லாமலும் இருக்கிற இந்த நிலை மாற வேணும். நிர்வாகத்தில் ஒருவர் வெளியிலை வந்து பிள்ளைகள் தெருவைக் கடக்க ஏதாவது செய்ய வேணும். அல்லது பாதுகாப்பு ஊழியரை அமர்த்தி அதை நடைமுறைப்படுத்த வேணும். ம்...வாருங்கோ உள்ளுக்கை போய்க் கதைப்பம்..." ம்... நல்ல ஒரு விசயம் சொல்லி இருக்கிறார். பொறுத்திருந்து பார்ப்பம். சரி...போட்டு வாறன்.

பாரதி கணேஷ்
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Fidaa

## திரைவிமர்சனம்



மலரே புகழ் சாய் பல்லவி முதன்முதலாக தெலுங்கில் நடித்திருக்கும் படம் Fidaa. சேகர் கம்முல்யா இயக்கியிருக்கும் இப்படத்தில் வருண் தேஜ் நாயகனாக நடித்திருக்கிறார். தற்பொழுது வெளியாகி இருக்கும் இப்படம் எப்படி இருக்கிறது வாங்க பார்ப் போம்.

காதல், பிரிவு, மீண்டும் காதல் இது வழக்கமாக படங்களில் இருப்பது தான். USA வில் படித்து வரும் வருண் (வருண் தேஜ்) தனது அண்ணனின் திருமணத்திற்காக இந்தியா வருகிறார். வந்த இடத்தில் அண்ணன் திருமணம் செய்துகொள்ள போகும் அண்ணியின் தங்கை பானுமதி (சாய் பல்லவி) மீது காதலில் விழுகிறார்.

சில விடயங்களால் திருமண முடிவில் வருண், பானுமதி இடையில் பிரிவு ஏற்படுகிறது. கடைசியில் இவர்கள் ஒன்று சேர்ந்தார்களா இல்லையா என்பது கதை.

தெலுங்கு மொழி தெரியாத சாய் பல்லவி தெலுங்கானா உச்சரிப்பில் அசத்தியுள்ளார். வழக்கமான கிராமப்புற பாணியில் காமெடிகள் இடம்பெற்றிருக்கிறது. வருண், சாய் பல்லவி தங்களுக்கு கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தில் அழகாக நடித்துக் கொடுத்துள்ளனர். சாய் பல்லவியின் தெலுங்கு உச்சரிப்பு, புடைவையில் ரசிகர்களை கவர்ந்திருக்கிறார். முதல் பாதியில் வரும் காமெடி காட்சிகள். இரண்டாம் பாதி கொஞ்சம் மெதுவாக செல்கிறது. முதல் பாதியில் இருந்த காமெடி இரண்டாம் பாதியில் சுத்தமாக இல்லை.

மொத்தத்தில் மலர் டீச்சருக்காகவே இந்த படத்தை திரையில் பார்க்கலாம்.


# உறுதியான அதியுச்ச பலம்...






- இலங்கையின் முதற்தர சீமெந்தும், இலங்கையின் சீமெந்து சந்தையின் விற்பனையில் கூடிய பங்கை தன்னகத்தே கொண்டிருக்கும் சீமெந்து Insee சீமெந்து நிறுவனமாகும்.
- திருப்திகரமான நிறமும் SLS தரச்சான்றிதழும் கட்டட நிர்மாண துறையின் சான்றிதழ் பெற்ற முதற்தர சீமெந்து
- உறுதிமிக்க எதிர்காலத்தை கருத்திற் கொண்டு வடபகுதி மக்களுக்கென பிரத்தியேகமாக மிகஉயர் தரமும் நியாயமான விசேட கழிவுடன் கூடிய விலையும் வழங்குகின்றது.
- பல மாடிக் கட்டடங்கள், நீர்த் தேக்கங்கள், பாலங்கள், கொங்கீரீட் பாதைகள் போன்ற பலதரப்பட்ட வேலைகளுக்கு பாவித்து வெற்றிக் கண்டிருக்கும் உறுதியான சீமெந்து வட பகுதியிலும் தனது விற்பனையை ஸ்திரப்படுத்தியுள்ளது.
- நாம் சிறந்த பொறியியலாளர், நான் சிறந்த மேசன், நான் சிறந்த கட்டிட தொழிலாளி, நான் சிறந்த தெரிவாளன் என்ற சிந்தனை உடையவர்களின் தெரிவு மகாவலி மெரின் சீமெந்து, மகாவலி மெரின் Plus, சீமெந்து மாத்திரமே
- தற்போது வடபகுதி சந்தையில் பரவலாக விற்கப்படுவதால் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்.



**வட மாகாண விநியோகஸ்தர்கள்:**
**நாதன் ஹாட்வேயார், ஸ்ரான்லீ வீதி, யாழ்ப்பாணம். 0777110164**
**டினு மல்ரீ, கட்டுவன் வீதி, ஏழாலை. 0777582824**

பலமான எதிர்காலத்தை உருவாக்குவோம்...

INSEE CEMENT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்






பிக்போஸ் பிரச்சினை தான் தற்போது தமிழகத்தில் பெரும் சர்ச்சையை உண்டாக்கியுள்ளது. இதில் நேற்று முன்தினம் ஓவியா தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்று தான் தகவல்கள் வந்தன. அதைத் தொடர்ந்து அவர் வெளியேறி விட்டார் என்றும் கூறி வந்தனர். ஆனால், உண்மையாகவே பிக்போஸ் வீட்டிற்குள் ஏதோ நடந்துள்ளது. அதனால் தான் பொலிஸார் வந்து விசாரணை நடத்தி சென்றுள்ளனர். பொலிஸார் வந்த புகைப்படங்களும் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது.



பிக்போஸ் நிகழ்ச்சியில் மக்களால் மிகவும் வெள்ளந்தி மனிதராக அறியப்பட்டவர் பரணி. இவர் மற்றவர்களால் கார்னர் செய்யப்பட்டதை தொடர்ந்து சுவர் மீது ஏறி குதிக்க முயற்சி செய்து வெளியேறினார். இவர் தற்போது வெளியே வந்தது பற்றி பேட்டியளித்தார். இதில் அனைவரும் தவறாக பேசியதை பொறுக்க முடியாமல் வெளி-யேறினேன் என்றார். மேலும், ஒவ்வொருவர் பற்றியும் சில வார்த்தைகள் கேட்டதற்கு, அவர் கூறிய பதில் இதோ.

1. சினேகன் - ஆடாத ஆட்டமெல்லாம் போட்டவங்க மண்ணுக்குள்ள, அவர் எழுதிய வரி அவருக்கு பொருந்தும்.
2. சக்தி - வீட்டில் வளர்க்கும் அழகுச்செடி எப்போதும் ஆலமரமாக முடியாது.
3. ஆரவ் - கூட்டத்தை பார்த்து ஒத்து ஊதுறவர்
4. ஓவியா - எந்த சலசலப்புக்கும் அஞ்சாத பனங்காட்டு நரி.
5. காயத்ரி - ரொம்ப ஓவரா ஆட்டம் போடுறவங்க
6. ஜூலி - இன்னொரு வீட்டுக்கு போன தங்கச்சி எப்படி நடந்துக்குமோ அப்படி.
7. ரைசா - செயற்கை எப்போதும் இயற்கையாக முடியாது.
8. வையாபுரி - அனுபவம் வாய்ந்த ஜிங்சாங்
9. கணேஷ் - ஹைபிரிட் முட்டை.
10. நமீதா - சுத்தம் என்பது பாத்ரூமில் இருந்தால் மட்டும் போதாது மனதில் இருக்க வேண்டும்.
11. ஆர்த்தி - மாமியார் ஒடச்சா மண்சட்டி, மருமகள் ஒடச்சா பொன் சட்டினு சொல்ற கதாபாத்திரம்.
12. பரணி - ஒவ்வொரு வீட்டிலும் என்னைப் போல் ஒருவன் இருப்பான்.
13. கஞ்சா கருப்பு - எல்லா தெருவிலும் இப்படி ஒரு கதாபாத்திரம் இருக்கும். இதற்கு மேல் என்னால் வெளிப்படையாக சொல்ல முடியாது.



ஆரவ்வை காதலிப்பதாக பிக்போஸ் நிகழ்ச்சி தொடங்கியதில் இருந்தே கூறிவருகிறார். ஆனால் அவரை தொடர்ந்து புறக்கணித்து வந்த ஆரவ் சமீபத்தில் உன்னை நான் எப்போதும் காதலிக்கமாட்டேன் என கூறிவிட்டார்.

அப்போதிருந்து ஓவியா அடிக்கடி விசித்திரமாக நடந்துகொள்கிறார். ஜூலியை திட்டிதீர்த்த ஓவியா, காலை எழுந்ததும் எதுவும் நடக்காதது போல அவரை அழைத்து "பாட்டு பாடு" என கூறி நோர்மலாக பேசினார்.

பொய் சொன்னா உன்னை செஞ்சிடுவேன்.. எதுவும் பாக்கமாட்டேன்... என திட்டிவிட்டு, காலையில் இப்படி பேசுறா.. இனிமே இப்படி நடந்தா அவ்வளவுதான்.. என்ன பண்ணுவேன்னு தெரியாது" என கோபத்தில் ஜூலி மற்றவர்களிடம் கூறி புலம்பினார்.



பிக்போஸ் நிகழ்ச்சியில் கடந்த சனிக்கிழமை போட்டியாளர்களுக்கு ஒரு டாஸ்க் கொடுக்கப்பட்டது. அதில் ஒருவர் மற்ற போட்டியாளர்களை போல நடித்து காட்ட வேண்டும். அதன்படி ரைசாவை போல ஓவியா நடித்து காட்டினார். அப்போது ரைசாவின் காதலர் பெயரையும் குறிப்பிட்டார். மேலும் எனக்கு செல்போன் வேண்டும் எனது போய் பிரண்ட் வெளியே காத்திருப்பார் என்றும் சொல்லி இருந்தார். தனது காதலர் குறித்த தகவல் வெளியானதால் ரைசா அதிர்ச்சி அடைந்தார். இதனால் கதறி கதறி அழுதார்.
இந்த நிலையில், ரைசாவின் காதலர் குறித்த தகவல் தெரியவந்துள்ளது. அவரது பெயர் தருண். இவர் ஒரு போட்டோ கிராபர். ரைசா விளம்பர படங்களில் நடித்தபோது போட்டோ கிராபராக பணியாற்றியபோது அறிமுகமானார். இந்த பழக்கம் நாளடைவில் காதலாக மாறியது. இருவரும் காதலிக்க தொடங்கினர். தற்போது இவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து இருப்பதாக கூறப்படுகிறது. இதனை அவரே 3வது எபிசோட்டில் கூறி இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய பிக்போஸ் மீம்ஸ்









ஓவியா தான் தற்போது தமிழகத்தில் ஹாட் டாபிக். பிக்போஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள ஓவியா தற்கொலை முயற்சி செய்தார் என்று ஒரு தகவல் வெளிவந்தது. இதை தொடர்ந்து சமூக வலைத்தளமே பரபரப்பானது, பலரும் ஓவியா மருத்துவமனைக்கு கொண்டு சென்றது உண்மை தான் என கூறினார்கள்.

இதுகுறித்து விசாரிக்கையில் ஓவியா மருத்துவமனை சென்றது உண்மை தான், அதனால், தான் நேற்றைய ப்ரோமோ கூட வரவில்லை.
ஆனால், அவர் தற்கொலை முயற்சியெல்லாம் எடுக்கவில்லை, சில மன அழுத்தம் காரணமாக உடல்நலம் முடியாமல் இருந்துள்ளார்.

இதனால், அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார், மீண்டும் ஓவியா போட்டியில் பங்கேற்பார், அதுவும் அவர் கையில் தான் உள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.



பிக்போஸ் நிகழ்ச்சியில் மிகவும் பரபரப்பான சூழல் நிலவியது. ஓவியா ஒரு நிலைக்கு மேல் மன அழுத்தம் தாங்க முடியாமல் நீச்சல் குளத்துக்குள் மூழ்கி தற்கொலைக்கு முயன்றார்.

இந்நிலையில் பிக்போஸ் வீட்டிலிருந்து வெளியேறிய ஆர்த்தி, கோடிக் கணக்கான ரசிகர்களின் நம்பிக்கை வீண் போகாது. ஓவியா டார்லிங் மீண்டும் நல்ல உடல்நலத்தோடு திரும்பி வருவார் என்ற நம்பிக்கையோடு இருப்போம் என்று டுவிட் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# ஒருநாள் கல்லூரியில்



ஒருநாள் என் கல்லூரியில் இருந்து அழைப்பு வந்தது. அது எங்கள் பட்டமளிப்பு வழங்கும் நிகழ்ச்சியின் அழைப்பு ஆகும். அந்த அழைப்பு வந்த மறுநாள் எங்களுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற இருந்தது.

அன்று முழுவதும் எனக்கு தூக்கம் இல்லை நான் எப்போது விடியும் என்று விழி மூடாமல் விழி திறந்து காத்துக்கொண்டு இருந்தேன். விடிந்தது இரவு, வந்தது காலை. நான் எப்போதும் கல்லூரிக்கு செல்வது போல் இரண்டு ஆண்டுகள் கழித்தும் அ[illegible] நேரத்தை பின்பற்றி விட்டேன்.

நான் கல்லூரி பேருந்திற்காக காத்துக்கொண்டு இருந்தேன். என் கல்லூரி பேருந்தும் வந்தது. நான் என் இடத்தில் அமர்ந்தேன். நான் ஒரு ஜன்னல் ஓர ரசிகன். எனவே அன்றும் ஜன்னல் ஓரத்தில் அமர்ந்தேன். பேருந்து செல்ல தொடங்கியது. நான் கண்டு ரசித்த என் பழைய நினைவுகள் எல்லாம் மீண்டும் என்னை பின்தொடர்ந்தது. நான் என் பழைய நினைவுகளுடன் என் கதையை பின் தொடர்கிறேன். பிடித்திருந்தால் நீங்கள் என் கதையின் ,வரிகளுடன் என்னை பின் தொடருங்கள்.

என் கல்லூரி கிராமத்திற் கும், நகரத்திற்கும் இடைபட்ட ஒரு கல்லூரி. எனவே அங்கு கிராமப்புற இயற்கை எழிலுடன் எப்போதும் இயங்கி கொண்டே இருக்கும். நான் அதனை ரசித். துக் கொண்டே இருப்பேன். அதனால் தான் அதனை இன்றும் ரசித்து விட்டு வந்தேன்.

ஒரு வழியாக நான் என் கல்லூரிவந்து அடைந்தேன். இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்பு இன்று மீண்டும் என் கல்லூரி வாயிலில் நுழைந்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன் மூடிவைத்த ஒரு தனி சுவாசக் காற்று இன்று திறந்தது போல நான் அதனை அங்கு உணர்ந்தேன்.

பிறகு நான் என் கல்லூரியில் என் வகுப்பு அறைக்கு சென்றேன். அங்கு யாரும் இல்லாமல் நான் மட்டுமே என் வகுப்பு அறையில் நுழைந்தேன். அப்போது தான் ஒரு அதிசயத்தை கண்டேன்.

எங்கள் அறைகளில் நானும் என் நண்பர்களும் ஒன்றாக சேர்ந்து கிறுக்கிய கிறுக்கல்களும், ஓவியமும், பெயரும், கவிதையும் அது எல்லாம் எங்களை விட்டு அழியவில்லை. அப்படியே இருந்தது. உள்ளேசென்றநான்அதனை கண்டு அங்கு உறைந்து நின்றேன், உருகமுடியவில்லை.

இறந்த பிறகும் வாழும் சில உயிர்களை கண்டுள்ளேன், ஆனால் அதனை இன்று தான் முதல் முதலில் இங்கு கண்டேன். செதுக்கப்பட்ட என் ஜன்னல்களும், என் மேசைகளும் இன்று என்னுடன் பேசுகின்றது. நான் பேசி சென்ற கதைகளை எல்லாம் மொத்தமாக சேர்த்து. அப்போது என் இதயத்தை தொட்ட என் நினைவுகளை கொடுத்த என் இடத்தில் என் இதழ்களால் முத்தமிட்டேன்.

தனியாக உள்ளே சென்று இருந்த நான் அப்போதுதான் என்னை தவிக்க வைத்த ஒரு நிழலினைக் கண்டேன். உணரவில்லை என்று என் உதடுகள் சொன்னால் உடனே என் உள் மனம் சொல்லும் அது பொய் என்று. அதனால் உண்மையை சொல்லிவிடுகிறேன்!. அது என் காதல் நினைவுகள் தான்.

என் காதலின் முதல் வரியை சொல்லத் தொடங்கினால் முழு ஆண்டும் போதாது. ஏன் தெரியுமா? அது என் முதல் காதல், முகத்தில் மீசை அரும்பியபோது அன்பென்று கிடைத்த காதல் அதுவே, அது மட்டுமே.

பிறகு சில நாழிகை கழிந்த பிறகு என் நண்பர்களையும், அவர்களின் பெற்றோர்களையும் கண்டேன். கடலில் தவறிய தவம் ஒன்று கண் எதிரே கண்டேன். அதுதான் என் நட்பு. ஆயிரம் நட்புகளை கடந்து வந்தபோதும் கல்லூரி நட்பினை போன்று நான் எதையும்இதுவரை கண்டதில்லை. அதனை மீண்டும் இப்போது காண்கிறேன். ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்ட காலம் மறைந்து, இன்று ஒருவர் ஒருவரை அறிமுகப்படுத்தும் அளவில் நாங்கள் வளர்ந்து இருந்தோம். விழிகள் தொலைத்த என் நண்பர்களை எல்லாம் இன்று விதி சேர்த்தது என்று நினைத்துக் கொண்டு பேச தொடங்கினோம், எங்கள் நினைவுகளை.

எங்கள் நினைவுகளை. முழுவதும் பேசத் தொடங்கினால் நேரம் போவதே தெரியாது. ஆனால் நெருங்கிவிட்டோம் எங்களுக்கு பட்டம் அளிக்கும் நேரத்தினை.


வானில் பறக்கும் பட்டத்தினை வியந்து பார்த்த நாங்கள் இன்று எங்கள் வாழ்வில் பட்டத்தைப் பெற்றுவிட்டோம்.

ஆண்,பெண் என்ற இனம் மறந்து நாங்கள் எல்லாம் இன்று மாறிவிட்டோம் மாணவர்கள் என்று. மதம், இனம் போன்ற எல்லாம் சேர்ந்து மறைந்தது என்றும் போலவே இன்றும்.

பிறகு நாங்கள் பிரிய வேண்டிய நேரமும் எங்களை நெருங்கிவிட்டது. விதியே மறக்க செய்தாலும் இனிமேல் எங்கள் விழி மறக்காது. நாங்கள் ஒருநாள் கல்லூரியில் ஒன்றாக .விரல் பிடித்து நின்ற அந்த நேரங்களை...

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1154

## றொகான்




## குலசீலன் தர்சன்




## அஜந்தன்




## நிக்சன்



## நிமல்ராஜ்




## சுவேந்திரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 96

## வாழைப்பழங்கள் மனிதனுக்கு ஆற்றலையும் சக்தியையும் கொடுக்கும்



வாழை ஒரு மரவகையைச் சேர்ந்ததல்ல. அது தாவர வகையைச் சேர்ந்தது. பூண்டுத் தாவரங்கள் சேர்ந்த பேரினம். உலகிலேயே பெரிய தாவரம் வெப்பம் மிகுந்த ஈரலிப்பான காலநிலை யிலேயே இது வளருகின்றது.

உலகில் எல்லாப் பாகங்களிலும் எல்லா நேரங்களிலும் விலைகுறைவான அதே வேளை எல்லாச் சத்துக்களும் நிறைந்த பழம் வாழைப்பழமாகத்தான் இருக்கும். எமது சமூகத்தில் குழந்தைகளுக்கு முதல் ஊட்டும் பழம் அதிகமாக வாழைப்பழ மாகத்தான் இருக்கின்றது. எனவே சிறியோர் முதல் பெரியோர் வரை பயன் படுத்தக்கூடிய இலகுவில் ஜீரணிக்கக்கூடிய கட்டமைப்பைக் கொண்டுள்ள பழம் வாழைப்பழம் ஆகும். இதில் காணப் படும் பிரக்ரோசும் குளுக்கோசும் உட லுக்கு உடனடியாகவே ஆற்றலையும், சக்தியையும் கொடுக்க வல்லவை.

### வாழைப்பழத்தைப் பற்றிய சில தகவல்கள்

- வாழைப்பழம் ஒரு மனிதனுக்கு கிடைக்கும் ஊட்டச்சத்து மட்டுமல்ல. நோய்கள் வராமல் தடுக்கக்கூடிய நோய்த் தடுப்பு நாசினியும் கூட. இன்றைய வி னிகளும் சத்துணவு நிபுணர்களும் உல கில் தரமான உணவு வாழைப்பழம் என பரிந்துரை செய்கிறார்கள்.
- நமது மூளை அமைதியடைய செராடோனின் என்னும் கூட்டுப்பொருள் தேவை. இந்த செராடோனின் உற்பத் தியாவதற்கு காரணமாக ட்ரைப்டோபன் **(Triptoptan)** என்கின்ற அமினோ அமி லம் உள்ளது. இந்த **Triptoptan** வாழைப் பழத்தில் ஏராளம் உள்ளது.
- வாழைப்பழம் உலர்ந்து சருமத் துக்கு மிகுந்த ஈரப்பதனை அளிக்கக் கூடி யது. இதில் காணப்படும் பொட்டாசியம் மூளையின் செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கச் செய்கிறது.
- எல்லாக் காலநிலைகளிலும் கிடைக் கும் பழம் வாழைப்பழம். இதர ஏனைய பழங்களைப் போல் இது வாழை மரத்தி லேயே சரிவரக் கனிவதில்லை. அவை காயாக இருக்கும்போது குலை வெட்டப்ப டுகிறது. பழுக்கவைக்கப்படுகின்றன. இதன் காரணமாக வாழைப்பழத்தை வெகுதூரமான இடங்களுக்கு அனுப்புவது சாத்தியமாகிறது.
- வாழைப்பழத்தில் பல ஊட்டச்சத் துக்கள் பரவலாக அடங்கி இருந்தாலும் பொட்டாசியத்தைத் தவிர்ந்த வேறு எந்த தனிப்பட்ட மிகுந்த அளவில் இல்லை. இந்தத் தாது உப்பு, மற்றத்தாது உப்புக் களைப் போல் உடல் நலத்துக்கு மிகவும் இன்றியமையாதது. வாழைப்பழத்தில் சோடியம் சத்து மிகவும் குறைவு. சோடியம் அற்ற உணவாகவும் உப்பு, கொழுப்பு அற்ற உணவாகவும் வாழைப்பழம் காணப்படுகின்றது. இதனுடைய மென் மையான கட்டமைப்புக் காரணமாக இருதய நோயாளிகள், உயர்குருதிய முக்கம். வயிற்றுப்புண் மற்றும் மலச்சிக் கல் போன்ற நோயாளிகளுக்கு இது சிறப்பான உணவாகும்.
- வாழைப்பழத்தில் மிதமான கலோ ரியே அடங்கியிருப்பதால் இதனை உண்பவருக்குச் சிறந்த திருப்தியை அளிக் கின்றது.
- பழுக்காத வாழைக்காயில் கார்போ வைதரேற் மாப்பொருள் வடிவில் உள் ளது. நன்கு பழுக்கவைக்கும் போது இந்த மாப்பொருள், சுக்குரோஸ், குளுக்கோஸ், பரக்ரோஸ் போன்ற வெல்லங்களாக மாற்றமடைகின்றது. நன்கு பழுத்த வாழைப்பழத்தைச் சாப்பிடும்போது இந்த வெல்லங்களின் ஒரு பகுதி உடனடியாக எமது உடலால் உட்கவரப்படுகிறது. அடுத்த 15 நிமிடங்களிலேயே குருதியில் வெல்லமட்டம் அதிகரிப்பதை அவதா னிக்கலாம். மீதி உணவுப்பகுதி சற்று மெதுவாக உடலால் உட்கவரப்படுகிறது. இது சற்று நீண்ட நேரத்திற்கு உடலுக்கு வேண்டிய ஆற்றலைக் கொடுக்கிறது. எனவே களைப்பான நேரங்களில் வாழைப்பழங்களை உண்டால் உடலும், மனமும் சுறுசுறுப்பாக இயங்குகின் றன.

வாழைமரங்கள் எமது மண்ணில் இலகுவாக செழித்து வளரக்கூடியவை. எனவே வீடுகள் தோறும் வாழைமரங் கள் நாட்டி பயன்பெறுவோம்.

திரு.S.சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.



## விபத்துக்களை குறைக்கும் எளிய நடைமுறை



90 சதவீதமான வீதி விபத்து மர ணங்கள் வேகமாக வாகனங்கள் செலுத் துவதாலேயே ஏற்படுகிறது. வாகனத்தை மெதுவாகச் செலுத்துவோம். விபத்துக் களை தவிர்த்துக் கொள்வோம்.

வாகனத்தின் வேகத்தை அதிகரித்து சில நிமிடங்களை சேமிக்க நினைக்கும் நாம் பல நாட்கள் அல்லது மாதங்கள் படுக்கையில் இருக்க நேரிடும். விபத் துக்களைப் பற்றி சிந்திக்கத் தவறி விடுகிறோம்.

எவ்வளவு மெதுவாக வாகனத்தை செலுத்துகின்றோமோ அவ்வளவுக்கவ் வளவு விபத்துக்களையும் விபத்தின் தீவிரத்தன்மையையும் குறைத்துக்கொள்ள லாம்.

வீதிகளில் நாம் காட்டும் அவசரம் பல உயிர்களை பறித்து பலரை அங்க வீனமாக்குகிறது. வீதிகளில் தேவையாகி நிற்பது வேகமல்ல. விவேகமும் நிதான முமே.

-யாழ் மருத்துவக்குழு-



மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org